# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 22 மார்கழி 02ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 18 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு வரும்

### வெற்றிக் கொண்டாட்டத்தில் ரணில் உறுதிபடத் தெரிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 18

இந்த நாட்டில் நல்லிணக்கம், சக வாழ்வு மற்றும் அரசியல் தீர்வின் அவசியம் கருதி ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டு பிளவுபடாத நாட்டில் அரசியல் தீர்வைக் கொண்டுவருவோம். ஒற்றையாட்சியில் இருந்து நாங்கள் விலக மாட்டோம்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். » 25

## ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

கொழும்பு, டிசெ.18

இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் தொடர்பாக, நாட்டின் அரசமைப்புக்கு அமைவாக மேற்கொண்ட அமைதியான, ஜனநாயகத் தீர்மானத்தை இலங்கையின் நிலையான நண்பன் என்ற வகையில் வரவேற்கின்றோம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் மீளெழுதலைப் போற்றுவதுடன், இலங்கையின் தேசிய » 22


கோப்புப்படம்

## பொன்னாலை ரதோற்சவம் இன்று

பொன்னாலை, டிசெ.18

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி ப்ரம்மோற்சவத் தேர்த் திருவிழா இன்று காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. » 22

## ஐ.தே.கட்சி எனில் புலிகள் மகிந்தவுக்கு பூனைகளா?

### முஜிப்பூர் எம்.பி. கொதிப்பு

கொழும்பு, டிசெ.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் பேச்சு நடத்தினால் புலிகள். மகிந்த ராஜபக்ச பேச்சு நடத்தினால் பூனையா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிப்பூர் ரகுமான்.

ஜனநாயகத்தை வெற்றி கொண்டதைக் கொண்டாடுவோம் என்ற தொனிப் » 23

## பௌத்த சிங்கள வாக்குக்காக துவேசம் கக்குகிறார் மைத்திரி

### அவரது உரை தொடர்பில் வடக்கு மக்கள் சீற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 18

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்பார்த்த ஆட்சி மாற்றம் நடக்கவில்லை. அரச தலைவர் தேர்தலில் மீண்டும் களமிறங்குவதற்காக சிங்கள பௌத்த வாக்கு வங்கியை இலக்கு வைத்து செயற்படத் தொடங்கியிருக்கிறார்.

குற்றங்கள் செய்யாது சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளையும், இராணுவத்தினரையும் ஒரே தராசில் நிறுத்திப் பார்ப்பது முதலில் நியாயமா என்பதை மைத்திரிதான் சொல்ல வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண மக்கள் » 25

## அரசியல் கட்சியாக மாறவுள்ளது ஐ.தே.மு.

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

கொழும்பு, டிசெ.18

அனைத்து மக்களின் அடிப்படை உரிமைகள், நாட்டின் ஜனநாயகத்தை உறுதி செய்வதற்காக எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்து களமிறங்குவோம். தேசிய ஜனநாயக முன்னணி எனும் பெயரில் பெரும் கூட்டணியாகப் போட்டியிடுவோம்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு, காலிமுகத் திடலில் நேற்று மாலை ஜனநாயகத்தை வெற்றி கொண்டதைக் கொண்டாடுவோம் என்ற தொனிப்பொருளில் மக் » 04

## மாற்றங்களின் பின்னர் இன்று கூடுகின்றது நாடாளுமன்றம்

### எதிர்க்கட்சித் தலைவர் பதவி சர்ச்சையை ஏற்படுத்தலாம்

கொழும்பு, டிசெ.18

அரசியல் நெருக்கடிகளுக்குப் பின்னர் மீளத் தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட பின்னர் இன்று நாடாளுமன்றம் கூடுகின்றது. இன்று கூடவுள்ள நாடாளுமன்ற அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் » 22

## எதிர்க்கட்சி வரிசையில் சுதந்திரக் கட்சியினர்!

கொழும்பு, டிசெ.18

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 21 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணையப் போவதில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற » 22

## போர்க்குற்றத்தை விசாரியுங்கள் மன்னிப்பை பின்னர் பார்க்கலாம்

### அரச தலைவர் கூறியது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் கருத்து

யாழ்ப்பாணம், டிசெ. 18

போர்க்குற்றம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். அதைச் செய்வோம் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அரசு வாக்குறுதி வழங்கியுள்ளது. விசாரணை முடிந்த பின்னர் குற்றவாளிகளைத் தண்டிப்பதா? மன்னிப்பதா? என்பதைப் பின்னர் பார்ப்போம்.

இவ்வாறு தமிழ் அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகப் பத » 25

## விபத்தில் காயமடைந்த 16 வயதுச் சிறுவன் சாவு

முல்லைத்தீவு, டிசெ.18

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் நடந்த விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த சிறுவன் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று, இந்த முறை » 22

## தமிழ்க் கூட்டமைப்புடன் உடன்பாடு எதுவுமில்லை

### பொன்சேகா எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.18

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது என்று சிலர் போலிப் பரப்புரை செய்கின்றனர். அவ்வாறு எந்த உடன்படிக்கையும் செய்யப்படவில்லை. ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே » 24

## அரசியல் குழப்பத்தால் நிறுத்தப்பட்ட பலாலி வானூர்தித்தள அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிக்க முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 18

பிராந்திய வானூர்தி நிலையமாக பலாலியைத் தரமுயர்த்தும் பணிகளை விரைந்து மீண்டும் ஆரம்பிப்பதற்கு நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே திட்டமிட்டவாறு இலங்கை அரசின் ஆயிரம் மில்லியன் ரூபா நிதியில் ஆரம்ப அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பது என்றும், அடுத்த கட்ட அபிவிருத்திப் பணிகளை இந்திய அரசின் ஊடாக முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குக்கான அரச தலைவர் சிறப்புச் செயலணியின் கூட்டம், அரச தலைவர் செயலகத்தில் நேற்று மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரை நடை » 06

# தற்போதுள்ள அரசை நிச்சயம் கவிழ்ப்போம்

## நினைக்காத நேரத்தில் நடக்கும் என்கிறார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச



**கொழும்பு, டிசெ. 18**

**தற்போது அமைக்கப்பட் டுள்ள அரசை நிச்சயம் கவிழ்ப்போம். அவர்கள் நினை யாத நேரத்தில் விரைவில் அது நடக்கும் என்று தெரிவித்தார் முன்னாள் அரச தலைவரும், முன்னாள் தலைமை அமைச்சருமான மகிந்த ராஜ பக்ச.**


கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டு அந்த இடத்துக்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டார்.

எனினும் மகிந்த தலைமை அமைச்சராகச் செயற்படுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் டிசெம்பர் மூன்றாம் திகதி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது. இந்தத் தடை ஜனவரி மாதம் வரையில் தற்போது நீடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறன பின்னணியில் தானாகவே முன்வந்து கடந்த சனிக்கிழமை பதவி விலகினார் மகிந்த. நேற்று தங்காலை கார்டன் இல்லத்துக்குச் சென்றார்.

அங்கு தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு பதவியைக் கொடுத்துவிட்டு வந்தேன். அது பெரிய விடயம் இல்லை. மக்கள் என்னோடு இருப்பது எனக்குத் தெரியும். இந்த அரசு பெரும்பான்மையை நிரூபித்துள்ளது. எனவே அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேநேரம் அவர்களிடமிருந்து நாட்டை காப்பதற்காக மீண்டுமொருமுறை அவர்களது ஆட்சியை அவர்கள் நினைக்காத நேரத்தில் கவிழ்ப்போம்" என்று மகிந்த மேலும் தெரிவித்தார். (ம)



நன்றி : நாமல் அமரசிங்க.

## பன்னாட்டு அரங்கில் மகிந்தவுக்கு அவமானம் மைத்திரி, பசில், கோத்தாவே முழுப்பொறுப்பு

### குமார வெல்கம குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 18

"இலங்கையின் அரசமைப்பை மீறி குறுக்கு வழியில் தலைமை அமைச்சராகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ச இன்று அவமானப்பட்டு நிற்கிறார். இங்கு மட்டுமல்ல பன்னாட்டு அளவில்கூட அவர் அவமானப்பட்டுள்ளார். இதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், மகிந்தவின் சகோதரர்களான பசில் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச ஆகியோருமே முழுப்பொறுப்பு" என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போதிலும் அண்மையில் நடைபெற்ற அதிகாரப் போட்டியில் மகிந்த தரப்பைக் கடுமையாகச் சாடிவந்தவர் குமார வெல்கம. தற்போது அவர் மீண்டும் காட்டமான கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளார். சிங்கள ஊடகமொன்றுக்கு நேற்று வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அரச தலைவர் பதவியில் பேராசை பிடித்த இம்மூவரும் (மைத்திரி, பசில், கோத்தா) தங்கள் சுயநல அரசியலுக்காக மகிந்தவை பலிக்கடாவாக்கியுள்ளனர். இந்த அனுபவம் மகிந்தவுக்கு இனிமேல் நல்லதொரு பாடமாக இருக்கவேண்டும். கடந்த அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச படுதோல்வியடைய இம்மூவருமே காரணம்.

தன்னுடன் முதல் நாள் இரவு ஒன்றாக இருந்து அப்பம் சாப்பிட்டுவிட்டு மறுநாள் முதுகில் குத்திவிட்டு கட்சியிலிருந்து வெளியேறி அரச தலைவர் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்கி பெற்றிபெற்ற மைத்திரியின் படுதுரோகமான செயலை மறந்து அவருடன் ஏன் மகிந்த கைகோர்த்தார் என்று இதுவரை எனக்குப் புரியவில்லை. இனிமேலாவது குறுக்கு வழியைக் கைவிட்டு மக்கள் ஆணையின் பிரகாரம் பதவியில் அமர மகிந்த அணியினர் தீர்மானிக்க வேண்டும். நாட்டின் அரசமைப்பை மதித்து அவர்கள் செயற்பட வேண்டும்" என்றார். (ம)

## இலங்கையின் அரசியல் பின்னணியில் பன்னாட்டு புலனாய்வு அமைப்புக்கள்

### கண்டுபிடித்தார் கம்மன்பில


கொழும்பு, டிசெ. 18

இலங்கையின் அரசியல் நெருக்கடியில், அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பு (சிஐஏ) மற்றும் பிரிட்டனின் எம்16 புலனாய்வு அமைப்பு என்பனவற்றின் தலையீடுகள் இருந்தன என்று மகிந்த ராஜபக்ச அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றம் சாட்டியுள்ளார்.

பிரிட்டனின் தி கார்டியன் இதழில் வெளியான செய்தி ஒன்று தொடர்பில் பதிவிட்டுள்ள கருத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சிஐஏ, எம்16 போன்ற வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளுக்கு எதிராக நாங்கள் போரிட்டோம். இது ஒரு கடுமையான போர் என்பது எங்களுக்குத் தெரியும். நாடாளுமன்றத்தில் எங்களுக்குப் பெரும்பான்மை இல்லை என்று சபாநாயகர் அறிவித்தபோது, அங்கிருந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆரவாரம் செய்தனர். அவர்கள் அனைவரும் இப்போது நன்றாக உறங்க முடியும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)






## நாமல் ராஜபக்சவின் கீச்சகத்தில் சர்ச்சைக்குரிய கேலிச் சித்திரம்!

கொழும்பு, டிசெ. 18

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட அதிகாரப் போர் தொடர்பாக சர்ச்சைக்குரிய ஒளிப்படமொன்றை தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச. சுமார் 50 நாள்கள் நடைபெற்ற அரசியல் போராட்டத்தின் பின்னர் கடந்த சனிக்கிழமை தலைமை அமைச்சர் பதவியில் இருந்து விலகும் முடிவை அறிவித்தார் மகிந்த ராஜபக்ச. மீண்டும் தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினரும் மகிந்த ராஜபக்சவின் மகனுமான நாமல் ராஜபக்ச தனது கீச்சகத்தில் ஓர் ஒளிப்படத்தை வெளியிட்டார். இந்த ஒளிப்படம் இனவாதக் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா, "இனவாதத்தை இந்த ஒளிப்படம் வெளிப்படுத்துகிறது" என்று தனது கீச்சகத்தில் பதிவிட்டார். இதற்கு கீச்சகத்தில் பதில் வழங்கிய நாமல், "இனவாத கண்ணோட்டத்துடன் எல்லாவற்றையும் நோக்கினால் எல்லாமும் இனவாதமாகவே தெரியும்" என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் எண்ணமில்லை

### வியாழேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் எண்ணம் எனக்கு எப்போதுமே இல்லை என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார். நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

குறித்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'சிலர் என்னுடைய கருத்தைக் கேட்காமல், என்னை அவமானப்படுத்தும் நோக்கிலும், தங்களைப் பிரபல்யப்படுத்தும் நோக்கிலும் பொய்யான செய்திகளைப் பரப்பி வருகின்றனர். அரச தலைவரின் அழைப்பின் பேரில், கிழக்கு வாழ் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நல்நோக்கிலேயே, பிரதி அமைச்சைப் பொறுப்பெடுத்தேன்.

கிழக்கில் தமிழர்கள் இனமாற்றம் செய்யப்படுகிறார்கள், நில வளம்சூறையாடப்படுகிறது அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டியது எம் பொறுப்பு. தற்போதைய சூழலில் நான் பொறுப்பேற்ற பதவியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பதவியில் இல்லாவிட்டாலும் நான் அரச தலைவரிடம் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவருடன் தொடர்ந்து கலந்துரையாடுகிறேன். அதில் எதுவித மாற்றமும் இல்லை.

ஆனால் ஐக்கிய தேசிய கட்சியுடன் சேரப்போகிறேன் என்றகதை உண்மைக்கு புறம்பானது. ஐக்கிய தேசிய கட்சியில் சேரும் எண்ணம் எனக்கு எப்போதுமே இல்லை" என்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியோழேந்திரன் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி பிரதியமைச்சராகப் பதவி வகித்தார்.

தற்போது புதிய அரசு அமைக்கப்பட்டுள்ள நிலையில், அவரது பிரதியமைச்சர் பதவி இல்லாமல் போயுள்ளது. (ம)

# தெற்கைச்சேர்ந்த 46 பேருக்கு வடக்கில்ரகசியநியமனங்கள்

## அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்தி மகிந்த தரப்பினர் கைங்கரியம்

**யாழ்ப்பாணம், டிசெ.18**

**கடந்த ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 46 பேருக்கு இலங்கை மின்சார சபையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் பின்னர் மகிந்த தலைமையில் அமைச்சரவை ஒன்று அமைக்கப்பட்டது. அதில் எரிபொருள் மின்சக்தி அமைச்சராக நியமிக்கப்பட்ட சியம்பலாப்பிட்டிய இந்த நியமனங்களை வழங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கடந்த 50 நாள்களாக நாட்டில் அரசியல் குழப்ப நிலைமை காணப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் நியமனங்கள் எவையும் வழங்கப்படக் கூடாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டிருந்தார். அதையும் மீறி பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த 46 பேருக்கு வடக்கு மாகாணத்தில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

"மின்சார சபையின் வடபிராந்திய அலுவலகங்களில் தென்னிலங்கையைச் சேர்ந்த 46 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிய முடிகின்றது.

இவ்வாறான வெற்றிடங்களை எமது மாகாண இளைஞர்களுக்கு வழங்குங்கள் என்று நாம் கோரி வரும் நிலையில் இரகசியமான முறையில் விண்ணப்பங்கள் எவையும் கோரப்படாது இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசியல் குழப்பம் நிலவிய காலத்தில் வழங்கப்பட்ட நியமனங்களை இரத்துச் செய்ய வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் தலைமை அமைச்சரின் கவனத்துக்கும், அபிவிருத்திச் செயலணியின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்படும்". - என்றார்.

(ற4,105,9,26)

# வாய்ச்சுகாதாரத்தில்எவரும் அக்கறைகொள்வதேயில்லை

## விக்னேஸ்வரன் கூறுகிறார்

எமது சுகாதாரப் பழக்க வழக்கங்களில்மிகவும்முக்கியம் வாய்ந்ததும் அத்தியாவசியமானதுமான வாய்ச்சுகாதார பழக்க வழக்கங்களில் நாம் ஒருவரும் அக்கறைகொள்வதில்லை. அதனாலேயே இறுதியில் பல் பிடுங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்தெரிவித்தார்.

மருத்துவர் பொ.சுபாகரனின் 'அடிப்படை வாய்ச்சுகாதாரம்' பற்சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வும் பற்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான சிகிச்சை முறைகளும் என்ற நூல் வெளியீடு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில்நேற்றுமுன்தினம் நடைபெறற்றது. அதில் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும்தெரிவித்ததாவது:

காலையில்நித்திரைவிட்டெழுந்தவுடன்ஏனோதானோ என்று வாய்க்குள் பற்தூரிகையை விட்டு இரண்டுதடவைகள்சுத்தப்படுத்திவிட்டு, நீரைக் கொப்பளித்து விட்டு, குளித்துமுழுகிஎமதுநாளாந்த கடமைகளைஆரம்பிப்போம். பல்வேறு பதார்த்தங்களை எமது வாய்களின் ஊடாக உடலுக்குள் அனுப்புகின்றோம். வாய் சுத்தம் செய்கின்ற பழக்க வழக்கங்கள் எம்மிடம் அறவே இல்லை. வெறுமனே கொப்பளித்தல் மூலம்வாய்சுத்தம்அடைந்துவிடாது. மாறாக நாம் உண்ணுகின்ற பல்வேறு உணவுப்பதார்த்தங்களின் உணவுத் துணிக்கைகள் பல் ஈறுகளுக்குள்ளும் முரசுகளுக்கிடையேயும் தங்கி நின்றுஎமதுஉமிழ்நீருடன் சேர்ந்து பல்லாயிரக்கணக்கானபக்ரீரியாக்களைஉருவாக்குகின்றன. இறுதியில் பற்கள் பிடுங்கி எடுக்கப்படுகின்றன.

இவை யாவை பற்றியும் மருத்துவரின் சிறிய கைந்நூல் அறிவுரைகளை வழங்கியுள்ளது.

மூர்த்திசிறிதாயினும்கீர்த்தி பெரிதுஎன்பதுபோலஇந்தப் புத்தகம் 36 பக்கங்களை மட்டும் கொண்டிருந்த போதும்பலமுக்கியவிடயங்களைஉட்புகுத்திப்படவிளக்கங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

எமது மூதாதையர்கள் "ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"என்றுகூறினார்கள். இதனை இன்றையமருத்துவநிபுணர்கள் எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்வார்களோநான்அறியேன். ஆனால் எமக்குத் தெரிந்த 75 வயதைத் தாண்டி விட்டஒருவர் சிறுபிள்ளையில் இருந்து தினமும் ஆலம் விழுதின் மூலமாகவேபல்தேய்க்கும்பழக்கத்தைக்கொண்டிருப்பவர். அவருடைய பற்கள் அவரின் இன்றைய75 வயதிலும்சங்குபோலமினுமினு என்று எந்தவித பற்சூத்தையோ வேறெந்த பல்வலியோ அற்ற நிலையில் மிக அழகாக பராமரித்து வரப்படுகிறது.

அணிந்துரையில்அவர்ஒரு முக்கிய விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

"தற்காலவாழ்க்கைமுறை, சிலபழக்கவழக்கங்கள்மற்றும்உணவுமுறைகள்என்பன புதிய வகையான பல், முரசு சம்பந்தமான பிரச்சினைகள்அதிகமாகஏற்படுவதற்கு காரணமாகின்றன" என்கிறார்.

இதனைநாம்புரிந்துகொள்ள வேண்டும்.தற்காலவாழ்க்கை முறை பல தவறான பழக்க வழக்கங்களுக்கு இடம் கொடுத்துள்ளன.

பாண், பிஸ்கட்டுக்கள் போன்ற ஒட்டுந்தன்மையான உணவுகள், சொக்லேட்போன்றஇனிப்புவகைகள், கொக்கோ கோலா போன்ற கார்பன் கலந்த குளிர்பானங்கள் யாவும் தற்காலவாழ்க்கைஎமக்குத் தந்த தகாத உணவுகள் - என்றுதெரிவித்தார். (4)

# ஐக்கிய தேசிய முன்னணியின் அரசுக்கு சுதந்திரகட்சியினர்ஆதரவளிக்கக்கூடாது

## சில முதலமைச்சர்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய தேசிய முன்னணியின் அரசுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்கள் ஆதரவு வழங்கக் கூடாது. கூட்டு அரசை அமைப்பதில் இருந்து அவர்கள் விலகி இருக்க வேண்டும் என்று ஆறு மாகாணங்களின்தற்போதைய மற்றும் முன்னாள் முதலமைச்சர்கள் கோரியுள்ளனர்.

சிறிலங்காசுதந்திரக்கட்சியைச் சேர்ந்தஇவர்கள்மேல்மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரியவின் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை சந்திப்பில் ஈடுபட்டனர். அதன் பின்னரே அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டனர்.

'ஐதேகவுடன் மீண்டும் தேசிய அரசை அமைக்கும் எண்ணம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிடையாது. எனவே, ஐக்கிய தேசிய முன்னணியின் அரசுக்கு சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கக் கூடாது. எவராவது, ஐக்கிய தேசிய முன்னணியின் அரசில் இணைந்து கொள்ள விரும்பினால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி ஆதரவு வழங்கலாம்' என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்தார். (ம)

# முள்ளந்தண்டுவடம்பாதித்த 40பேருக்குப்படுக்கைமெத்தை

யாழ்ப்பாணம், டிசெ. 18



முள்ளந்தண்டு வடம்பாதிக்கப்பட்ட சிறப்புத் தேவையுடைய40பேருக்கு தண்ணீர்ப் படுக்கை மெத்தைகள் வழங்கப்பட்டன.

ஏ9வீதிமாங்குளத்திலுள்ள உயிரிழைஅமைப்பில் தங்கியுள்ளவர்களுக்கு இவை வழங்கப்பட்டன. அவர்கள் போரால் காயமடைந்து முள்ளந்தண்டுப் பாதிப்புக்குள்ளானவர்கள்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனின்வேண்டுகோளின்படி சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன்வேலாயுதம்40பேருக்கும்அவற்றை வழங்கினார். (4)

# வவுனியா கல்லுமலை கோவில் வளாகத்தில் கட்டுமானப்பணியின்போதுநேற்றுப்பதற்றம்!

## சீரமைப்பு மட்டுமே இடம்பெறுமென்று உறுதியளித்ததால் சுமுகமாகியது

வவுனியா, டிசெ. 18

வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் கோவிலில் தொல்பொருள் திணைக்களத்தினர் நேற்றுக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டபோது குழப்பநிலை ஏற்பட்டது. அங்கு புதிய கட்டுமானம்எதுவுமின்றிசீரமைப்புமட்டுமே இடம்பெறும்என்றுஎழுத்துமூலமாகக்கடிதம் வழங்குவதாக திணைக்களத்தினர் உறுதியளித்தையடுத்து நிலமை சுமுக நிலைக்கு வந்தது.

வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம் 1952ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அந்தப்பகுதி மக்கள் வழிபட்டுவருகின்றனர். கோவில் அமைந்துள்ள மலையில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற் தூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டடங்கள் எனப் பல காணப்படுகின்றன. கடந்ததீபாவளித்தினத்தன்றுதொல்பொருள் திணைக்களத்தால், மணல் போன்றன இந்த வளாகத்தில் பறிக்கப்பட்டிருந்தன.

அன்று கட்டுமான வேலைகள் முன்னெடுக்கவிருந்த நிலையில் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். பதட்டமான சூழ்நிலை ஏற்பட இறுதியில் பொலிஸார் தலையிட்டு நிலமையைச் சுமுக நிலைக்குக் கொண்டு வந்திருந்தனர்.

அதன் பின்னர் பலமுறை கட்டுமான பணிகளை மேற்கோள்வதற்கு தொல்பொருள் திணைக்களம் முயற்சிசெய்து வந்தது.

இந்த நிலையில், தொல்பொருள் திணைக்களத்தினர் பொலிஸாரின் பாதுகாப்புடன் கட்டுமான வேலைகளை நேற்று ஆரம்பித்திருந்தனர். அங்கு வந்த கிராமத்தவர்கள் தொல்பொருள்திணைக்கள அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். கட்டுமானப் பணிகளை இடைநிறுத்துமாறு கூறினர். இதனால் சற்று நேரம் குழப்பநிலை நீடித்தது. இதனைச் சீரமைக்கலாமே தவிர புதிதாகக் கட்ட முடியாது. தற்போது வேலைகளை நிறுத்துங்கள் என்று பொதுமக்கள், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அரசியல்வாதிகள்தொல்பொருள்திணைக்கள அதிகாரிகளுக்குக் கண்டிப்பாகக் கூறி விடாப்பிடியாக நின்றனர். பின்னர் தாம் அதனை முன்னர்இருப்பதுபோன்றேசீரமைத்துப்பாதுகாக்கவுள்ளோம் என்று திணைக்களத்தினர் மக்களுக்குத் தெரிவித்தனர்.

அதனைஎப்படிநம்புவது? அதில்ஒருசெங்கற்கள்கூட புதிதாக வைக்கப்படாமல் தற்போது இருப்பதனைப் போலவே சீரமைக்கப்படும் என்றுதமக்குஎழுத்துமூலமாகஉறுதிமொழி தந்தால் சீரமைக்க அனுமதிக்கின்றோம் என்று பொதுமக்கள் அங்கு உறுதியான நிலைப்பாட்டில் நின்றனர்.

அதன்பின்னர் அதற்கான எழுத்துமூலமான கடிதத்தை நாளையதினம்(இன்று) சிங்கள மொழியில்வழங்குவதாகவும், நாளைமறுதினம்(நாளை) தமிழ்மொழியில் வழங்குவதாகவும் தெரிவித்தனர். அதனடிப்படையில் நிலமை சுமுக நிலைக்குக் கொண்டுவரப்பட்டிந்தது.

சம்பவஇடத்துக்கு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் க.சந்திரகுலசிங்கம் மோகன் ஆகியோர்வந்திருந்தனர், பொதுமக்களுக்கு ஆதரவாக திணைக்களத்தினருடன் கலந்துரையாடியிருந்தனர்.

தொல்பொருள்திணைக்களத்தின் செயற்பாடுகள்சந்தேகத்தைஏற்படுத்தியிருப்பதால்அவர்கள் அங்கு புத்தர் கோவிலை அமைத்துவிடுவார்கள் என்ற கருதி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

(4,110,111)

**31ஆம் நாள் நினைவஞ்சலி** **17ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



மண்ணில் 14 . 02 . 1951

விண்ணில் 17 . 11 . 2018

மண்ணில் 05 . 09 . 1928



விண்ணில் 18 . 12 . 2001

அமரர் சந்தியாப்பிள்ளை
**அல்போன்ஸ் ஜெயரெட்ணம்**

அமரர்
**சந்தியாப்பிள்ளை திரேசம்மா**

காலங்கள் கடந்து சென்றாலும் கடைசிவரை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மனதில் தொடர்ந்திருக்கும்

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## அரசியல்...

கள் கூட்டம் ஐக்கிய தேசிய முன்னணியால் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஜனநாயகத்துக்குக்காகத் திரண்ட கூட்டணி தொடர வேண்டும். பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் முதல் ஏனைய அனைத்து உரிமை களையும் உறுதி செய்து அன்று ஐக்கிய தேசிய முன்னணியாக இணைந்தோம். சமூக விடுத லையை உறுதிப்படுத்தி நாங்கள் அதைத் தேசிய முன்னணியாகப் பதிவு செய்யவுள் ளோம். அது தொடர்பாக எமது சட்ட நிபுணர்கள் ஆலோசிக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூடவுள்ளது. அதற்கான அனுமதியும் பெறப்ப டும். முழுமையான ஜனநாயகத்தை ஏற்படுத்த உருவாக்கப்படும் இந்தக் கூட்டணியால்தான் எமது நாட்டைப் பாதுகாக்க முடியும்" - என் றார். (ற-10)

# புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு
# மீள்கேள்வி அறிவித்தல் - 2019

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2019 இலிருந்து 31.12.2019 வரையான காலப் பகுதிக்கு நடத்துவதற்கு குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப் படுகி-ன்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 18.12.2018 முற்பகல் 9.00 மணிதொடக்கம் 24.12.2018 ந.ப. 12.00 மணிவரை (அலுவலக நாள்களில் மட்டும்)

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2018.12.24 பி.ப. 2.00 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி : 2018.12.24 மு.ப. 2.30 மணிக்கு

கேள்வி திறக்கப்படும் இடம் : புதுக்குடியிருப்பு பிரதேச சபை, தலைமை அலவலகம்.

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | ***1,000.00*** | 56,100.00 | 5,605,001.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***1,000.00*** | 14,900.00 | 1,486,900.00 |
| 3 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | ***1,000.00*** | 5,300.00 | 530,000.00 |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***1,000.00*** | 5,800.00 | 570,250.00 |
| 5 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | ***1,000.00*** | 2,000.00 | 171,750.00 |
| 6 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | ***1,000.00*** | 14,100.00 | 1,405,000.00 |
| 7 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***1,000.00*** | 4,500.00 | 447,000.00 |
| 8 | மந்துவில் மாட்டிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | ***1,000.00*** | 1,000.00 | 23,750.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***1,000.00*** | 2,000.00 | 111,500.00 |
| 2 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***1,000.00*** | 1,000.00 | 56,500.00 |
| 3 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | ***1,000.00*** | 2,000.00 | 173,440.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | ***1,000.00*** | 2,000.00 | 141,500.00 |
| 5 | ஒட்டுசுட்டான் ஆட்டிறைச்சிக்கடை | ***1,000.00*** | 1,000.00 | 23,750.00 |
| 6 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை | ***1,000.00*** | 1,000.00 | 6,270.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | ***1,000.00*** | 1,000.00 | 85,600.00 |
| 2 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | ***1,000.00*** | 1,000.00 | 61,990.00 |
| 3 | மாங்குளம் ஆட்டிறைச்சிக்கடை | ***1,000.00*** | 1,000.00 | 23,750.00 |
| 4 | மாங்குளம் கருவாட்டுக்கடை | ***1,000.00*** | 1,000.00 | 5,700.00 |

நிபந்தனைகள்,

1. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை தவிசாளர், பிரதேச சபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்ட-ாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பிவைத்-தல் வேண்டும்.
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 28.12.2018 ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்துகொள்ளல்வேண்டும். மிகுதித் தொகையினை 6 சமபங்குப்படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் செலுத்தவேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விவரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை 24.11.2018 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 20ஆம் பக்கத் திலும் பிரதேச சபையின் தலைமையலுவலகத்திலும் மற்றும் உபஅலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

திரு. செ.பிறேமகாந்,, 2018.12.17
தவிசாளர், பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.

Galaxy Star
வெற்றி வாரம் 282 / திகதி 16.12.2018
வெற்றி இலக்கங்கள்
02 03 19 52 60
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி
ரூ. 2,708,556/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3123 திகதி: 2018.12.17 திங்கட்கிழமை
SATURDAY FORTUNE
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து போனஸ் இலக்கம் அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
25 38 42 56 P 12 55,206,785/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 467
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.12.17
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 51,844,510/-
வெற்றி இலக்கங்கள்
16 60 61 68 E
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1527
சீட்டிழுப்பு திகதி 17.12.2018
வெற்றி இலக்கங்கள்
24 25 28 35 F
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 23 ,068 ,392/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## பதவி வெற்றிடம்

01. பதவி : பயிற்சி விற்பனை உதவியாளர்
02. வயதெல்லை : 18 தொடக்கம் 45 வரை (விண்ணப்பத் திகதியில் 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்)
03. கல்வித்தகைமை : க.பொ.த சாதாரணதரம்
04. பால் : ஆண்
05. விண்ணப்ப முடிவு திகதி : 28.12.2018
06. விண்ணப்பதாரர் சங்க எல்லைப்பரப்பில் வசிப்பமைக்கான வதிவிட சான்றிதழ் உறுதிப்படுத்தல் வேண்டும்.

தங்கள் சுயவிபரக் கோவையை கீழ்க்காட்டப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர்
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம்
மின்சார நிலைய வீதி சுன்னாகம்.

தலைவர்
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

(N 8739)(04.17)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வ.கனகசிங்கம்**
(ஓய்வு பெற்ற நேரக்கணிப்பாளர் - சீமெந்து கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை)

பிறப்பு 01.01.1929 இறப்பு 05.01.2012

திதி : வைகுண்ட ஏகாதசி

பல வருடங்கள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
பசுமரத்தாணிபோல் - எம் மனங்களில்

என்றும் உங்கள் நீங்கா நினைவோடு
குடும்பத்தினர்.

புலமைக்கல்வி நிறுவனம்
சோதிவேம்படி லேன், மானிப்பாய்.

## வாடகைக்குண்டு

65, சிவன் வடக்கு வீதியில் சிறிய கடை வாடகைக்கு உண்டு.

(CS 21882) (14.17)

**076 306 8360/077 523 5212**

## வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பத்திற்கு வீடுவாடகைக்குத் தேவை. **அறைகள்**: 3 +. **இடம்** : யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில்.

**தொடர்பு - 077 365 5947**

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர்**

## ஆண்டி முருகையா



தோற்றம் 25.12.1935 — மறைவு 07.01.2009

திதி : சுவர்க்கவாயில் ஏகாதசி

உயிருடன் உருவம் தந்து
உவகையுடன் உருவாக்கிய தந்தையே
அன்பாய் எமைக்காத்து
பாசமாய் வளர்த்தெடுத்து
பண்புடன் வாழ ஆளாக்கிய தெய்வமே
பத்தாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு அகலாது அப்பா
அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்றும் உம் நினைவுகளுடன்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS 21726) (14.17)

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
## 2019 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

கேள்வியின் பெயர்:- நகராட்சிமன்ற பொதுச் சந்தையின் துவிச்சக்கரவண்டி. மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கான குத்தகைக்கேள்வி.

**சாவகச்சேரி நகராட்சிமன்ற பொதுச் சந்தையின் துவிச்சக்கரவண்டி. மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்கள் முதலானவற்றை 2019 ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல்**

1. கேள்விப் பத்திரங்கள் கீழ்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 18.12.2018 – 26.12.2018 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 – பி.ப 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும்.

   கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 26.12.2018 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி
   கேள்விதிறக்கப்படும் திகதி :- 26.12.2018 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணி

2. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர். நகராட்சி மன்றம். சாவகச்சேரி என்ற முகவரிக்கு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். (எக் காரணம் கொண்டும் 26.12.2018 முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)இதன் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணங்காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
6. தெரிவு செய்யப்படும் பொதுச் சந்தையின் துவிச்சக்கரவண்டி. மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்கள் முதலானவற்றுக்குரிய கேள்விகாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத் திகதியில் இருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
7. கேள்விப்பத்திரக் கட்டணம். கேள்வித் தொகை. மாதாந்த குத்தகைப்பணம் என்பனவற்றுக்கு நடைமுறையில் உள்ள பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)நாட்டைக் கட்டியெழுப்பும் வரி (NBT) மேலதிகமாக செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இந்நகராட்சிமன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இக்கேள்விகளிற்கு விண்ணப்பிக்க முடியாது.**

**2019 ஆம் ஆண்டு துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகைவிபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதரவரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்கள் | 528000.00 | 5280.00 | 1,000.00 |

**திருமதி சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.**
**17.12.2018**

உதயன்
தொடர்புகளுக்கு
0214931111
advt@uthayan.com

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 15.12.2018 சனிக்கிழமையன்று இறைபதமடைந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் **திரு. நற்குணநாதன் சந்திரசேகரன்** அவர்களின் அன்புத் தந்தை

**ஐயாத்துரை நற்குணநாதன்**

அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**

## MINISTRY OF HOUSING AND SOCIAL WELFARE.
## DEPARTMENT OF BUILDINGS
### INVITATION FOR BIDS

Proposed Staff Quarters Stage I for University of Jaffna at Kilinochchi and Vavuniya.


1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Department of Buildings now invites sealed bids from eligible and qualified bidders for aforesaid works as described below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder/bidders shall not have been black listed and shall be registered in the field of building construction for Grade C7 or above with the Institute for Construction industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, and inspect the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs.
Contact numbers are: Phone: 021 2222781, Facsimile : 021 2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna from 14.12.2018 until 27.12.2018 from 9:00hrs to 15:00 hrs.
6. Bids shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna to reach on or before 10.00 hrs on 28.12.2018. Bids will be opened soon after closing at the Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 91 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be:
• in the form included in Section 09 of the bidding document
• in favour of Director General of Buildings
• valid up to 27.04.2019.
• issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.
9. The details of the bids are given below.

| Bid No | Description of work | Estimated amount (million) (Excluding VAT) | Contract Period (months) | Bids Security (RS) | Non refundable fee (Rs) |
|---|---|---|---|---|---|
| RPC/CE (Z2)-07/18 | Proposed Staff Quarters – Stage I for University of Jaffna at Kilinochchi. | 6.046 | 90 Days. | 120,000.00 | 3500/= |
| RPC/CE (Z2)-08/18 | Proposed Staff Quarters – Stage I for University of Jaffna at Vavuniya. | 6.046 | 90 Days. | 120,000.00 | 3500/= |

**Eng. A.Nawas Atham,**
**Director (R2)**
**Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya",**
**Battaramulla.**

## மரண அறிவித்தல்

# அருணாசலம் பத்மநாதன்



அனுராதபுரத்தை பிறப்பிடமாகவும் தற்போது கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பத்மநாதன் நேற்று (17.12.2018) காலமானார்.

அன்னார் அருணாசலம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், லஹிறாவின் அன்புக் கணவரும், கண்ணன் (ஜலன்), செல்வி (கௌதமி), ரமேஸ் (நிர்வாக உத்தியோகத்தர், பிரதிப் பிரதம செயலாளர் - பொறியியல் சேவைகள் அலுவலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலசோதி (விஜி), பாஸ்கரன், சிந்துஜா ஆகியோரின் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவீன், மகிஷா, ரிஷி,இஷா, இமா, தக்சிலா, ரேஷ்ணுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (18.12.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ரமேஸ் (மகன்)**

(CS/21889)(11,17)

**021 223 0401, 077 226 7848**

# கடவைகளில் வரி அறவீடுகள் ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு

சாவகச்சேரி, டிசெ. 18

**சாவகச்சேரி பொதுச்சந்தையில் வரி அறவீடுகள் ஜனவரி தொடக்கம் முன்னைய காலங்களைப் போல கடவைகளில் வரிவசூலிப்பாளர்களால் மேற்கொள்ளப்படவுள்ளதாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.**

தற்போது நடைமுறையில் உள்ள விற்பனைத் தொகைக்கான வரி அறவிடும் முறைகள் நிறுத்தப்பட்டு ஜனவரி தொடக்கம் கடவைகளில் வைத்து வரி அறவிடப்படவுள்ளது.

சந்தைக்கு பொருள்கள் கொண்டுவரும் உற்பத்தியாளர்கள் கடவையில் உரிய சிட்டையினைப் பெற்று சந்தைக்குள் பொருள்களைக் கொண்டு செல்லமுடியும். உள்ளே கொண்டுசெல்லப்படும் பொருள்களுக்கு வழங்கப்படும் வரிச்சிட்டைகள் பொருள் விற்பனை செய்யும் வரை வைத்திருக்க வேண்டும். பரிசோதனையின் போது பற்றுச்சீட்டு வைத்திருக்காதவர்களுக்கு மீண்டும் சிட்டை வழங்கப்பட்டு பணம் அறவிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் சந்தையில் உள்ள கடலுணவு விற்பனைப்பிரிவு உட்பட எட்டுக் கடவைகளில் வரிவசூலிப்பாளர்கள் நிறுத்தப்பட்டு உள்ளே கொண்டுசெல்லப்படும் பொருள்களின் அளவுக்கேற்ப வரிச்சிட்டைகள் வழங்கப்பட்டுவந்தன.

2011ஆம் ஆண்டு சந்தை குத்தகைக்கு விடப்பட்டபோது குத்தகையாளரால் விற்பனை செய்யப்படும் பெறுமதிக்கான வரி அறிவிடும் முறையினை அறிமுகப்படுத்தியிருந்தனர். அந்த நடைமுறை பின்னர் நகரசபை பணியாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த நடைமுறையால் பாதிக்கப்படுவதாக உற்பத்தியாளர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து முன்னைய காலங்களைப் போல கடவைகளில் வரிவசூலிப்பாளர்களால் வரி அறவீடுகள் செய்யும் செயற்பாடு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படவுள்ளது. அக்காலப்பகுதியில் 12 நிரந்தர வரிவசூலிப்பாளர்களும் 6 தற்காலிக வரிவசூலிப்பாளருமாக மொத்தம் 18 வரிவசூலிப்பாளர்கள் கடமையாற்றினர். வடமாகாணத்தில் உள்ள பெரும்பாலான சந்தைகள் அந்தந்த உள்ளூராட்சி சபைகளால் குத்தகைக்கு வழங்கப்பட்டுவருவதால் அங்கு சபைகளால் வரிவசூலிப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் நீண்டகாலமாக சாவகச்சேரி நகரசபையில் காணப்பட்ட வரிவசூலிப்பாளர்கள் பதவிகள் வெற்றிடமாக இருப்பதால் அலுவலகப் பணியாளர்களும் ஒப்பந்த அடிப்படையிலான தற்காலிகப் பணியாளர்களே பணியாற்றி வருகின்றனர். சந்தை நகரசபையினால் நடத்தப்படுகின்ற போதிலும் வரிவசூலிப்பாளர்களை நியமிக்கக் கோரி மாகாண சபையுடன் சபை நிர்வாகத்தினர் தொடர்புகொண்ட போதிலும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிலையில் சந்தையில் கடமையாற்றும் வரிவசூலிப்பாளர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு கடவைகள் சிலவற்றை மூட வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

சாவகச்சேரி கிராமச்சங்கம் இயங்கிய காலத்தில் கிராமச்சங்கத் தலைவராக இருந்தவ. அருணாசலம் என்பவரால் சந்தைக்கு கொண்டு வரப்படும் பொருள்களுக்கு வரி அறவிடும் நடைமுறையினை கடந்த 1933 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியிருந்தார். அக்காலம் தொடக்கம் பட்டண சபை நகரசபையாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் கடந்த 80 ஆண்டுக்கு மேலாக சாவகச்சேரி பொதுச்சந்தை சபையினாலேயே வரிவசூலிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஜ-9)

# இரண்டு பிள்ளைகளின் தந்தை மறுமணம் செய்து மாட்டினார்!

## *வடமராட்சியில் இப்படி ஒரு நாடகம்*

யாழ்ப்பாணம், டிசெ. 18

சம்பந்தம் பேசி கோவிலில் பெண்ணுக்குத் தாலிகட்டி அன்று மாலையே பதிவுத் திருமணம் செய்ய முற்படும்போது, அதுவரை மாப்பிள்ளையாக இருந்தவர் ஏற்கனவே திருமணம் செய்திருக்கும் 2 பிள்ளைகளின் தந்தை என்பது தெரியவந்தது. அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டபோதும், பெண்ணின் நலன்களைக் கருதி அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்த விசித்திரமான சம்பவம் வடமராட்சியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

வடமராட்சியைச் சேர்ந்த பெண்ணுக்கு அவரது வீட்டார் மணமகனைத் தேடியுள்ளனர்.

கொழும்பில் ஒருவர் உள்ளார் என்று தரகர் பெண் வீட்டாருக்குக் கூறியுள்ளார். அவர்கள் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். சீதனமாக 5 லட்சம் ரூபா மணமகனுக்குக் கொடுத்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை திருமணம் நடைபெற்றது. தாலி கட்டிய பின்னர் பதிவுத் திருமணத்துக்குத் தயாராகுமாறு பெண் வீட்டார் மாப்பிள்ளையை அழைத்துள்ளனர்.

"அவசரமாகக் கொழும்புக்குச் செல்ல வேண்டும். ஆகவே பதிவுத் திருமணம் வேண்டாம்" என்று மாப்பிள்ளை மறுத்துள்ளார். மாப்பிள்ளையின் கதையில் பொய் தெரிவதைப் பெண்வீட்டார் அவதானித்துள்ளனர். மணப்பெண்ணுக்குக் கட்டிய தாலியைப் பார்த்த போது அது பித்தளை என்பது தெரியவந்தது. அவர் மீதான சந்தேகம் பெண்வீட்டாருக்கு மேலும் அதிகரித்தது. அவர் கொழும்பு செல்லாதவாறு பெண்வீட்டார் மடக்கினர். வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். அங்கு விசாரணை செய்த போது அவர் நாடகமாடியது தெரியவந்தது. அவர் மட்டுமன்றி அவருக்குத் தோழியாக வந்தவரும் நாடகமாடியுள்ளார் என்பது தெரியவந்தது.

மாப்பிள்ளையாக வந்தவர் ஏற்கனவே கொழும்பில் திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளின் தந்தை என்றும் அவருக்குத் தோழியாக மண

மகனால் அழைத்து வரப்பட்டவர் பணம் கொடுத்து வவுனியாவில் இருந்து அழைத்துவரப்பட்டவர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

திருமணப் பெண்ணின் எதிர்காலத்தைக் கருதி விடயத்தைப் பெரிதுபடுத்தாமல் சீதனமாகக் கொடுத்த பணத்தை மாப்பிள்ளையிடமிருந்து வாங்கித் தருமாறு பெண் வீட்டார் பொலிஸாரிடம் தெரிவித்தனர். அதன்படி மணமகனாக வந்திருந்த நபர் சட்டத்தரணி ஒருவர் ஊடாக அந்தப்பணத்தை பெண்வீட்டாரிடம் திருப்பி வழங்கிவிட்டுச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7,26)

# மணல் கடத்தல் முறியடிப்பு

கொடிகாமம், டிசெ.18

மணல் கடத்தலில் ஈடுபட்ட கனரக வாகனம் ஒன்றை கொடிகாமம் பொலிஸார் மடக்கிபிடித்துள்ளனர். இந்தச் சம்பவம் வறணி வடக்கு தம்பான் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றது. மணல் கடத்தலுக்காக வாகனத்தில் வந்தவர்கள் பொலிஸாரைக் கண்டதும் வாகனத்தை விட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.

மணலுடன் கைப்பற்றப்பட்ட வாகனத்தை கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். வறணி வடக்கு பிரதேசத்தில் மக்கள் குடியிருப்பு அற்ற சைவக்குடியிருப்புப் பகுதியில் தொடர்ந்து நீண்ட நாள்களாக மணல்கடத்தல்கள் இடம்பெற்றுவருகின்றன. மணல்கடத்தலில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் தட்டிக்கேட்கும் போது அப்பிரதேச இளைஞர்களுடன் முரண்படுவதாகவும் பிரதேசமக்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-122)

# சந்தேகநபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, டிசெ.18

திருட்டு முயற்சியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மிருசுவில் விடத்தற்பளைப் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த புதன்கிழமை திருட முயன்ற இவரை பொதுமக்கள் துரத்திப் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேகநபரை பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 13 ஆம் திகதி முற்படுத்தினர். வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இந்த நபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஜ-9)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## *பலாலி...*

பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்பட, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், திணைக்களத் தலைவர்கள், அமைச்சுக்களின் செயலர்கள், பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு முன்னதாக, பலாலியிலிருந்து தமிழகத்துக்கான வானூர்திச் சேவை நடத்தும் வகையில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து அந்தப் பணிகள் கிடப்பில் போடப்பட்டன. இந்த நிலையில் நேற்றைய கூட்டத்தில் அது தொடர்பான முன்னேற்ற மீளாய்வு ஆராயப்பட்டது. புதிய அமைச்சரவை ஊடாக அந்தப் பணிகளை விரைவுபடுத்த அரச தலைவர் உத்தரவிட்டுள்ளார். இலங்கை அரசின் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முதல் கட்ட அபிவிருத்திப் பணிகள் முன்நகர்த்தப்படும். தமிழகத்துடனான வானூர்திச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பிராந்திய வானூர்தி நிலையமாக்குவதற்குரிய ஏனைய அபிவிருத்திப் பணிகள் இந்திய அரசின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேபோன்று காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்திய அரசு 45 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்கவுள்ளது. அதனை அபிவிருத்தி செய்வதற்குரிய பணிகளையும் உடன் ஆரம்பிக்குமாறு அரசதலைவர் பணித்துள்ளார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வீடுகள் அமைக்கும் திட்டத்தை இந்த ஆண்டுக்குள் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புத் தரப்பினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள 130ஏக்கர் அரச காணியையும், 132 ஏக்கர் தனியார் காணியையும் மக்கள் பாவனைக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கையளிப்பது என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்புத் தரப்பினருக்குப் பணம் வழங்கி, அவர்கள் தங்கள் கட்டங்களை இடமாற்றுவதற்கு நிதி கோரும் காணிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இவ்வாறான காணிகளை விடுவிக்க படையினருக்கு எவ்வளவு நிதி தேவை என்பதை மதிப்பீடு செய்ய, செயலணியின் செயலர் வே.சிவஞானசோதி நியமிக்கப்பட்டுள்ளார். நிதி மதிப்பீட்டை மேற்கொண்டு அடுத்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அதனை உள்ளடக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'தனியாருக்கு சொந்தமான காணிகளில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய செயற்பாடுகள் மேலும் தொடரப்படுவதை அனுமதிக்க முடியாது. அத்தகைய காணிகளை விடுவிப்பதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்" என்று இந்தக் கூட்டத்தில் மைத்திரி வலியுறுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் இயங்கிய பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை தற்போது இயங்குகின்றதா? இல்லையா? என்பதனை அமைச்சின் அதிகாரிகள் தெரியப்படுத்த வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபாலவிடம், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரினார்.

'பரந்தனில் 120 ஏக்கர் நிலம் தொழிற்சாலைக்கு உள்ளது. போரின் காரணமாக அழிவடைந்த நிலையில் மறுசீரமைத்து இயக்க ஒழுங்கமைக்கப்பட்டது" என்று பொறுப்பு அதிகாரி பதிலளித்துக் கொண்டிருக்கும் போது, குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இயங்குகின்றதா? இல்லையா? என்பதை மாத்திரம் சொல்லுங்கள் என்ற சிறீதரன், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்னும் பெயரில் கொழும்பில் தொழிற்சாலை இயங்குகின்றது. அந்தத் தொழிற்சாலையின் பெயரில் பல வாகனங்கள் ஓடித் திரிகின்றன. தொழிற்சாலையில் பணியாற்றிய பலர் வீதியில் இருக்க அதன் பெயரில் தற்போது யாரோ பணியாற்றுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் குற்றச்சாட்டு உண்மையா என்று அரச தலைவர் கோரிய போது, அதற்றுப் பொறுப்பு அதிகாரி ஆம் என்று பதிலளித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா குறுக்கிட்டார். அந்தத் தொழிற்சாலை எங்கு இயங்கினாலும் அதனை வரவேற்கவேண்டும் என்று குறிப்பிட்டார். வேறு இடத்தில் இயங்குவது என்றால் அதற்குரிய பெயரை மாற்றி இயங்கச் செய்யட்டும் என்று சிறீதரன் கூறினார். பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்னும் பெயரில் இயங்கும் தொழிற்சாலை உடனடியாக பரந்தனுக்கே கொண்டு செல்லப்படவேண்டும் என்று மைத்திரி உத்தரவிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறுப் பகுதியில் நீராவிப் பிள்ளையார் ஆலயத்தில் 20அடி புத்தர் சிலையை வைக்க பிக்கு ஒருவர் முயல்கின்றார். பௌத்தர்கள் இல்லாத பகுதியில் தமிழ் மக்களின் ஆலயத்தை ஆக்கிரமித்து மதத் திணிப்பு இடம்பெறுகின்றது. புத்தர் சிலையை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி. சாந்தி சிறீஸ்கந்தராஜா மற்றும் இ.சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கோரிக்கை விடுத்தனர். இதே போன்று வவுனியா வெடுக்குநாறி மலை தொடர்பான விடயங்களும் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. இது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்க பணித்த மைத்திரிபால, அதுவரை அங்கு எந்தப் பணிகளும் இடம்பெறக் கூடாது என்று தடைவிதித்தார்.

வடக்கு மாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 6 ஆயிரம் ரூபா சம்பளமே வழங்கப்படுகின்றது. அதனை அதிகரித்து வழங்க வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில், பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் சிவில் பாதுகாப்புப் படையினரால் இயக்கப்படும் முன்பள்ளிகள் தொடர்பிலும் பேசப்பட்டது. அங்குள் அனைத்து முன்பள்ளிகளும், மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று கூறிய வடக்கு மாகாண ஆளுநர், அவர்களுக்கு அதே சம்பளத்தை கல்வித் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார். (5,105)

# கட்டாக்காலி நாய்களுக்கு உரிய பொறிமுறை இல்லை!

## காப்பகத்தை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.18

**கட்டாக்காலி நாய்களைப் பராமரிப்பதற்கென சரியான பொறிமுறைகள் உருவாக்கப்படாததால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். நாய்களைப் பராமரிப்பதற்கு செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் மற்றும் யாழ்ப்பாண மாநகர சபை எடுத்துள்ள முயற்சிகளுக்கு செயல்வடிவம் கொடுத்து கட்டாக்காலி நாய்களுக்கான காப்பகத்தை அமைத்தே ஆகவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களால் மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வந்த நிலையில் மக்கள் வாழ்விடங்களில் உள்ள அவ்வாறான நாய்கள் உள்ளூராட்சி மன்றங்களால் பிடிக்கப்பட்டு அந்த இடங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டன. சில சந்தப்பங்களில் அவை கொல்லப்பட்டன என்றும் கூறப்படுகிறது. எனினும் அவ்வாறு நாய்களைப் பிடிப்பதற்கும், அவற்றைக் கொல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டது. மீறிச் செயற்பட்டால் சட்டத்தின்பால் தண்டனைகள் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளிட்ட வடக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களிலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது என்று பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இந்த நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது இவற்றைப் பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளில் அந்தந்தப் பகுதி உள்ளூராட்சி சபைகள் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கட்டாக்காலி நாய்களைப் பராமரிப்பதற்கு நாய்கள் காப்பகம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாக அண்மையில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்திருந்தார். அவருடைய அந்தத் திட்டம் தொடர்பில் தொடர்பு கொண்டு கேட்ட போது "பளை இயக்கச்சிப் பகுதியில் காணி அடையாளப்படுத்தப்பட்டு கொள்வனவு செய்து துப்புரவுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இனி நாய்கள் காப்பகத்துக்கான வேலைகள் ஆரம்பிக்க வேண்டும். உள்ளூராட்சி சபைகள், மின்சார சபை போன்ற திணைக்கங்கள் பொது நோக்குடன் உதவியைச் செய்தால் அந்தத் திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்த முடியும். இது ஒரு சேவை. இதனால் வருமானங்கள் வரப்போவதில்லை. எனவே அந்தச் சேவை யை மேற்கொள்ள முன்வந்தால் திட்டம் விரைவில் நிறைவேறும். யாழ்ப்பாணத்திலும் அமைக்க திட்டமிட்டோம் எனினும் அயல் காணியில் உள்ளவர்கள் எதிர்க்கின்றனர். அனைவருக்கும் பயனுள்ளது தான் இந்தக் காப்பகம் எனவே அதை நிறைவேற்றுவதற்கு இடைஞ்சல்களும் சிக்கல்களும் உள்ளன. இருந்தாலும் கட்டாக்காலி நாய்களுக்கு காப்பகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பது எனது எண்ணம் என்று அவர் கவலையுடன் தெரிவித்தார்.

கட்டாக்காலி நாய்களைப் பராமரிப்பதற்கு என்று யாழ்ப்பாண மாநகர சபையும் தீர்மானம் ஒன்றை எடுத்திருந்தது. காப்பகம் ஒன்றை அமைத்து நாய்களைப் பராமரிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாநகர முதல்வர் ஆனோல்ட்டுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;" ஆறுதிருமுருகன் ஐயா அதற்கான திட்டம் ஒன்றைக் கொண்டுவந்திருந்தார். அவர் அதை நடைறைப்படுத்தினால் அவருடன் இணைந்து நாங்களும் நாய்களைப் பிடித்துப் பராமரிக்க முடியும். அப்படி இல்லாவிட்டால் கூட எமது நகரத்தைச் சுத்தப்படுத்தும் நாம் நாய்களை மட்டும் விடமுடியாது காப்பகம் ஒன்றை ஆரம்பித்தே ஆகவேண்டும்" என்றார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, அவர் அதற்கான எந்தப் பொறிமுறையும் தம்மிடம் இல்லை என்று கைவிரித்தார். எனினும் மாநகர சபை அதை உருவாக்கினால் அவர்களுடன் இணைந்து நாய்களைப் பிடித்து பராமரிக்கலாம் என்பதையும் அவர் தெரிவித்தார். யாழ்ப்பாணம் நல்லூர்ப் பிரதேச சபையின் 7ஆவது அமர்வில் நாய்கள் காப்பகத்தை அமைப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும் அதன் பின்னர் அது தொடர்பான நடவடிக்கைகள் இடம்பெற்றதாக இல்லை. அதுபோக கட்டாக்காலி நாய்களை ஒழிக்க கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையில் முன்மொழிவு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாதீட்டிலும் அது உள்வாங்கப்பட்டுள்ளது.

கட்டாக் காலி நாய்களுக்கான காப்பகங்கள் ரட்ணபுர போன்ற சிங்களப் பிரதேசங்களில் உள்ளன. அதேபோன்று வடக்கிலும் காப்பகங்களை உருவாக்கினால் மக்களின் செயற்பாடுகளுக்கு அது இடையூறாக அமையாது பாதுகாக்க முடியும் என்தே அனைவரினதும் வேண்டுகோளாக உள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள், வடக்கில் உள்ள ஒரே ஒரு மாநகரமான யாழ்ப்பாண மாநகரம், மற்றும் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஆறுதிருமுருகன் ஆகியோர் கூட்டிணைந்தாவது எதிர்வரும் வருடத்தில் நாய்கள் காப்பத்தை உருவாக்கவேண்டும் என்று மக்கள் கோருகின்றனர்.

(ஐ-21)



## இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி, டிசெ.18

கொடிகாமம் பிரதேச மக்களுக்கு தொற்றாநோய் தொடர்பான இலவச மருத்துவ பரிசோதனை முகாமும் விழிப்புணர்வும் கொடிகாமம் தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க. தயாளன் தலைமையில் மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.

கண் , உயர் குருதி அமுக்கம், நீரழிவு போன்ற பரிசோதனைகளை பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர்களும் குடும்ப நல சேவையாளர்களும் மேற்கொண்டனர்.

பரிசோதனையில் கலந்துகொண்ட 67 பேரில் 12 பேருக்கு நீரழிவு மற்றும் உயர் குருதி அமுக்க நோய்கள் கண்டுபிடிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளை சாவகச்சேரி மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைகளைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ-9)

## தையல் இயந்திரம் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.18

பெற்றோரை இழந்து சிறப்புத் தேவைக்குட்பட்ட பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இருபாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த யேசுராசா சிந்துயாவிற்கே வாழ்வாதாரத்தை விருத்தி செய்யும் நோக்கில் இந்த உதவி வழங்கப்பட்டது.

காலையடி இணைய உதவும் கரங்களின் அனுசரணையுடன் புலம்பெயர் அன்பர் ஒருவரின் நிதிப்பங்களிப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இருபாலை விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தில் வைத்து இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (ரி3)



## ஆயுள்வேத நிறுவனங்களை பதிவு செய்யப்படல் கட்டாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 18

சுதேச மருத்துவ நிறுவனங்கள் , ஆயுள்வேத மருந்துசாலைகள், விற்பனை நிலையங்கள் மற்றும் இயற்கை அழகு நிலையங்கள் என்பன இலங்கை ஆயுள்வேத திணைக்களத்தில் பதியப்பட்டு ஆயுள்வேத ஆணையாளரது அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாத நிறுவனங்களின் மேல் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சி. துரைரட்ணம் அறிவித்துள்ளார். இலங்கையின் சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக இந்த நிறுவனங்கள் ஆயுர்வேத திணைக்களத்தினது அல்லது சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினது அனுமதியை பெற்றிருத்தல் வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## மூக்கு கண்ணாடி வழங்கல்

அளவெட்டி, டிசெ.18

மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தொல்புரம் சர்வோதயம், தந்தைசெல்வா நற்பணி மன்றமும் இணைந்து கடந்த 3 ஆம் திகதி கண்பரிசோதனை முகாமை நடத்தியது. இதன்போது தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கே மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-63)

## மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ண நிகழ்வு

கொடிகாமம் டிசம்பர் 18

யாழ்ப்பாண மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் நடத்தும் மாவட்டச் செயலர் வெற்றிக்கிண்ண இறுதிநாள் நிகழ்வுகள் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இன்று பிற்பகல் 1 மணிக்கு நலன்புரிக்கழகத் தலைவர் ஜே. கில்பேட்குணம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயமும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், மதிப்புறு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலர் எஸ். ஜெயகாந்த், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் மு. செல்வஸ்தான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-159)

## கழகங்களை பதிவு செய்யவும்

சாவகச்சேரி, டிசெ. 18

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதுவரை பதிவினை மேற்கொண்டு பதிவிலக்கம் பெறாத கழகங்கள் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் விளையாட்டுக் கழகங்கள் உருவாக்கப்படல் வேண்டுமென்ற அறிவுறுத்தலின் பிரகாரம் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் விளையாட்டுக் கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் சில விளையாட்டுக் கழகங்கள் இன்னமும் பதிவினை மேற்கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை விளையாட்டுக் கழகத்தினைப் பதிவு செய்யாத கழகங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரிவு கிராம அலுவலரிடம் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்திசெய்து இணைப்பு ஆவணங்களுடன் பிரதேச விளையாட்டு அலகிடம் ஒப்படைக்குமாறும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ-9)

## வலி. கிழக்கு பிரதேச சபை பாதீடு பார்வைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.18

வலி. கிழக்கு பிரதேச சபையின் பாதீடு முன்மொழிவுகள் கடந்த சனிக்கிழமை தொடக்கம் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தலைமை அலுவலகத்திலும் அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களின் நூலகங்களிலும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை பார்வையிடலாம் என்று தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார். (ஐ)

# பரு. பிரதேச சபையின் பாதீடு நிறைவேறியது

**பருத்தித்துறை, டிசெ. 18**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையிலுள்ள பருத்தித்துறை பிரதேச சபையின் அடுத்த ஆண்டுக்கான பாதீடு நேற்று நிறைவேற்றப்பட்டது.**

சபைத் தவிசாளர் அ.ச.அரியகுமார் தலைமையில் சபை நேற்று இடம்பெற்றது. பாதீடு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

21 உறுப்பினர்கள் கொண்ட சபையில் 17 உறுப்பினர்கள் ஆதரவளித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி,ஈ.பி.டி.பி. பொதுமக்கள் முன்னனி ஆகியவற்றின் ஆதரவுடன் பாதீடு நிறைவேறியது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் இருவர் பாதீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்ஒருவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் இருவர்களில் ஒருவரும் நடுநிலை வகித்தனர். தமிழர் விடுதலைக்கூட்டணியின் மற்றைய உறுப்பினர் ஆதரவாகவும் வாக்களித்தார்.

பாதீடு-நிறைவேற்றப்பட்ட பின்னர் சபைத் தலைவர் அ.ச.அரியகுமார் தெரிவித்ததாவது: ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அங்கம் வகிக்கும் ஒரே ஒரு உறுப்பினர் இங்கு நடுநிலமை வகித்துள்ளார். எமது கட்சியின் தலைமைப்பீடம் இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கியதாலேயே அவர்கள் ஆட்சிப் பீடம் ஏறக்கூடியதாக இருந்தது. எமது கட்சியின் ஆதரவு இல்லாவிட்டால் அவர்கள் ஆட்சிக்கு வரமுடியாமல் போயிருக்கும். இதனை இன்று அங்கம் வகிக்கும் ஐ.தே.க. உறுப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

எமது பிரதேச சபையில் கட்சி பேதம் எதுவும் கிடையாது. அபிவிருத்திப் பணிகள் சமமாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறப்பு நிதிகள் கிடைக்கும்போது பின் தங்கிய பகுதிகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

பிரதேச சபைக்கு உட்பட்ட 12 வட்டாரங்களுக்கும் தலா 18 லட்சம் ரூபா வீதம் 2 கோடியே பதினாறு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. ஒருவட்டாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர் கள் இருந்தால் அவர்களே தமது பகுதிகளுக்குரிய அபிவிருத்திகளைக்கலந்தாலோசித்து முடிவெடுப்பது என்று சபையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-26,173)

# ஒளிவிழாவும் மதிப்பளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பாதுகாப்பு அலுவலர் நலன்புரி கூட்டுறவு சங்கத்தின் ஒளிவிழாவும் மதிப்பளிப்பு நிகழ்வும் வணிக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை சங்கததலைவர் எஸ்.செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன், பதிவாளர் வி.காண்டீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.பாதுகாப்பு சேவையில் சிறப்பாக பணியாற்றிப் பதவி உயர்வு பெற்றவர்கள் மதிப்பளிக்கப்பட்டதுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.






# இளம் புறாக்களின் பந்தயத்தின் வெற்றியாளர்களுக்கு பரிசுகள்

## *வெற்றிக் கிண்ணங்களோடு பண முடிப்பும்*

யாழ்ப்பாணம்,டிசெ.18

வடக்கு மாகாண பந்தயப் புறாக் கழகங்களின் ஒன்றியம் நடத்திய இளம் புறாக்களின் பெரும் பந்தயத் தொடரில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விடுதியில் இடம்பெற்றது.

கிழக்கில் இருந்து மேற்கு வரையாக முல்லைத்தீவு, வவுனியா, சிலாவத்துறை ஆகிய மூன்று விடுவிப்புப் புள்ளிகளில் இருந்து நடத்தப்பட்ட 100 கிலோ மீற்றர்கள் வான் தூரத்திற்கான போட்டிகளில் வெற்றிபெற்ற புறாக்களுக்கான சான்றிதழ்கள், வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் தலைமை அதிதியாக மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் நிபுணரும் பறவைகள் ஆர்வலருமான மருத்துவர் கு.சுரேஸ்குமார் கலந்துகொண்டார். சிறப்பு அதிதிகளாக அரச கால்நடை அறுவைச் சிகிச்சைநிபுணர்களான மருத்துவர் எஸ்.திசாந்தன் மற்றும் ஆர்.பிருகஸ்வினி ஆகியோரும் மதிப்புறு அதிதிகளாக ஜே.ஜெகன், எஸ்.சிறீதர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

வெற்றியாளர்களுக்கான பணப் பரிசுகளையும் வெற்றிக் கோப்பைகளையும் சான்றிதழ்களையும் விருந்தினர்கள் வழங்கி மதிப்பளித்தனர்.

பபுகயா எனப்படும் பந்தயப் புறாக்கள் கழகம் யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு ஒன்றியம் ஆகியவை இணைந்து இந்தப் பரிசளிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

முல்லைத்தீவில் இருந்தான போட்டியில் முதலிடத்தை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த க.தயாளனின் புறாவும், வவுனியாவில் இருந்தான போட்டியில் முதலிடத்தைப் புத்தூரைச் சேர்ந்த ஏ.துசாந்தனின் புறாவும், சிலாவத்துறையில் இருந்தான போட்டியில் முதலிடத்தை வேலணையைச் சேர்ந்த ஏ.சதீஸ்குமாரின் புறாவும் தட்டிச் சென்றன.

2018ஆம் ஆண்டு பந்தயப் பருவத்தின் கடைசிப் பந்தயமான இந்த இளம் புறாக்களின் பெரும் பந்தயப் போட்டியில் மூன்று பந்தயங்களிலும் சிறப்பாகப் பறந்த சரவணையைச் சேர்ந்த ரி. செந்தூரனின் புறா, இந்த ஆண்டுக்கான சிறந்த இளம் புறா என்கிற பட்டத்தையும் கோப்பையையும் தட்டிச் சென்றது.

அத்தோடு மூன்று பந்தயங்களுக்குமாக மொத்தமாக 42 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டது என்று பபுகயா ஆட்சிக் குழுத் தலைவர் ரி.நிதர்சன் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டில் இலங்கையின் மிகப் பெரும் பந்தயமான 400 கிலோ மீற்றர்கள் வான் தூரத்தை கடப்பதே எமது முக்கிய இலக்கு, அதற்கான ஊக்குவிப்பு மற்றும் தயார்ப்படுத்தல்களாகவே இந்த வருடத்துப் பந்தயங்களையும் பரிசளிப்பு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்வதாக பபுகயாவின் செயலாளர் என்.கே.சர்மா தெரிவித்தார். (ஐ)

# கிராமத்தை பிரிக்காதீர் என்று பிரதேச செயலகத்தில் மனு

யாழ்ப்பாணம்,டிசெ.18



இணுவிலில் இருந்து எங்களை பிரிக்க வேண்டாம் என வலியுறுத்தி ஜே/189 கிராம சேவகர் பிரிவு மக்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்று காலை மனுக் கையளித்தனர்.

வலி.தெற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே/189 கிராம சேவகர் பிரிவில் நீண்டகாலமாக வாழ்ந்து வரும் எம்மை பிரதேச சபைகளை நகர சபைகளாக மாற்ற மேற்கொள்ளப்பட்டுள்ள எல்லை வரம்பின் போது இணுவில் கிராமத்தை நல்லூருடன் இணைக்கவுள்ளனர். இதனை நாம் நிராகரிக்கின்றோம். எமது இணுவில் கிராமத்துக்கு வலி தெற்கு பிரதேச செயலகம்,வலி.தெற்கு பிரதேச சபை என்பன மிக அருகாமையில் உள்ளன. இதனை பிரிப்பதால் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு எமது மக்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே எமது கிராமத்தை வேறு பிரிவுடன் பிரிக்க நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மனு நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-8)



*யாழ்ப்பாணம் தாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் கஜமுகசூர சம்கார நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.* (ஐ)

# ஒளிவிழா நிகழ்வு


கொடிகாமம், டிசெ. 18
துணுக்காய் பிரதேச சபையின் ஒளி விழாநிகழ்வுகள்நாளைபுதன்கிழமை காலை 10 மணிக்கு, துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளர் அ.அமிர்தலிங்கம்தலைமையில்நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர்களும், அலுவலர்களும் கலந்து கொள்வதுடன் அலுவலர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (159)

# மெதடிஸ்த ஆலயத்தில் கிறிஸ்மஸ் நிகழ்வு

மன்னார்,டிசெ.18
மன்னார்மெதடிஸ்ஆலயத்தில்கிறிஸ்மஸ் நிகழ்வுகள் ஆலயக் குரு அருட்பணி .கே.ஜெகதாஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றன.
முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட முகாமைக்குரு அருட்பணி ரவி முருகப்பிள்ளை கலந்து கொண்டார். (60.56)

# தொழில் தகைமை கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு,டிசெ.18
தொழில்த் தகைமை கற்கை நெறியை முழுநேரமாகவும் பகுதி நேரமாகவும் இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தி வருகிறது இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், பாலிநகர் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் தொழிற்பயிற்சி நிலையங்களில் இந்த பயிற்சிகள் நடைபெறுகின்றன.
பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்,இருசக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்,வீட்டு மின் இணைப்பாளர், தையல்,வெதுப்புனர்,அழகுக்கலையும் சிகை அலங்காரமும்,அலுமினியம் பொருத்துநர்,கணனி வன்பொருள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர்,மோட்டார் வாகனம் திருத்துனர் மற்றும் இணையத்தள் வடிவமைப்பாளர் போன்ற கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளாகும்.
கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம்,நீதிமன்ற வீதி, மாங்குளம் முதன்மை வீதி , முல்லைத்தீவு, அல்லது பாலிநகர் தொழிற்பயிற்சி நிலையம்,14 ஆம் கட்டை,மாங்குளம் வீதி, முல்லைத்தீவு, எனும் முகவரிகளுக்கு ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும், பயிற்சிகள் அனைத்தும் இலவசம் எனவும் அறியத்தந்துள்ளனர்.





# முல்லைத்தீவில் தொடர்ந்தும் கடல் சீற்றம் கரையோர மக்களின் இயல்பு நிலை பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ.18
**முல்லைத்தீவு – சாளை தொடக்கம் நாயாறு வரையான கடற்கரையோரப் பகுதிகளில் இரண்டாவதுநாளாகநேற்றும்கடல்ச்சீற்றம்ஏற்பட்டுள்ளது. கடல்அலையின்தாக்கம்சற்றுகுறைந்துள்ள நிலையில், நேற்றைய இரவு, கடல் அலைசீற்றத்தினால் கடல்நீர் கரையோர மக்களின் வாடிகளுக்குள்ளும், வீடுகளுக்குள்ளும் புகுந்துள்ளதுடன் சில இடங்களில் தேங்கியுள்ளது.**

முல்லைத்தீவு,மாத்தளன், புதுமாத்தளன், பொக்கணை மற்றும் செல்வபுரம்,கள்ளப்பாடு, சிலாவத்தை,தீர்த்தக்கரை, உப்புமாவெளி,அளம்பில் போன்ற பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்துள்ளது.
இந்தப் பகுதிகளில் பத்துவரையான மீனவர்களின் வாடிகள் கடல்அலைகளால்அடித்துவீழ்த்தப்பட்டுள்ளது டன், சில படகுகள் சேதமடைந்துள்ளன. கரையோர வீதிகளைத் தாண்டி மக்களின்காணிகளுக்குள்கடல்தண்ணீர்சென்றுள்ளதனால், கள்ளப்பாடு தீர்த்தக்கரை கரையோர வீதியால் பயணிக்கமுடியாத நிலைஏற்பட்டுள்ளது.
இந்தப் பகுதிகளைச் சேர்ந்த ஐநூறு வரையான கடற்றொழிலாளர்கள் கடந்த ஒரு வாரமாகக் கடற்றொழிலுக்குச் செல்ல முடியாத நிலையில் படகு இயந்திரங்களை வீதிகளில் கொண்டுவந்து வைத்துள்ளனர். பல வாடிகளுக்குள் கடல் நீர்புகுந்து கொண்டுள்ளதால் உணவு பொருள்கள் பல சேதமடைந்துள்ளதுடன் கடற்கரையில் போடப்பட்ட வலைகளும் அலையினால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாகமீனவர்கள் தெரிவித்துள்ளனர்.
சிலாவத்தைத் தீர்த்தக்கரைப் பகுதியில்கடல்அலைசீற்றத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு, அருகில் உள்ள தனியார் நிறுவனம்; கனரக இயந்திரங்களைக் கொண்டுவந்து மீனவர்களின்படகுகளைக்கரையில் இருந்து இழுத்து மேட்டு நிலத்துக்குக் கொண்டுவந்து விட்டுள்ளனர்.
கிராம அலுவலர் பதிவுகளை மேற்கொண்டாலும் தங்களை எதுவித அரச அதிகாரிகளும் வந்து பார்வையிடவில்லை என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ரி3)

# 'மூங்கிலாகும் முட்புதர்' நாவல் வெளியீடு



வவுனியா,டிசெ.18
மைதிலி தயாபரனின் மூங்கிலாகும் முட்புதர் நாவல்வெளியீட்டு நிகழ்வு வவுனியா கோயில்குளம் அருளகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
ஆறுமுகம் நவரத்தினராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வவுனியா நகரசபை உப நகரபிதா சு.குமாரசாமி, மன்னார் மாவட்ட கலாசார அலுவலர் சு.நித்தியானந்தன், பிரதேச கலாசார அலுவலர் வீ.பிரதீபன், மூத்த சட்டத்தரணி தயாபரன் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
இதன் போது கோயில்குளம் சிறுவர் இல்லத்தின் சிறுவர்களுக்குப் பாடசாலை புத்தகப் பைகளும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (110)

# வாழ்வாதார உதவியாக ஆடுகள் வழங்கல்

முல்லைத்தீவு,டிசெ.18
பெல்ஜியம் நாட்டில் வசித்து வரும் சுந்தரேசன் தம்பதியினரின் மகள் சு.பியர்னாவின் பிறந்தநாளை முன்னிட்டு, முல்லைத்தீவு, நெடுங்கேணி, கரடிப்பிலவுப் பகுதியில் வசித்து வரும் பெண் தலைமைத்துவக் குடும்பத்தலைவியான த.இராசமணி என்பவருக்கு வாழ்வாதார உதவியாக 35 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. (222)



# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு, டிசெ.18
நெடுங்கேணியில் ரி.ஆர்.ரி சமூகப்பணி ஊடாக 100 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
லண்டனைச் சேர்ந்த ரவி - ரஞ்னி இணையரின் மகன் சஞ்சீவனின் பிறந்த தினத்தை முன்னிட்டு 15ஆம் திகதி நெடுங்கேணி மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
பாடசாலையின் அதிபர் செ.பவேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் , நெடுங்கேணி மற்றும் ஒலுமடு ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
இந்நிகழ்வில்வன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ம.தியாகராசா, வவுனியாவடக்குபிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.
ரி.ஆர்.ரி சமூகப் பணியினூடாக வருடாவருடம் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழுகின்ற மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. (110.222)



# தொலைபேசிகள் திருட்டு சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, டிசெ.18

கிளிநொச்சி ஏ9 வீதியில் அமைந்துள்ள தொலைபேசி விற்பனை நிலையத்துக்குள் கடந்த 8 ஆம் திகதி அதிகாலையில் இருவர் வாளுடன் நுழைந்து 60ற்கும் மேற்பட்ட கைத் தொலைபேசிகளை களவாடிச்சென்றனர். இந்த திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தற்போது வள்ளிபுனத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.


கிளிநொச்சி மாவட்டத்தின் பழைய மாவட்டச் செயலகம் முன்பாக அமைந்திருந்த 'அருந்ததி வோள்ட் வைட் மொபைல்' விற்பனையகத்துக்குள் கடந்த 8 ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் இருதிருடர்கள் கடையை உடைத்து உட்புகுந்து. பலலட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசிகளை நீண்டநேரத் தேடுதலில் ஈடுபட்டுதிருடிச் சென்றனர். திருடப்பட்ட கைத் தொலைபேசிகளின் பெறுமதி சுமார் 15 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடையவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

திருடர்கள் கடைக்குள் உட்புகுவது முதல் களவாடிச் செல்வது வரையில் கடையில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணியில் பதிவாகியிருந்தது.

கடை உரிமையாளர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து, கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டிருந்த நிலையில், முல்லைத்தீவுமாவட்டம் வள்ளிபுனத்தைச்சேர்ந்த இருவரிடம் இருந்து குறித்த வர்த்தக நிலையத்திலிருந்து களவாடப்பட்ட 30 கைத்தொலைபேசிகள் தற்போது பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

எஞ்சிய தொலைபேசிகள் தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் தொடர்ந்தும் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (105)





## மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வு மீண்டும் ஆரம்பம்

மன்னார், டிசெ.18

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வு பணியானது, மீண்டும் நேற்று திங்கட்கிழமை காலை சட்டமருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தலைமையில் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை 116 ஆவது நாளாக இடம் பெற்ற அகழ்வு பணி,மற்றும் அளவிடும் பணிகளுக்கு பின்னர் அகழ்வு பணி இடைநிறுத்தப்பட்டிருந்தது. நேற்று திங்கட்கிழமை 117 ஆவது நாளாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதை குழியில் இருந்து இதுவரை 21 சிறுவர்களின் எலும்புக்கூடுகள் உட்பட ,மொத்தம் 276 முழு மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தற்போது அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகள் முழுவதையும் அப்புறப்படுத்தும் பணிகள் அதிகளவில் இடம் பெற்றன. அவற்றில் 269 மனித எலும்புக்கூடுகள் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் அகழ்வுப் பணிகளின்போது எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் 'காபன்' பரிசோதனைக்காக புளோரிடாவுக்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனவரி மாதம் காபன் பரிசோதனைக்காக அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நடை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (56)

## சட்டவிரோதமான மணல் அகழ்வால் பாதிப்படையும் நிலையில் மன்னார்

### மன்னார் பிரதேச சபையினர் தெரிவிப்பு

மன்னார், டிசெ.18

மன்னார்பிரதேசசபைஎல்லைப்பகுதிக்குள் நாளாந்தம் சட்டவிரோதமான மணல் அகழ்வுப்பணிகள் இடம்பெற்று வருவதால், நான்கு பக்கங்களாலும் கடலால் சூழப்பட்டுள்ள மன்னார்த் தீவு அழிவை நோக்கிச் செல்லும் என மன்னார்பிரதேசசபையினர்தெரிவித்துள்ளனர்.

மன்னார்ப்பிரதேசசபையின்மாதாந்தக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் பேசப்பட்டு, மணல் அகழ்வை முற்றாக நிறுத்துவதற்கு வாக்கெடுப்பு நடத்திய போது தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவரைத் தவிர ஏனையோர் சாதகமாக வாக்களித்தனர்.

மன்னார் பிரதேச சபையின் ஒன்பதாவது மாதாந்தக் கூட்டம் விசாளர் எஸ். எச்.எம்.முஜாஹீர்தலைமையில் கடந்த வாரம்நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் 21 உறுப்பினர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் கலந்து கொண்டனர்.

மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில்அனல்மின்சாரத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் நடுக்குடா கடலோரத்துக்கு அருகாமையிலிருந்த மணல்த் திடல்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

சுனாமி ஏற்பட்ட காலத்தில் இவ்வாறான மணல் திடல்களே மன்னார்ப் பகுதியைக் கடல் வெள்ளத்திலிருந்து காப்பாற்றின.

அத்துடன் மணல் அகழ்வு பல இடங்களிலும்நடைபெறுவதால்நான்குபக்கங்களும் கடலால் சூழப்பட்டிருக்கும் மன்னார்த் தீவு வெகு விரைவில் கடலில் மூழ்கும் அபாயம் இருப்பதாக கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

இந்தவிடயம்தொடர்பில்தவிசாளர் எஸ். எச்.எம்.முஜாஹீர் தெரிவித்ததாவது: சபையிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து மன்னார் பிரதேச சபை பகுதியில் மணல் அகழ்வு செய்வதை, தடை செய்வோம் எனத் தீர்மானித்து கையொப்பம் இட்டுத் தந்தால் நான் முற்றாக தடைசெய்வதற்கான முயற்சியைசெய்வதாகதெரிவித்துஒவ்வொரு உறுப்பினர்களிடமும்வாய்மூலம்சம்மதம்பெறப்பட்டது.

அப்பொழுதுஅமர்வில்கலந்துகொண்ட 20 உறுப்பினர்களில் தமிழ்தேசியகூட்டமைப்பு உறுப்பினர் ஜெ.கொன்சன் குலாஸினைத்தவிர ஏனையோர்தடை செய்ய சம்மதம் தெரிவித்து வாக்களித்தனர். உறுப்பினர் ஜெ.கொன்சன் குலாஸ் முதலில் தடைசெய்ய வாக்களிக்க தயக்கம் காட்டிக்கொண்டிருந்த பொழுதும் , பின் கருத்து தெரிவிக்கையில் நடுக்குடாப் பகுதியில் அனல் மின்சார நடவடிக்கை எடுப்போரால் கடற்கரை மணல் திட்டிகளை அழிக்கும் நடவடிக்கையை முதலில் தடை செய்யுங்கள் எனத் தெரிவித்தார்.

இந்தவிடயத்தில்அனைத்துஉறுப்பினர்களும் ஒருமித்த குரலில் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே எமது பிரதேச பகுதிக்குள் மணல் அகழ்வு செய்யாதிருக்கும் நடவடிக்கையை முன்னெடுப்பேன் எனத் தவிசாளர் தெரிவித்தார். (60)

## விபத்தில் படுகாயமடைந்த பெண் சாவு

வவுனியா, டிசெ.18

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் கடந்த 5 ஆம் திகதி இடம் பெற்ற விபத்தில் 75 வயதான பெரிய சாமி செவனை என்ற மூதாட்டி காயமடைந்து, நேற்று முன்தினம் சாவடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கிசென்ற டிப்பர் வாகனம் செட்டிகுளம் தபால் நிலையத்துக்கு அருகாமையில் சென்றுகொண்டிருந்தபோது, வீதி வழியே மாடுகளை துரத்திச்சென்ற வயோதிப்பெண்ணை டிப்பர் வாகனம் மோதியதில் விபத்து இடம்பெற்றதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த பெண்ணை அந்தப் பகுதியில் நின்றவர்கள் மீட்டு, செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றபட்ட பெண், தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில், செட்டிகுளம் பிரதேச மருத்துவமனைக்கு மாற்றபட்டு வீட்டுக்குச் சென்றிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் அதிகாலை அவர் சாவடைந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளைச் செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (110)



## வீட்டுக்கூரைக்கான நிதி வழங்கல்

வவுனியா, டிசெ.18

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கம்பரலிய வேலைதிட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக வீட்டுக் கூரை சீரமைப்பிற்காக தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கும்திட்டத்தின்100குடும்பபயனாளிகளுக்கானகருத்தரங்கு நேற்றுமுன்தினம் வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வழங்கப்படுகின்றஉதவித்திட்டங்களைஎவ்வாறானமுறையில் பயன்படுத்தவேண்டும் என்று தெளிவுபடுத்தல்கள் இடம்பெற்றன.

குறித்த நிதி 100 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


நிகழ்வில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ. மயூரன் கலந்துகொண்டார். (110)

## சிவபுரம் கிராம மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் சந்திப்பு

வவுனியா,டிசெ.18

வவுனியா சிவபுரம் கிராம மக்களுக்கும் பூவரசன்குளம் பொலிஸாருக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணியளவில் சிவபுரம் நூலக பொதுமண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிவபுரம் கிராம அலுவலர், சிவில் பாதுகாப்புக்குழு தலைவரும் அரபா வித்தியாலய அதிபருமாகிய எஸ். புகாரி, பூவரசன்குளம் பொலிஸ் அலுவலர் ஆர். ஏ.டீ. ரூபசிங்க, ரி.எம்.ஹீன்கெந்த, கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாதர் அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்தக் கிராம அலுவலர் பிரிவிலுள்ள 7 கிராமங்களிலும் உள்ள சட்ட ரீதியான பிரச்சினைகள், போதைப்பொருள் பாவனை, கட்டாக்காலி மாடுகளினால் ஏற்படும் பிரச்சினை கள், பாடசாலை மாணவர்கள் இடைவிலகல் தொடர்பான



பிரச்சினைகள் ஆகியன கலந்துரையாடப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கிடையே போதைபொருள் பாவனை அதிகரித்துள்ளமை பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது. (205)

### வவுனியாவில் பெரும்போக நெற்செய்கைக்காக

# 90 வீதமான காணிகளில் விதைப்பு நடவடிக்கைகள்

*மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவிப்பு*



வவுனியா, டிசெ.18

**வவுனியாவில் பெரும்போக நெற்செய்கைக்காக 90 வீதமான வயற் காணிகளில் விதைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார்.**

வவுனியாவில் இந்த முறை பெரும்போக பயிர் செய்கைதொடர்பாக கேட்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான பெரும்போக விதைப்பு நடவடிக்கைளுக்காக 90 வீதமானகாணிகளில்விதைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

661 சிறிய குளங்களில் விதைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் பெரிய நீர்பாசனத் திட்டத்தில் பாவற்குளத்துக்குக் கீழான வயல் நிலங்களில் ஒருபகுதி ஏற்கனவே விதைக்கபட்டுவிட்டன. ஏனைய பகுதிகளில், விதைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

இதுவரை 15ஆயிரத்து 640 ஏக்கர் காணிகளுக்கு உரமானியம் வழங்கபட்டுள்ளது. ஒவ்வொரு கமக்காரர் அமைப்புகளுக்கும் ஒவ்வொருதினங்கள்ஒதுக்கபட்டு, அவர்களுக்கான உரமானியம்வழங்கபட்டு வருகின்றது.

காணி சீரமைப்பு நடவடிக்கைகளால், உரமானியத்தை பல விவசாயிகள் எடுக்கவில்லை. சில விவசாயிகள் உரமானியம் கிடைக்க வில்லை என்று கூறுகின் றனர். எனவே கமக்கார அமைப்புகள்மிக விரைவாகப் பட்டியல் களைச்சமர்ப்பித்து உரமானியத்ப்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்தகாலத்தில் ஏற்பட்ட மழைகாரணமாக 610 ஏக்கர் வரையான காணிகள் அழிவடைந்திருந்தன.

அது தொடர்பான தகவல்கள் விவசாய அமைச்சுக்கும், எமது தலைமைத் திணைக்களத்துக்கும் அனுப்பியுள்ளோம்.

எனவே உரமானியத்தை பெற்று அழிவைச் சந்தித்த விவசாயிகள் கமநல சேவை நிலையங்களுக்கு அறிவித்து, விண்ணப்பப்படிவங்களைப்பூர்த்திசெய்து கொடுக்குமாறும், அழிவுகள்தொடர்பாகஒளிப்படங்கள் எடுத்திருந்தால் அவற்றையும்சமர்ப்பிக்குமாறும் தெரிவித்தார்.

அத்துடன் வவுனியாவில் உழுந்து வலயத்தின் கீழ் இம்முறை16 ஆயிரம்ஏக்கரில், ஒரு இலட்சத்து 60 ஆயிரம் கிலோ உழுந்து அரைமானியத்தில்கொடுப்பதற்கு இருந்தோம் எனினும் தொடர்ச்சியான மழைகாரணமாக உழுந்து செய்கை பின்நோக்கிச்சென்றுள்ளது. இதனால் 40ஆயிரம்கிலோ உழுந்தைவழங்குவதாகத் தீர்மானித்துள்ளோம். இதுவரை4ஆயிரம்ஏக்கர்வரையிலான காணிகளுக்கு உழுந்தைவிநியோகம்செய்துள்ளோம்.

சிலவிவசாயிகள் அதனை செய்கை பண்ணியிருந்தாலும், பலர்செய்கை பண்ணவில்லை. எனவே உரியவிவசாயிகளின் களங்களை ஆய்வுசெய்து கொண்டிருக்கின்றோம். உழுந்தைப் பெற்ற விவசாயிகள் அதனைப் பயன்படுத்தாமல் விடாது பயிரிடுமாறு இந்த நேரத்திலேவேண்டிக்கொள்கின்றேன்- என்றார். (110)

### பாதணி, சீருடைகளுக்கான வவுச்சர்கள் வழங்கப்படுகிறன

#### வலயப் பணிப்பாளர்கள் எடுத்துவரவேண்டும்

அச்சுவேலி, டிசெ.18

பாடசாலை மாணவர்களுக்குச் சீருடை கொள்வனவுக்கான வவுச்சர்கள் கஸ்ரப் பிரதேச மற்றும் அதிகஸ்ரப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான பாதணி (சப்பாத்து) கொள்வனவுக்கான வவுச்சர்கள் இந்தவாரம். வழங்கப்படவுள்ளன.

சீருடை மற்றும் சப்பாத்துக் கொள்வனவுக்கான வவுச்சர்களை பாடசாலை விடுமுறைக் காலத்தில் வழங்குவதற்கு வசதியாக வவுச்சர்கள்வலயக்கல்விப்பணிப்பாளர்களிடம் கொழும்பு கல்வி அமைச்சுவழங்கிவருகிறது.

மாணவர்களுக்கான சீருடை மற்றும் பாதணி கொள்வனவுவவுச்சர்களை மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன்னர் மாணவர்கள் முன்னிலையில் பெற்றோரிடம் கையளிப்பதற்குஏற்பாடுகள்செய்யப்பட்டிருந்த போதிலும் அரசியல் குழப்பநிலையால்திட்டமிட்ட அட்டவணையின்பிரகாரம் செயற்பாடுகள் நடைபெறவில்லை.

வவுச்சர்களை உடனடியாக வழங்குவதற்கு வசதியாக உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு வசதியாக வலயக் கல்விப் பணிப்பாளர்களை கொழும்பு அரசின் கல்வி அமைச்சு கொழும்புக்கு அழைத்து வவுச்சர்களை அவர்களிடம் கையளித்து உரிய அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வவுச்சர்களைமாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் கையளிக்கும்பணிகள்இந்த வாரமே பாடசாலைக்ளில் நடைபெறவுள்ளன. வவுச்சர்கள் கையளிக்கும் பணிகளை கல்வி அதிகாரிகள் கண்காணிப்புச் செய்யவுள்ளனர்.

சீருடைக்கான வவுச்சரைப் பயன்படுத்தி சீருடைக்கான துணிகளையும் கஸ்ர - அதிகஸ்ர பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு சப்பாத்தும் கொள்வனவு செய்ய வேண்டும். வேறு பொருள்களைகொள்வனவுசெய்யக் கூடாது. வவுச்சர்களுக்கு வேறுபொருள்களை வர்த்தகர்களும் வழங்கக் கூடாது என்று கண்டிப்பான அறிவுறுத்தல்கள் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

இவைதவிர கல்விப் பணிப்பாளர்களுடன் எந்தவொரு கலந்துரையாடலும் இடம் பெறவில்லை.

இலங்கையின் சகல வலயங்களுக்குமான கொடுப்பனவுச்சிட்டைகள்ஏற்கனவே தயார் செய்யப்பட்டு பொதி செய்யப்பட்டிருந்தன. முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் படம் பொறித்த நிலையில் கொடுப்பனவுச் சிட்டைகள் தயார் செய்த நிலையில் இலங்கையில்ஏற்பட்டஅரசியல் குழப்பத்தால் விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது அவற்றை விநியோகிக்குமாறு அரசதலைவர் பணித்திருந்தார். அதன் படிஇவைவிநியோகிக்கப்படுகின்றன. (4.11.105)


## ரணில் மீண்டும் பதவியேற்பு ஆதரவாளர்கள்குதூகலிப்பில்

வவுனியா, டிசெ.18

இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, புதியதலைமை அமைச்சராக அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன முன்னிலையில்பதவியேற்றதையடுத்துவவுனியாவிலுள்ளஐக்கியதேசியக்கட்சியின்ஆதரவாளர்கள்வெடிகொழுத்தி, பாற்சோறுவழங்கிவெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியாவில் கட்சியின் ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து, ஹொறவப்பொத்தான வீதியிலுள்ள, தினச்சந்தைக்கு முன்பாக வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் "தலைமை அமைச்சர் வாழ்க வாழ்க" என்று தமது வாழ்த்துக்களையும் ஏனைய கட்சி உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

இதில்வவுனியாமாவட்ட ஐ.தே.கக் கட்சியின் அமைப்பாளர்கள்மற்றும்மாவட்ட இணைப்பாளர்கள், பிரதேசசபைஉறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



## மாணவர்களுக்கு சீருடை வழங்கல்

முல்லைத்தீவு, டிசெ.18

முல்லைத்தீவுமாவட்டம் புதுக்குடியிருப்புப்பிரதேசத்து உட்பட்டமூங்கிலாற்றுப்பகுதியில்சிவன்அறக்கட்டளையினரால் 132 மாணவர்களுக்குப் பாடசாலை சீருடைகள் கடந்த 16 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டுள் ளன.

பிரதேசமக்களால்விடுக்கப்பட்டகோரிக்கைக்குஅமைய மூங்கிலாறு தெற்கு, மூங்கிலாறு வடக்கு, தேராவில் கிழக்கு, இருநூறு வீட்டுத் திட்டம், மில்லர் குடியிருப்பு, றகுபதிகுடியிருப்பு, போன்றகிராமங்களைச்சேர்ந்த132 பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு, மூங்கிலாறு ஆரம்ப பாடசாலையில் வைத்து வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கிராம அமைப்புக்கள் மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் எஸ். ஜோன்சன், சிவன் அறக்கட்டளையின் நிறுவுநர் கணேஸ் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்குச் சீருடைகளை வழங்கி வைத்துள்ளனர். (ரி3)



## சுகாதாரமான சமூகத்தை உருவாக்குவற்கு தடையாகவுள்ளோர் மீது சட்ட நடவடிக்கை

முல்லைத்தீவு, டிசெ.18

சுகாதாரமான சமூகத்தை உருவாக்கத் தடையாக உள்ளோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் க.விஜிந்தன்கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் ஊடகங்களுக்கான அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்கு உட்பட்ட சந்தை வியாபாரிகள், பலசரக்கு வர்த்தகர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரிவோர் தமது கடமை நேரத்தில் வெற்றிலை சப்புதல், புகைப்பிடித்தல்என்பனமுற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

இந்த விதி முறைகளை மீறி இவ்வாறானசெயற்பாடுகளில்ஈடுபடும்வியாபாரிகள் மற்றும் உரிமையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், வியாபார உரிமமும் இரத்துசெய்யவேண்டியநிலையும் ஏற்படலாம். வியாபார நேரங்களில் பயனாளிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி ஆங்காங்கே வெற்றிலைதுப்புவதாலும், புகைப்பதாலும் தாம்சுகாதாரரீதியாகப்பலஅசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக பொதுமக்கள் பல தடவைகள் முறையிட்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டுசுகாதாரமிக்கசமூகத்தைக் கட்டியெழுப்ப உரிய தரப்பினரை ஒத்துழைக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ரி3)

# முஸ்லிம்களுக்கு எதிராக முகநூல் பதிவு நேதன்யாகுவின் மகனின் கணக்கு முடக்கம்



ஜெருசலேம்.டிசெ.18

இஸ்ரேலின் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நேதன்யாகுவின் மகன் முஸ்லிம்களுக்கு எதிராகத் தன்னுடைய முகநூல் தளத்தில் பதிவிட்டதால் அவரது முகநூல் கணக்கை முகநூல் நிர்வாகம் முடக்கி வைத்தது.

இஸ்ரேலைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் வகையில் பெஞ்சமின் நேதன்யாகுவின் மகன் யாய்ர் நேதன்யாகு தனது முகநூல் பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டு இருந்தார்.

"1. இஸ்ரேல் மண்ணை விட்டு யூதர்கள் அனைவரும் வெளியேறும் வரை இந்த நாட்டில் அமைதி இருக்காது. நான் இரண்டாவதை நம்புகிறேன்" என அந்தப் பதிவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பதிவு வெளியான சில நிமிடங்களில் யாய்ர் நேதன்யாகுவின் முகநூல் பக்கம் முடக்கப் பட்டது. பின்னர் சர்ச்சைக்குரிய அந்தக் கருத்து நீக்கப்பட்டு சுமார் 24 மணிநேரத்துக்குப் பின்னர் அந்த பக்கம் செயற்பட ஆரம்பித்தது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாய்ர் நேதன்யாகு, "முகநூல் பொலிஸ் என்னைக் கண்டுபிடித்து விட்டது வாழ்த்துகள்" - என்றார்.



## சவூதி இளவரசர் மீது கொலைப் பழி அமெ.வுக்குச் சவூதி அரசு கண்டனம்



ரியாத்.டிசெ.18

துருக்கி நாட்டில் சவூதித் தூதரகத்தில் கொல்லப்பட்ட சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமாலின் கொலைக்கும் சவூதி இளவரசர் முஹமது பின் சல்மானுக்கும் தொடர்பு இருப்பதாக அமெரிக்க நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்துக்குச் சவூதி அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜமால் கொல்லப்பட்ட விடயத்தில் சவூதி இளவரசருக்குத் தொடர்பு இருப்பதாக அமெரிக்க நாடாளுமன்றம் கடந்த வியாழக்கிழமை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. மேலும் ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்து சவூதி அரேபியா போர் ஆயுதங்கள் கொள்முதல் செய்வதையும் எதிர்த்து அமெரிக்கா அந்தத் தீர்மானத்தில் கருத்துத் தெரிவித்தது. இதன் பின்னர் ஜமாலின் கொலையில் சவூதி இளவரசருக்குத் தொடர்பு இருப்பதாக அமெரிக்க நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்துக்குச் சவூதி அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

'சவூதி அரேபியா நாட்டின் இறையாண்மையை அவமதிக்கும் வகையிலும், வளைகுடா பிராந்தியம் மற்றும் பன்னாட்டு அளவில் சவூதி அரேபியாவுக்கு இருக்கும் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடும் வகையிலும், போதிய ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை மட்டுமே அடிப்படையாக வைத்து அமெரிக்க நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைச் சவூதி அரசு நிராகரிக்கிறது.

மேலும், எங்கள் நாட்டின் தலைவரை அவமதிக்கும் வகையிலும், உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யும் விதமாகவும் சுமத்தப்படும் அனைத்து விதமான குற்றச்சாட்டுகளையும் எங்கள் அரசு புறக்கணிக்கிறது' எனச் சவூதியின் அயலுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பான் விடுதியில் வெடி விபத்து

சப்போரேர.டிசெ.18

ஜப்பானின் சப்போரோ நகரில் உள்ள விடுதி ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 42க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். ஜப்பானின் சப்போரோ நகரில் உள்ள உணவு விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு இந்த வெடி விபத்து ஏற்பட்டது. வெடி விபத்தைத் தொடர்ந்து பக்கத்து விடுதிக்கு அருகில் இருந்த ஒரு கட்டடமும் இடிந்து விழுந்ததாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

வெடி விபத்தைத் தொடர்ந்து எரிவாயு கசிந்த வாசனையும் உணரப்பட்டதாகக் காயமடைந்தவர்கள் தெரிவித்தனர். விபத்து குறித்துத் தகவலறிந்து, 20க்கும் மேற்பட்ட தீயணைப்பு வண்டிகளில் சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்தத் தீ விபத்தில் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இரண்டுக்கும் மேற்பட்டோர் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்பிருப்பதாக சப்போரோ நகரத் தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர்.





## 2018ஆம் ஆண்டுக்கான அழகியாக பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண் தெரிவு

பாங்கொக்.டிசெ.18

2018ஆம் ஆண்டுக்கான உலக அழகியாக (மிஸ் யுனிவர்ஸ்) பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த கேட்ரியோனா கிரே தெரிவு செய்யப்பட்டார். இந்தத் தெரிவில் 2ஆம் இடத்தைத் தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த பெண்ணும் 3ஆவது இடத்தை வெனிசுலாவைச் சேர்ந்த பெண்ணும் பெற்றனர்.

2018ஆம் ஆண்டுக்கான 67ஆவது உலக அழகிப்போட்டியானது தாய்லாந்தில் உள்ள நான்தாபுரி மாநிலத்தில் உள்ள முவாங்தாங் எனும் நகரில் நடந்தது. 94 நாடுகளைச் சேர்ந்த 92 பெண்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றனர். 1992ஆம் ஆண்டு 2005ஆம் ஆண்டுகளுக்குப் பின் தாய்லாந்து இந்த 'மிஸ் யுனிவர்ஸ்' அழகிப்போட்டியை நடத்தியது.

இதில் முதல் 5 இடங்களில் வியட்நாம் பியூரிட்டோ ரிகோ, பிலிப்பைன்ஸ், வெனிசுலா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் தகுதி பெற்றனர்.

இவர்களிடையே நடந்த போட்டியில் 2018ஆம் ஆண்டுக்கான அழகியாக பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த கேட்ரியோனா கிரே தெரிவு செய்யப்பட்டார்.

## மாலைதீவு முன்னாள் அதிபரின் 65 லட்சம் டொலர்கள் முடக்கம்



மாலி, டிசெ.18

அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தேர்தல் செலவுக்காகப் பணம் திரட்டியதாக ஊழல் வழக்கில் சிக்கியிருந்த மாலைதீவின் முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீனின் பணம் 65 லட்சம் டொலர்கள் முடக்கப்பட்டது. மாலைதீவில் செப்டம்பர் மாதம் அதிபர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. மாலைதீவு முன்னேற்றக் கட்சி சார்பில் போட்டியிட்ட அதிபர் அப்துல்லா யாமீன், எதிர்க்கட்சியான மாலை தீவு ஜனநாயகக் கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது சோலியிடம் தோல்வியடைந்தார். 58.4 சதவீத வாக்குகளைப் பெற்ற முஹம்மது சோலிஹ் வெற்றிபெற்றதாக அந்த நாட்டுத் தேர்தல் திணைக்களம் அறிவித்தது. மாலத்தீவின் புதிய அதிபராக அவர் பதவி ஏற்றார்.

இதற்கிடையில், தனது பதவி, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி தேர்தல் செலவுகளுக்கு நிதி திரட்டியதாக முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீனுக்கு எதிராகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக அவரிடம் அந்த நாட்டுப் பொலிசார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில், அப்துல்லா யாமீனுக்குச் சொந்தமான வங்கி கணக்கில் உள்ள சுமார் 65 லட்சம் டொலர்கள் மதிப்பிலான பணத்தை அவர்கள் முடக்கி வைத்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## 15 பேருக்குப் பாகிஸ்தானில் சாவுத் தண்டனை

இஸ்லாமாபாத்.டிசெ.18

பாகிஸ்தானின் பெஷாவர் பகுதியில் உள்ள கிறிஸ்தவக் குடியிருப்பில் 2016ஆம் ஆண்டு நடந்த தாக்குதலில் 5 பேர் சாவடைந்துள்ளமை தொடர்பாகப் பாக்கிஸ்தான் இராணுவத்தினர் மேற்கொண்ட விசாரணையில் தலிபான் அமைப்பிலிருந்து பிரிந்து வந்த ஜமாத் உர் அஹ்ரார் என்ற ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியது தெரியவந்தது.

இந்த வழக்கை விசாரித்து வந்த இராணுவ நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட 35 பேரில் 15 பேருக்கு சாவுத் தண்டனை விதித்தும் மற்ற 20 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்தும் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.



# வட அமெரிக்காவில் மிகப் பெரிய வைரம்



வோஷிங்டன்.டிசெ.18.
கனடாவின் வடபகுதியில் இயங்கி வருகின்ற வைரக் கல் அகழ்வு நிறுவனமான 'டயாவக்' அண்மையில் ஒரு வைரக் கல்லைத் தோண்டி எடுத்தது. இதுவரையில் இந்த நிறுவனத்துக்குக் கிடைத்துள்ள வைரக் கற்களிலேயே பெரிய கல் இது என்றுக் கூறப்படுகிறது.

இதவே வட அமெரிக்காவில் இதுவரைக் கண்டெடுக்கப்பட்ட மிகப் பெரிய வைரக் கல்லாகவும் பதிவாகியிருக்கிறது.

இதன் பெறுமதி இன்னும் கணிக்கப்படவில்லை. இந்த நூற்றாண்டிலே தோண்டி எடுக்கப்பட்டுள்ள 7ஆவது பெரிய கல் இது என்று கூறப்படுகிறது. இது 552 கரட்டுடன். மஞ்சள் நிறமுடையது.

ஒரு முட்டை அளவில் உள்ளது. இந்தப் பகுதியில் 2016ஆம் ஆண்டில் 187.7 கரட் கல் ஒன்று கிடைத்தது. அந்தக் கல்லில் ஒரு சோடிக் காதணிகள் செய்யப்பட்டு அவை 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனையாகியிருந்தன.




COP24 KATOWICE
POLAND 2018

## பாரீஸ் பருவநிலை ஒப்பந்தம் 2020 க்குள் நடைமுறைக்கு

கேட்டோவைஸ்.டிசெ.18
2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பாரீஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தை 2020ஆம் ஆண்டுக்குள் நடைமுறைக்குக் கொண்டு வருவது என உடன்பாடு எட்டப்பட்டது. பாரீஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பாக 'சி.ஓ.பி. 24' என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் போலந்து நாட்டில் உள்ள கேட்டோவைஸ் நகரில் நடந்தது.

இதன்போது 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பாரீஸ் பருவநிலை மாற்ற உடன்படிக்கையை 2020ஆம் ஆண்டுக்குள் நடைமுறைக்குக் கொண்டு வருவது என உடன்பாடு எட்டப்பட்டது.


இதன்படி பூமியின் வெப்ப நிலை 2 டிகிரி செல்சியஸ் அளவு குறைக்கப்படும். இந்த பேச்சுக்குத் தலைமை வகித்த மைக்கல் குர்திகா இது பற்றிக் கூறும்போது, "பாரீஸ் பருவநிலை மாற்ற உடன்பாட்டை ஒன்றிணைத்து நடைமுறைக்குக் கொண்டு வருவது மிகப்பெரிய பொறுப்பு.

இது நீண்ட பாதையைக் கடந்து வந்துள்ளது. யாரையும் விட்டு விடாமல் இந்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்தச் செய்வதற்காக கடுமையாக உழைத்தோம்" என்று குறிப்பிட்டார்.

2020ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே காபன் வெளியேறுகிற அளவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இலக்கை உலக நாடுகள் விரைவாக எட்ட வேண்டும் என்று இதன்போது விருப்பம் வெளியிடப்பட்டது.

# அமெரிக்காவுக்கு வடகொரியா மிரட்டல்

**பியங்கியங்,டிசெ.18**
**அமெரிக்கா தங்களின் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளால் அணு ஆயுதங்களை அழிப்பதற்கான நடவடிக்கைகள் நிறுத்தப்படும் என்று வடகொரியா மிரட்டியுள்ளது.**



வடகொரியாவுடனான நட்புறவைப் பேணுவதில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எடுக்கும் முயற்சிகள் பாராட்டக் கூடியவை. ஆனால் வடகொரிய மீது அமெரிக்கா தொடர்ந்து கடந்த சில ஆண்டுகளாகவே பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. இதன் மூலம் அணுஆயுதங்களை உற்பத்தி செய்வதை வடகொரியா கைவிடும் என்று அமெரிக்கா நினைத்தால் இது அமெரிக்காவின் தவறான கணிப்பாகும். மேலும் இது எங்களுடைய அணுஆயுதங்களை அழிப்புக்கான பாதைக்கு நிரந்தரத் தடையை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளது வடகொரியா.

வடகொரிய அமைச்சர் மற்றும் அந்த நாட்டைச் சேர்ந்த இரண்டு உயரதிகாரிகள் மீது அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது. இவர்களில் ஒருவர் வடகொரிய அதிபர் கிம் ஜோங்உன்னுக்கு மிகவும் நெருக்கமானவர். இந்தப் பின்னணியிலேயே வடகொரியாவின் மிரட்டல் பேச்சு வெளிவந்துள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கை கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுத ஒழிப்புக்கான பாதையை நிரந்தரமாக மூடிவிடும் என்று வடகொரியா கூறியுள்ளது. அமெரிக்க அயலுறவுத் துறை வெளியிட்ட ஓர் அறிக்கையில் இந்த மூவர் மீதும் அடுக்கடுக்கான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கை 'அதிர்ச்சியையும், கோபத்தையும்' வெளிப்படுத்தியுள்ளது என்று வடகொரியாவின் அரச ஊடகமான கே.சி.என்.ஏ.வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**
கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா ஏவுகணை சோதனைகளை நடத்தியது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பான் கடலுக்கு அருகில் நடத்தப்பட்டன. வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வந்தன. ஆனால், எதிர்ப்புகளைச் சற்றும் பொருட்படுத்தாமல் வடகொரியா தொடர்ந்து அணு ஆயுதச் சோதனைகளை நடத்தி வந்தது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தலைமையில் வடகொரியாவின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. எனினும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளைப் பொருட்படுத்தாமல் வடகொரியா அவ்வப்போது ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வந்தது. இந்த நிலையில் தென்கொரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரியா பங்கேற்றது. அதுமுதல் வடகொரியா - தென்கொரியா உறவில் இணக்கம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து ட்ரம்ப் - கிம் இடையே சிங்கப்பூரில் சந்திப்பு ஏற்பட்டது. இந்தச் சந்திப்பில் அணு ஆயுதங்களை அழிக்க வடகொரியா சம்மதம் தெரிவித்தது.

## பாகிஸ்தானில் சிறைப்பட்டிருந்த இந்தியர் விடுதலை

இஸ்லாமாபாத்.டிசெ.18
உரிய ஆவணங்கள் இன்றிச் சட்ட விரோதமாகப் பாகிஸ்தானுக்குள் நுழைந்து பாகிஸ்தான் சிறையில் மூன்றாண்டுகள் தண்டனை அனுபவித்த ஹமித் நிஹால் அன்சாரி என்கிற இந்தியர் ஒருவர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தியாவின் மும்பையைச் சேர்ந்தவ 33வயதுடைய இவர் ஆப்கானிஸ்தான் எல்லை வழியாகப் பாகிஸ்தான் நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைந்திருந்தார். 2012ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார். உரிய ஆவணங்கள் ஏதுமின்றி நாட்டுக்குள் நுழைந்த அவர் மீது பெஷாவர் நகரில் உள்ள இராணுவ நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

போலி அடையாள அட்டையுடன் பாகிஸ்தானுக்குள் நுழைந்த குற்றத்துக்காக இந்த வழக்கில் அவருக்கு மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 15122015 அன்று அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த தண்டனைக் காலம் நிறைவடைந்து தற்போது அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். அன்சாரியை இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என பெஷாவர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.





## அமெரிக்கா விமானத் தாக்குதல் சோமாலியாவில் .62 பேர் சாவு

நைரோபி.டிசெ.18
கடந்த சனிக்கிழமை அமெரிக்கப் போர் விமானங்கள் சோமாலியாவின் தென் மத்திய பகுதியில் உள்ள பனாடிர் மாகாணத்தில் ஆயுததாரிகளின் இலக்குகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தின. இதன்போது 34 ஆயுததாரிகள் சாவடைந்தனர். மறுநாள் ஞாயிறு அன்று அமெரிக்காவின் போர் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் 28ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.

இந்த இரண்டு நாள்களிலும் 4 முறை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்தல்களால் பொது மக்கள் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சோமாலியாவில் 'அல் சகாப்' என்ற போராட்ட அமைப்பு ஒன்று சோமாலிய அரசுக்கு எதிராகப போராடிவருகின்றமையும், சோமாலிய அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா செயல் பட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# தொல்பொருள் என்ற போர்வையில் அத்துமீறல் ஆதங்கப்படுகின்றனர் தென்னைமரவாடி மக்கள்

திருகோணமலை.டிசெ.18


**தென்னைமரவாடிக் கிராமத்தில் தென்னன் என்ற அரசனின் காலத்தில் கட்டப்பட்ட தாகக்கருதப்படுகின்றகந்தசாமிமலையின்மேல்உள்ளமுருகன் ஆலயத்தைப் பௌத்த மேலாதிக்கத்தை நிறுவும் நோக்குடன் தொல்பொருள் திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டனர்.**

திருகோணமலை மாவட்டத்தின் குச்ச வெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தென்னைமரவாடி மக்கள் 1984ஆம் ஆண்டு அங்கிருந்து இடம்பெயர்ந்த னர். 2010ஆம் ஆண்டில் அங்கு மீள்கு டியேற்றம் செய்து, குறித்த மலையில் முருகன் சிலை மற்றும் வேல் என்ப வற்றை வைத்து வழிபாடுகள் மேற் கொண்டனர்.

அவை பௌத்த பேரினவாதிகளால் தகர்த்தழிக்கப்பட்டன. தொடர்ந்து குறித்த மலைப்பகுதியில் புத்தர் சிலை நிறுவுவதற்குப் பௌத்த துறவிகள் முனைந்தனர். கிராம மக்கள் அதைத் தடுத்தனர்.

இந்தப் பிணக்கில் பொலிஸார் தலை யிட்டு இரண்டு தரப்புகளும் குறித்த பகு திக்குச்செல்வதற்குத்தடைவிதித்தனர். தற்போது குறித்த மலையைடிவாரத்தில் தொல்பொருள் திணைக்களம் தமது பெயர்ப்பலகையை நிறுவிக் கட்டடம் ஒன்றை அமைத்து வருகிறது. இத னால், "எங்களை மலைக்கு செல்லவி டாது தடுத்து பெரும்பான்மையினரின் புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கைக் குத் தொல்பொருள் திணைக்களம் துணைபோய்விடும்.

இதை உரியதரப்புக்கள் கருத்தில் கொண்டு எமது மலையையும் எமது முருகன்ஆலயத்தையும்மீட்டுப்பெரும் பான்மையினரின் அத்துமீறல்களைத் தடுக்கவேண்டும்" - என்கின்றனர் அந் தப்பகுதிமக்கள்.



## தேசியக் கொடியை இடையில் கட்டி நபர் ஒருவர் சுதந்திரக் குளியல்

கண்டி, டிசெ.18

இலங்கைக் குடிமகன் ஒருவர்இலங்கையின் தேசியக் கொடியைத் துவாய்போன்றுஇடை யில் சுற்றிக் கட்டிக் கொண்டு நீராடிய சம்ப வம் கண்டியில் நடந் தது. 65 வயதுடைய அந்த நபர் தேசியக் கொடிக்குரிய மதிப்பை அறியாத பட்சத்தில் தான் அதைக்கட்டிக்குளித்த தாக விளக்கமளித்தார்.



கொடியைக்கட்டிக்கொண்டு குளித்தவரிடம் இது பற்றிக் கேட்டபோது, "இது என்ன துணிதானே? நாடாளுமன் றத்தில் நடக்காததா நடந்து விட்டது?" என்று சிரித்துக் கொண்டே கூறினார். ஒரு நாட்டின் தேசியக் கொடிக்கு ரியமதிப்புநிலையைஎடுத்து ரைத்ததும் "மன்னித்துக் கொள்ளுங்கள். நான் தெரி யாமல் செய்து விட்டேன்" என்று அவர் மன்னிப்புக் கோரினார். பின்னர் அவர் கட்டிக் குளித்த தேசியக்கொ டியை வாங்கிக் கொண்டு, உடுத்துவதற்கு வேட்டி ஒன்று வழங்கப்பட்டது.

இலங்கையின் நாடாளு மன்றஉறுப்பினர்கள்கடந்த வாரங்களில் நாடாளுமன் றத்தில் நடந்துக் கொண்ட விதம் அரசமைப்பை மீறிய செயல். கொடியைக் கட்டிக் கொண்டு குளித்ததைவிட அது மோசமானதாகும். அதன் பிரதிபலிப்பே குறித்த நபர் தேசியக் கொடியைக் கட்டிக்கொண்டு குளித்ததற்கு அடித்தளமிட்டி ருக்கிறது. இலங்கையில் வாழும் பாமர மக்கள் தமது நாட்டின்தேசியகொடிக்கான மதிப்பை அறிந்திராத மனநி லையுடன்இருப்பதும்இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது என்று இந்தச்சம்பவம்பற்றி அரசியலவதானிகள் கருத் துத்தெரிவிக்கின்றனர்.

# வவுணதீவுக் கொலைகளைக் கண்டித்து கருணா அணியினர் கவனவீர்ப்பு

மட்டக்களப்பு, டிசெ.18

மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில் பொலிஸார் இருவர் கொல்லப்பட்ட சம் பத்தைக் கண்டித்து மட்டக்களப்பு காந்தி பூங்காவில்தமிழர்ஐக்கியசுதந்திரமுன் னணியால் கடந்த சனிக்கிழமை கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக் கப்பட்டது.

தமிழர்ஐக்கிய சுதந்திரமுன்னணியின் உறுப்பினரும், கிழக்கு மாகாண முன் னாள் விவசாய அமைச்சருமான துரை யப்பாநவரெட்ணராஜாவின்தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சி யின் பொதுச்செயலாளர் வ.கமலதாஸ், ஊடகப்பேச்சாளர்சு.வசந்தராசாமற்றும் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பி னர்கள், உட்படப்பலர் கலந்துகொண்ட னர்.



ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர் கள் "வவுணதீவின் கொலை யாருக்கு இலாபம்?", "அரசியல் ஆதாயம் தேடுவ தற்காக முன்னாள் போராளிகளைப் பலியாக்க வேண்டாம்", "உண்மைக் குற்றவாளியை இனம் காண்பதற்கு உதவுங்கள்" எனக்கோசமெழுப்பினர்.

## ஏறாவூரில் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுப்பு

ஏறாவூர், டிசெ.18

இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் குவைத் நாட்டு அறக்கொடை நிறுவனம் ஒன் றின் நிதியுதவியுடன் மட்டக்க ளப்பு ஏறாவூர் மக்களுக்குக் குழாய்க் கிணறுகள் கட்டிக்கொ டுக்கப்பட்டன. குவைத்தின் அல் - நஜாத் என்கிற அறக்கொடை அமைப்பால் இலங்கை அந் - நூர் அறக்கொடை நிறுவனத் தின் ஊடாக இந்தக் இந்தக் குடி நீர்க் கிணறுகள் கட்டிக் கொடுக் கப்பட்டன. ஏறாவூர் சவுக்கடி கிராமவீடமைப்புத்திட்டத்திலுள் ள சுமார் 70 தமிழ்க் குடும்பங் களுக்குக்கிணறுகள்வழங்கும் நோக்கில்குறித்ததொண்டுநிறு வனம் முன்னெடுக்கும் செயற் றிட்டத்தின் முதற் கட்டமாக 4 கிணறுகள் கையளிக்கப் பட்டன. இந்தக் கிணறுகள் ஒவ் வொன்றும் சுமார் 15ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுள் ளன. இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற் றது. மீதமுள்ள கிணறுகளை மிக விரைவில் அமைத்துக் கொடுக்கவுள்ளதாகக் குறித்த அறக்கொடை அமைப்பினர் தெரிவித்தனர்.



## சனியன்று வீடு திரும்பினர் சம்பந்தன்

கொழும்பு, டிசெ.18

கொழும்பு தனியார் வைத்தியசாலையில் 3 நாள்க ளாகச் சிகிச்சை பெற்றுவந்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிகிச்சையின் பின்னர் கடந்த சனிக்கிழமையன்று வீடு திரும்பினார்.

உடல் நலக் குறைபாட்டால் கொழும்பிலுள்ள தனி யார் மருத்துவமனை ஒன்றில் கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை அனுமதிக்கப்பட்டிருந்த அவர் அங்குதொடர்ந்துசிகிச்சைபெற்றுவந்தார். பின்னர் அவருடைய உடல்நிலையில் முன்னேற்றம்தென் பட்டமையால்சனிக்கிழமைநண்பகல்மருத்துவம னையிலிருந்து அவர் வீடு திரும்பினார். நாட்டில் அரசியல் திருப்பங்கள் பல நடந்தேறி, நீதிமன்றத் தீர்ப்புக்கள் மூலம் குறித்த திருப்பங்கள் சரிசெய்யப் பட்டன.

நீதிமன்றத் தீர்ப்புக்களை மருத்துவமனையில் இருந்தவாறு அவதானித்து விட்டு இப்போது வீடு திரும்பியிருக்கிறார் இரா.சம்பந்தன். அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் அவர் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிகிறது. (105)

## கிழக்கு மாகாணசபையில் இனப்படுகொலை கவீந்திரன் கோடீஸ்வரன் கண்டனம்

கிழக்குமாகாணசபைஅரசமுகாமைத்துவஉதவியா ளர்களுக்கான போட்டிப் பரீட்சையில் இன ரீதியாக அதிக பயனான வெட்டுப் புள்ளியைத் தமிழர்களுக்கு வழங்கித் தொழில் ரீதியாக இனப் படுகொலை அரங் கேறியுள்ளதாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந் திரன் கோடீஸ்வரன் கண்டனம் தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை இரவு ஊடகங்களுக்குக் கருத்து தெரி விக்கும்போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது:

தமிழ் இனத்துக்குத் தொடர்ந்தும் கிழக்கு மாகாணச பையால் இனரீதியாகஅநீதிகள் இழைக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. கிழக்கு மாகாணசபையி னால் அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்கான வெட்டுப் புள்ளியாகச் சிங்களவர்களுக்கு 105புள்ளிக ளும், முஸ்லிம்களுக்கு 120 புள்ளிகளும், தமிழர்க ளுக்கு130புள்ளிகளும்இனரீதியாகவழங்கப்பட்டுள் ளன. இதன் மூலம் கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு மாகாண அரசு துரோகமிழைத்துள்ளது" - என்றார்.

இதை அரசதலைவர் செயலணி அபிவிருத்திக் கூட்டத் தில் அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு செல் லவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் மலர் வளர்ப்புத் திட்டம்

மட்டக்களப்பு, டிசெ.18

மட்டக்களப்பில் முதன்முறையாகத் தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் அனுசரணையோடு அழகுமலர்த்தாவரவளர்ப்புத்திட்டம்ஆரம்பிக்கப்பட் டது. இதன் ஓர் அங்கமாக அழகு மலர்த் தாவரங் களைவளர்ப்பவர்களுக்கு உதவு, ஊக்கஉபகரணத் தொகுதிகளும், உள்ளீடுகளும் வழங்கும் நிகழ்வு கடந்தபுதன்கிழமைமட்டக்களப்புபெரியஉப்போடை யில்உள்ள அந்தூரியம்நிலையத்தில்இடம்பெற்றது. தெரிவு செய்யப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்ட 24 பேருக்குதலா18ஆயிரம் ரூபாபெறுமதியான உபக ரணங்களும் உள்ளீடுகளும் இந்த நிகழ்வில் இலவ சமாக வழங்கப்பட்டன.

அழகுமலர்த்தாவரவளர்ப்பைஊக்குவிப்பதற்கான நோக்கம்பற்றிநிகழ்வில்கலந்துகொண்டுகருத்துத் தெரிவித்த பேராதனைத் தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் வடக்கு - கிழக்குக் கண்காணிப்பு அதிகாரி ஏ.யோகராஜா, இதுஒருசுயதொழிலாகவும் வருமானத்தைஈட்டுவதாகவும், பொழுதுபோக்காக வும் இருக்கிறது. முக்கியமாக மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டோரைக் குணப்படுத்தக்கூடியது" - என் றார்.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# ரணில் தப்பிவிட்டார் கூட்டமைப்பு...?

ஒருவாறு கொழும்பின் அரசியல் நெருக்கடி தணிந்திருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தலைமை அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டார். விசித்திரமான ஒரு விளக்கமாக, நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்கள் கேட்டாலும் ரணிலைத் தலைமை அமைச்சராக்கப் போவதில்லை என்பது தன்னுடைய அரசியல் நிலைப்பாடு, அதில் மாற்றமில்லை, ஆனால் மக்களாட்சி சமூகத்தின் சிறந்த அறிகுறியாக ரணிலைத் தலைமை அமைச்சராக நியமிக்கின்றேன் என்று கூறியிருக்கிறார் அரச தலைவர். எப்படியிருந்தாலும் ரணில் மீண்டும் பதவியைப் பிடித்துவிட்டார்.

பதவிக்கு வந்த கையுடனேயே அடுத்த ஆண்டு முற்பகுதியில் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதற்குத் தயாராகுமாறு அவர் தனது பங்காளிக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இதில் இரண்டு விடயங்கள் அடங்கியிருக்கின்றன என்று எதிர்பார்க்கலாம். ஒன்று, மைத்திரியுடனான அதிகார மோதலில், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதைப் போன்று மைத்திரியையும் மகிந்தவையும் வீழ்த்தி விட்ட, தனக்குச் சாதகமான ஒரு சூழலில் தேர்தலை எதிர்கொண்டு வெல்வது, இரண்டாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவில் ஆட்சியை நீண்ட காலத்திற்குக் கொண்டு நடத்துவது சாத்தியமற்றது, அப்படி நடத்தினால் தனது அரசியல் முதலுக்கே மோசம் வரும் என்கிற எதிர்பார்ப்பு. மகிந்தவுக்குச் சாதகமற்ற ஒரு களத்தில் அவரை வீழ்த்துவது இலகு என்று அவர் கருதுகிறார் போலுள்ளது.

மைத்திரியையும் மகிந்தவையும் ஒருசேர வீழ்த்தியதன் மூலம் கட்சிக்குள்ளும் வெளியிலும் ரணிலின் மதிப்பு அதிகரித்துள்ளது இதனால் அடுத்து வரும் தேர்தல்களில் அதனையே முதலீடாக்கிக் கொள்வதற்கான அடித்தளத்தையும் அவர் போட்டுவிட்டார். தேசிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் புதிய கூட்டணியை உருவாக்குவது பற்றிய அறிவிப்பை நேற்றே அவர் விடுத்தார். முழுப் பலத்தோடு இருக்கும்போதே அதனைப் பயன்படுத்திக் கொள்ள, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள ரணில் தயாராகிவிட்ட நிலையில், இப்போது இக்கட்டுக்குள் மாட்டிக்கொள்ளப் போகின்றவர்களாக இருப்பவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான்.

மறுபுறத்திலே கைக்கெட்டியும் வாய்கெட்டாத நிலையில் பதவியில் இருந்து விலகிப் போயிருக்கும் மகிந்த ராஜபக்சவுக்கு, தனது இந்த நிலைக்குக் காரணமான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மீது கடும் கோபம் இருப்பதை நேற்று முன்தினம் அவர் ஆற்றிய உரையே காட்டிக்கொடுக்கிறது. அந்த உரை, மகிந்த முழுத் தீவிரத்தோடு இனவாதத்தைக் கையிலெடுக்கப் போகிறார் என்பதையே காட்டுகின்றது என்று மூத்த பத்திரிகையாளரான சுனந்த தேசப்பிரிய தெரிவித்திருக்கிறார். மகிந்த இனவாதத்தைத் தீவிரமாகக் கக்கும் போதெல்லாம் அதற்கெதிராக தமிழர் பகுதிகளிலும் இனத்தீயின் நாக்குகள் கொழுந்துவிட்டு எரிவதைத் தடுக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு நிலை தோன்றுமாக இருந்தால் அப்போதும் பாதிக்கப்படப் போவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான்.

ரணிலுக்கு ஆதரவளித்து ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சியில் இருத்தியதன் மூலம், அடுத்த ஆண்டு முற்பகுதிக்குள் ஒரு தேர்தல் வருவதற்கு முன்பாக புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது இன்றைய அரசியல் கள நிலையில் சாத்தியமானது அல்ல. அதையும் நிறைவேற்ற முடியாது வெறுங்கையுடன், தீவிர தமிழ்த் தேசியவாதத்தையும் பேச முடியாத நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் எத்தகைய நிலைப்பாட்டை முன்னெடுத்துச் சென்று தேர்தலை எதிர்கொள்வது என்கிற பிரச்சினை இருக்கின்றது.

ஆக மொத்தத்தில் கூட்டமைப்பின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமலேயே ஒரு புறத்தில் அது தேர்தலை எதிர்கொள்ளவேண்டியிருக்கையில் மறுபுறத்தில் சிங்கள இனவாதப் பரப்புரைக்குச் சரிசமமான தமிழ்த் தேசிய இனவாதம் கிளர்ந்தெழவேண்டிய தேவை அவசிப்பட்டு நிற்கும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படி அதனை எதிர்கொள்ளப் போகின்றது? மக்களிடம் எதை கூறி வாக்குக் கேட்கப் போகின்றது?



# பேரவலத்தின் அடையாளமாய் புதைகுழிகள்!

## குற்றங்களுக்கு எதிரான சமூக நீதியை யார் வழங்குவது?

செ.உமாசுதன்

"ஒருநாள் கப்டன் லலித் ஹேவா என்னை அழைத்தார். மண்வெட்டியை விரைந்து எடுத்துவருமாறு கட்டளையிட்டார். அவர் குறிப்பிட்டபடியே மண்வெட்டியை எடுத்துக் கொண்டு அவர் இருக்கும் இடம் நோக்கி நகர்ந்தேன். நான் அவ்விடத்தை அடைந்தபோது, அங்கு ஆடையின்றி பெண் ஒருவர் நிர்வாணக் கோலத்தில் நின்றார். கப்டன் ஹேவா அந்தப் பெண்ணை மானபங்கப்படுத்தினார்.
பின்பு நான் எடுத்துவந்த மண்வெட்டி மற்றும் அங்கிருந்த இன்னும் சில ஆபத்தான பொருள்களைக் கொண்டு அந்தப் பெண்ணையும் அவருடைய துணைவரையும் தாக்கிக் காயப்படுத்தினார். இருவரும் அந்த இடத்திலேயே சாவடைந்தனர். அவர்கள் இருவரும் முன்பு முகாமுக்கு அழைத்துவரப்பட்டவர்கள்."

இது சோமரத்தின ராஜபக்சவின் வாக்குமூலம். உண்மையில் யார் இந்த சோமரத்தின ராஜபக்ச? எதற்கு அவன் இப்படியொரு வாக்குமூலத்தை அளித்தான்? என்ற கேள்விகள் உங்களுக்குள் இயல்பாகவே எழுவது புரிகிறது.
1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஏழாம் திகதியை கடந்து வந்த ஒவ்வோர் தமிழ் குடிமகனது நெஞ்சக் குழியினுள்ளும் இந்தக் கேள்விகளுக்கான பதில் தீர்வின்றி அங்கலாய்த்துக்கொண்டிருக்கும்.

**'செம்மணிப் புதைகுழி' இனவழிப்புச் செயற்பாட்டின் ஆரம்பம்!**

இது தனித்து வாக்குமூலமல்ல. இலங்கையின் அதிகார மேலாண்மை காலத்துக்குக் காலம் திட்டமிட்ட முறையில் தமிழர் பிராந்தியங்களில் நடத்தி வந்த இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் குறித்த ஆதாரம். சுருங்கக் கூறின் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்புச் செயற்பாட்டுக்கான ஆரம்பம் எனக் கூறிவிடலாம்.

செம்மணியில், 'யாழ்ப்பாணம் உங்களை வரவேற்கிறது' என்ற வாசகம் பொலிவோடு காட்சி தருகின்ற வரவேற்பு வளைவுக்கு அருகாக இலங்கை ஆக்கிரமிப்பு இராணுவத்தின் முகாம் அமைந்திருந்தது. அங்கு வெறிபிடித்த மிருகங்கள் குடிகொண்டிருந்தன. தமிழ் மக்களை கொன்றொழிப்பதற்கான அரசின் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற மத்திய நிலையங்களுள் ஒன்றான பரிணமிப்பாக இந்த இராணுவ முகாமும் செயலாற்றியது. குறிப்பாக யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் மாணவி கிருசாந்தியை மிகக் கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியும், கிருசாந்தியை தேடிச் சென்ற தாயார், சகோதரன் மற்றும் அயல்வீட்டுக்காரர் ஆகியோரை சித்திரவதை செய்து கழுத்து நெரித்துப் படுகொலை செய்தும் புதைத்த காட்டுமிராண்டித்தனத்தை தமிழ்மக்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்.




செம்மணிப் புதைகுழி வழக்கு தீராத அழுத்தங்களையும் மீள முடியாத நெருக்கடிகளையும் அரசுக்கு ஏற்படுத்தியது. இந்த வழக்கு விசாரணையில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் சோமரத்தின ராஜபக்ச கொழும்பு நீதிமன்றத்தில் வழங்கிய வாக்குமூலம் அனைத்துலக கவனத்தையும் ஈர்த்தது.

**இலங்கையின் அரச தலைவர்கள் ஒவ்வொருவரும் களங்கமுடையவர்கள்!**

செம்மணிப் புதைகுழியில் இவர்கள் மட்டுமே கொன்று புதைக்கப்படவில்லை. அங்கு சுமார் 600க்கும் மேற்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டார்கள் என்ற செய்தி வெளிப்பட்டது. செம்மணிப் புதைகுழி வழக்கு அப்போதைய அரச தலைவராக இருந்து ஆட்சி அதிகாரம் செய்த சந்திரிகா பண்டார

நாயக்க குமாரதுங்கவின் நிர்வாகவியலைக் களங்கப்படுத்தியது. செம்மணிப் புதைகுழி வழக்கு தீராத அழுத்தங்களையும் மீள முடியாத நெருக்கடிகளையும் அரசுக்கு ஏற்படுத்தியது. இந்த வழக்கு விசாரணையில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் சோமரத்தின ராஜபக்ச கொழும்பு நீதிமன்றத்தில் வழங்கிய வாக்குமூலம் அனைத்துலக கவனத்தையும் ஈர்த்தது.










**மனித உரிமைகளின் கடைநிலையும் பொய்த்துப்போயுள்ள நீதிபரிபாலனமும்!**

"செம்மணியில் கிருசாந்தியும் அவரது உற்றார் உறவினருமே தனித்துப் புதைக்கப்படவில்லை. 400க்கும் மேற்பட்டவர்கள் புதைக்கப்பட்டுள்ளார்கள். மேலதிகாரிகளின் கட்டளைக்கு கீழ்படிந்து கொலை செய்யப்பட்ட சடலங்களைப் புதைப்பதுதான் எனது வேலை. என்னை செம்மணிக்கு கூட்டிச் சென்றால் தமிழர்களின் புதைகுழிகளை என்னால் அடையாளம் காட்ட முடியும். செம்மணியைவிட 16 புதைகுழிகள் உள்ளன. அவற்றுள் பத்துப் புதை குழிகளை அடையாளம் காட்ட முடியும்" என்ற வெளிப்பாடு அனைவரையும் கதிகலங்க வைத்தது.

உண்மை கண்டறியப்பட வேண்டும் என்ற தன்னார்வமான உணர்வை பன்னாடுகள் மத்தியில் ஏற்படுத்தியது. மனித உரிமை அமைப்புக்கள் பலவும் இதுகுறித்து குரல் கொடுத்தன. புதைகுழியில் இருந்து வெளிப்பட்ட எலும்புக்கூடுகள் உயிர்கொண்டு தமக்கான நியாயத்தை வேண்டி நின்றன. ஆனாலும் தீர்வு கிடைக்கவில்லை. மனித உரிமைகள் செயலிழந்துபோயின. ஆம், இதன் வழிப்பட்டே தற்போதைய அரச மேலாண்மையும் இறுதிப் போரில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கான விசாரணைகளில் இருந்து தப்பிக்க மேற்கொள்கின்ற பிரயத்தனங்களும், பொறுப்புக்கூறலில் இருந்து அரசு பின்வாங்குகின்ற போக்கும் இலங்கையில் உள்ள மனித உரிமைச் சட்டங்கள் கொண்டுள்ள வலுவற்ற தன்மையையே எடுத்தியம்பி நிற்கின்றன.

செம்மணியில் 'யாழ்ப்பாணம் உங்களை வரவேற்கிறது' என்ற வாசகம் பொலிவோடு காட்சி தருகின்ற வரவேற்பு வளைவுக்கு அருகாக இலங்கை ஆக்கிரமிப்பு இராணுவத்தின் முகாம் அமைந்திருந்தது. அங்கு வெறிபிடித்த மிருகங்கள் குடிகொண்டிருந்தன. தமிழ் மக்களை கொன்றொழிப்பதற்கான அரசின் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற மத்திய நிலையங்களுள் ஒன்றான பரிணமிப்பாக இந்த இராணுவ முகாமும் செயலாற்றியது. குறிப்பாக யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் மாணவி கிருசாந்தியை மிகக் கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியும், கிருசாந்தியை தேடிச் சென்ற தாயார், சகோதரன் மற்றும் அயல்வீட்டுக்காரர் ஆகியோரை சித்திரவதை செய்து கழுத்து நெரித்தும் படுகொலை செய்து புதைத்த காட்டுமிராண்டித்தனத்தை தமிழ்மக்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்.



**'மன்னார் புதைகுழி' தமிழின அழிப்பின் பிறிதொரு எச்சம்!**

இந்தசந்தர்ப்பத்திலே அண்மையில் மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்த 'லங்கா சதொச' கட்டடம் உடைக்கப்பட்டு அவ்விடத்தில் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் நடைபெற்ற போது, அங்கு அகழப்பட்ட மண் மாதிரியில் மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 3 நாள்கள் மன்னார் நீதவான் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போதே இவ்வாறு சந்தேகத்துக்கிடமான எலும்புத் துண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து இதுவரையாக குறிப்பாக 115 நாள்கள் இடம்பெற்றுள்ள அகழ்வுப் பணிகளில் 276 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 269 எலும்புக்கூடுகள் அகற்றப்பட்டு நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியில் 21 எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையது என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. தவிர சந்தேகத்துக்கு இடமான மனித எலும்புக்கூடுகள் மூன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச உறுதிப்படுத்தியுள்ளார்.

இதில் மீட்கப்பட்ட மனித எலும்பு மாதிரிகள் 'காபன்' சோதனைக்காக அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்துக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் அனுப்பப்படலாம் என்ற தகவலும் தெரிவிக்கப்படுகின்றது.

**மனித உரிமை மீறல்கள் குறித்து சமூக நீதியை யார் நிலைநாட்டுவது?**

இந்தவிடயங்கள் அனைத்தும் அவதானத்துக்குரியன. செம்மணிப் புதைகுழியின் பின்பான, இறுதிப் போர் இடரின் பின்பான மிகப்பெரிய அவலத்தின் அடையாளமாகத் தற்போது மேலெழுந்த நிற்கின்றன. குறிப்பாக ஜனநாயகத்தின் பாற்பட்டு ஆட்சி அதிகாரம் செலுத்தி வருவதாக மார்தட்டிக்கொள்கின்ற கடந்த கால ஆட்சியாளர்களின் ஆட்சித்திறனை மலினப்படுத்தியுள்ளது. மிகப் பிரதானமாக இலங்கையில் குடிகொண்டுள்ள மனித உரிமைகளின் உறுதிப்பாட்டை கேள்விநிலைக்குட்படுத்தியுள்ளது.

இந்த அவலத்தின் சூத்திரதாரிகள் யார் என்பது குறித்து இதுவரை ஆக்கபூர்வமான விசாரணைகள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. மக்களாட்சித் தத்துவத்தின் உயரிய பீடமாக சொல்லப்படுகின்ற நாடாளுமன்றத்தில் இது குறித்து ஆழமான கருத்தாடல்கள் இடம்பெற்றதை அவதானம் கொள்ள முடியவில்லை. பன்னாட்டளவிலும் இந்த விடயம் அவதானத்துக்குரியதாக மாற்றங் காணவில்லை. மனித உரிமை அமைப்புகள் குரல்கொடுப்பதாகவும் தெரியவில்லை.

உண்மையில் அனைத்து தரப்பினரிடம் இருந்தும் கண்டுகொள்ளப்பட்டுள்ள மேற்போந்த செயல்வினைகள், செம்மணிப் புதைகுழி விவகாரம் போன்று மன்னார் புதைகுழி விவகாரத்தையும் மூடி மறைப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி விடுமோ என்ற சந்தேகத்தை பலமாகவே ஏற்படுத்தியுள்ளன.

இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் சிந்திக்கத் தலைப்பட வேண்டும். அரசுக்கு அழுத்தம் கொடுத்துச் செயற்பட முன்வர வேண்டும். இல்லாது போனால் கடந்த காலங்களைப் போலவே பொறுப்புக்கூறலில் இருந்து பின்வாங்கவும், ஆதாரங்களைச் சுவடு தெரியாமல் அழித்து விடுவதற்கும் திரைமறைவில் காய்நகர்த்தல்களை அரசு மேற்கொள்வதற்கு ஏதுவான சூழல் உருவாகிவிடும் என்பதை உணர்ந்துகொள்ளத் தலைப்பட வேண்டும். அத்துடன் சோமரத்தின ராஜபக்ச தனது வாக்குமூலத்தில் குறிப்பட்டது போன்று, 'செம்மணியை விட 16 புதைகுழிகள் உள்ளன. அதில் பத்துப் புதைகுழிகளை அடையாளம் காட்ட முடியும்!' என்ற விடயம் நீண்ட காலத்தின் பின்பு நீதித்துறை கண்டு கொள்ள வேண்டிய தேடலையும், அது மக்களுக்கு வழங்கவேண்டிய சமூக நீதியையும் வலியுறுத்தி நிற்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# பார்த்தீனியச் செடிகள் ஆபத்தானவை!

அண்மையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த உறவினர் ஒருவரைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து பேருந்தில் பயணத்தை மேற்கொண்டிருந்தேன். மல்லாகம் சந்தியைக் கடந்து சென்றபோது வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட வெற்றுக்காணிகளில் பார்த்தீனியச் செடிகள் செழிப்பாக வளர்ந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. அவற்றில் முற்றிப் பழுத்த விதைகள் அதிகளவில் காணப்பட்டன.

இந்த விதைகள் காற்றால் காவிச் செல்லப்படும்போது வேறு பகுதிகளில் பார்த்தீனியச் செடிகள் பரம்பலடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. இதேவேளை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையை அண்டிய பகுதிகளிலும் இவற்றின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுவதோடு. நன்கு செழித்து வளர்ந்துள்ளதையும் காணமுடிந்தது.

இந்த சந்தர்ப்பத்தில், "வடக்கு மாகாணத்தில் பார்த்தீனியம் ஒழிப்பு தொடர்பான அனைத்துத் திட்டங்களும், சட்டங்களும் தெளிவாக உள்ளன. பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுங்கள்" என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே அரச அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்தது. தவிர "பார்த்தீனியம் ஒழிப்பு என்பது தனித்து விவசாயத் திணைக்களத்தின் வேலையல்ல. வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், உள்ளூராட்சி சபைகள், திணைக்களங்கள் அனைத்துக்கும் இதில் பங்குண்டு. எனவே ஒவ்வோர் மாதமும் சுழற்சி முறையில் பார்த்தீனியம் ஒழிப்புத் தொடர்பான நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்" என்ற அறிவுறுத்தலை வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்கவிடயம்.


**பொது அமைப்புகள் பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும்!**

ஆகவே தெல்லிப்பழை பிரதேசத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் துரிதமாகச் செயற்பட்டு பார்த்தீனியச் செடிகளை முற்றாக ஒழிப்பது குறித்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். பொதுமக்களும் நேரடியாகக் களத்தில் இறங்கி பார்த்தீனியச் செடிகளை ஒழிப்பது தொடர்பில் தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும். அதேபோன்று வடமாகாணத்தில் பார்த்தீனியம் உள்ள இடங்களை அடையாளம் காண்கின்ற செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டு, அவற்றை அழிப்பதற்கான பணிப்புரைகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். பணிப்புரைகளை மீறு வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்!

*மா.மகாதேவன், கொக்குவில்.*

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# யானை தேடிய நட்பு

காட்டில் பலம் கொண்ட யானை ஒன்று வாழ்ந்து வந்தது. அதன் பெரிய உருவம் கண்டு மற்ற விலங்குகளும் பறவைகளும் ஒதுங்கியே இருந்தன. இதனால் யானை நண்பர்கள் இன்றி, தனிமையில் தவித்தது. தன்னோடு நட்புடன் பழக ஒரு நண்பனைத் தேடியது. நாமே சென்று ஒரு நட்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் காட்டுக்குள் நடக்க ஆரம்பித்தது. வழியில் ஒரு மரத்தில் குரங்கைக் கண்டது.

" குரங்கே, நான் யாருடைய நட்பும் கிடைக்காமல் மிகவும் மன வேதனையில் உள்ளேன். என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள்வாயா?" என்றது. அதை கேட்டதும் குரங்கு, 'ஹி..ஹி...' என்று சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்?

"யானையாரே, நான் மரத்துக்கு மரம் தாவுபவன். நீரோ தரையில் நடப்பவர். நாம் எப்படி நண்பர்களாக முடியும்? என்னைப் போல உங்களால் மரம் தாவ முடிந்தால் மட்டுமே நட்பு சாத்தியம்" என்று சொல்லி விட்டு ஓடியது.

அடுத்ததாக மரத்தின் மீது அமர்ந்தபடியே 'கூக்கூ கூக்கூ' என்று குயில் கூவியதைக் கேட்டது யானை.

'ஆஹா! என்ன இனிமையான குரல் வளம். இந்தக் குயிலிடம் நட்புகொண்டால் மனம் மகிழ்ச்சியாக இருக்கும்' என்று நினைத்த யானை, "குயிலே, என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள்வாயா?" என்று கேட்டது.

"என்னைப் போல உம்மால் இனிமையாகப் பாட முடியுமா? அப்படிப் பாடுவதாக இருந்தால் நண்பனாக ஏற்றுக்கொள்கி றேன்" என்றது குயில்.

யானை சோகத்துடன் திரும்பி நடந்தது. பாதையில் மயில் ஒன்று தன் தோகையை விரித்து அழகாக ஆடிக்கொண்டி ருந்தது. மயிலின் ஆட்டத்தைக் கண்ட யானை, மெய் மறந்து நின்றது.

'ஆஹா! மயில் எவ்வளவு அழகாக ஆடுகிறது! இதனோடு நட்பு கொண்டால் தினமும் இதன் ஆட்டத்தைக் கண்டு ரசிக்கலாம்' என்று நினைத்த யானை, மயிலிடம் தன் விருப்பத்தைக் கூறியது.

"யானையாரே, நீர் ஆசைப்படுவது விநோதமாக உள்ளது. என் திறமைக்கு முன்னால் நீங்கள் எல்லாம் பூஜ்யம். தள்ளிப் போங்கள்" என்று தோகையை ஆட்டிக்கொண்டே சென்றுவிட்டது.

அப்போது ஓர் எலி வந்தது. உடனே தன் கோரிக்கையை வைத்தது யானை.

"யானையாரே, உம்மோடு நட்புகொள்ள எனக்கும் ஆசைதான். ஆனால் நம் இருவருக்கும் உருவ வேறுபாடு மலைக்கும் மடுவுக்குமாக உள்ளது. நீங்கள் என்னைப் போல உருவத்தைச் சிறியதாக்கிக் கொண்டு வந்தால் அப்போது நட்புகொள்ளலாம்" என்றது எலி.

சட்டென்று புதரிலிருந்து வெளியே வந்தது ஒரு புலி. அதன் பிடியில் குரங்கு மாட்டிக்கொண்டு உயிருக்குப் போராடியது. அதன் வேதனைக் குரல் கேட்ட யானை, ஓடிவந்து புலியுடன் போராடியது. யானையின் பலத்தை, புலியால் சமாளிக்க முடியவில்லை. யானை புலியைத் தூக்கி வீசியது.

"என்னை விட்டு விடு. இனி நீ இருக்கும் பக்கமே வர மாட்டேன்" என்று சொல்லி விட்டுத் தலைதெறிக்க ஓடி மறைந்தது புலி. அதுவரை மறைவில் நின்று வேடிக்கை பார்த்த குரங்கு, மயில், குயில், எலி எல்லாம் வெளியில் வந்தன.


"யானையாரே, எங்களை மன்னிக்க வேண்டும். நாங்கள்தங்களை மிகவும் இழிவாகப் பேசிவிட்டோம். இந்தப் புலியால் பலர் உயிரை இழந்துள்ளார்கள். தக்க சமயத்தில் புலியிடமிருந்து எங்களைக் காப்பாற்றியது டன் எங்களுடைய கர்வத்தையும் அழித்துவிட்டீர்" என்று உருக்கமாகப் பேசியது குரங்கு. "என்னையும் மன்னித்துவிடுங்கள். ஆபத்து நேரும் காலத்தில் உதவுவதுதான் நல்ல நண்பனுக்கும் உண்மையான நட்புக்கும் இலக்கணம் " என்றது மயில்.

"யானையாரே, உம்மை நண்பராக அடைவதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்றது குயில். தனக்கு நண்பர்கள் கிடைத்த மகிழ்ச்சியை அவர்களோடு கொண்டாடி மகிழ்ந்தது யானை.

## வித்தியாசம் கண்டுபிடிப்போம்



## ஒட்டகச்சிவிங்கியின் தலைகளை கண்டுபிடிப்போம்




## சவப்பெட்டி மீன்



சவப்பெட்டி மீன்கள் (coffin fish) தெற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா கடற்கரையோரங்களில் அதிகம் காணப்படுகின்றன. இந்த மீன்கள் 15 செ.மீ. வரை வளரும். அதாவது அரை அடி ஸ்கேல் அளவுக்கு இருக்கும். சிறிய கால்கள் போல் காட்சியளிக்கும் துடுப்புகளைக் கொண்டு தரையில் நடந்து செல்லும் இந்த மீன்.

இதை 'கை மீன்' (hand fish) என்றும் சொல்வதுண்டு. எதிரி தாக்க வந்தால், அவசர அவசரமாக நிறைய தண்ணீரைக் குடித்து, உடலை உப்பச் செய்துவிடும். இதன் உப்பிய உடலை எதிரியால் கடிக்கக்கூட முடியாது.

## சூரியன் இல்லாது போனால்..

- ★ எமக்குச் சக்தியைத் தருவது சூரியன்
- ★ காலையில் உதித்து ஒளி தந்து மாலையில் மறையும்.
- ★ சூரியன் கிழக்குத் திசையில் உதிக்கிறது.
- ★ அது மாலையில் மேற்குத் திசையில் மறைகிறது.
- ★ சூரியன் மறைந்தமும் இருள் ஆழ்ந்து கொள்ளும்.
- ★ பகலெல்லாம் உழைத்த உயிரினம் இரவினில் ஓய்வு எடுக்கும்.
- ★ சூரியன் இரவில் ஓய்வு எடுப்பதாகக் கதைகள் உண்டு.
- ★ சூரியன் மிகப் பெரிய் கோளாகும்
- ★ அசைநீள்வட்டப்பாதையில் கோள்கள் சூரியனை வலம் வருகின்றன.
- ★ சூரியன் இல்லாதுவிடில் எம்து உலகம் இருண்டு விடும்.
- ★ உயிரினங்கள் வாழ முடியாது போய்விடும்.
- ★ வெப்பம் கிடைத்தால்தான் சக்தி பிறக்கும் . சூரிய சக்தியால் கோள்கள் இயங்குகின்றன.
- ★ சூரிய வெப்பத்தில் நீர்நிலைகள் ஆவியாக்கம் பெறுகின்றன
- ★ நீராவி மேலெழுந்து ஒடுங்கி மழையாகப் பெய்கிறது.
- ★ மழையில்லையேல் உலகில் விளைச்சல் இல்லை.
- ★ விளைச்சல் இல்லையேல் உயிரினங்களுக்கு உணவில்லை
- ★ சூரியனால் நீரியல்வட்டம் நடைபெறுகிறது.
- ★ சூரிய வெப்பத்தால் வளி சூடாகிறது
- ★ வெப்பம் அடைந்த வளி மேலெழுந்து அலைகிறது.
- ★ ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு காற்றாக வீசுகிறது.
- ★ கடலலையை அசைந்து இரைந்து வீசச் செய்கிறது.
- ★ சூரியன் உலகினை வாழ்விக்கும் கோளாகும்.
- ★ சூரியன் இல்லாவிட்டால் பூமி சூனியமாகிவிடும்.

## கொரில்லாக்கள் பற்றிய சுவையான தகவல்கள்



- ★ நன்கு வளர்ந்த கொரில்லாக்கள் சராசரியாக 6 அடி உயரமும் 150 கிலோ எடையும் உடையவை.
- ★ கொரில்லாக்கள் இரண்டு கைகளையும் விரித்தால் சுமார் 8 அடி வரை நீளும்.
- ★ கொரில்லாக்களின் கால்களைவிட கைகள் மிக நீளமானவை.
- ★ கொரில்லாக்களால் மனிதர்களைப் போலவே கைகளை ஊன்றாமல் நடக்க முடியும். ஆனால், அவை அவ்வாறு நடக்க விரும்புவதில்லை.
- ★ கொரில்லாக்களுக்குக் கோபம் வந்தால் கைகளைத் தூக்கி நெஞ்சில் அடித்துக்கொண்டு சத்தமிடும்.
- ★ கொரில்லாக்கள் சராசரியாக 50 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.
- ★ கொரில்லாக்கள் உடல் அசைவுகள், சத்தத்தின் மூலம் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும்.
- ★ கொரில்லாக்கள் மனிதர்களைப் போலச் சிரிக்கவும் செய்யும். சத்தம் போட்டு அழும். ஆனால், அழும்போது கண்ணீர் வராது.
- ★ கொரில்லாக்கள் மதியம், இரவில் சில மணி நேரம் தூங்கும் பண்புடையவை. தூங்குவதற்கு வசதியாகச் சிறிய மரங்களில் படுக்கைகளைத் தயார் செய்துகொள்ளும். படுக்கைகள் மெத்தை போன்று இருக்கும்.
- ★ கொரிலாக்கள் கிழங்கு, பழம், இலை, தழை, எறும்பு, கரையான் போன்றவற்றை விரும்பிச் சாப்பிடும்.
- ★ கூட்டமாகவே வாழும் இயல்புடையவை கொரில்லாக்கள். இளம் வயது கொரில்லாக்களுக்கு உணவு சேகரிக்கும் முறை, குட்டிகளைப் பராமரித்தல், தங்கும் வீடு கட்டும் முறை போன்றவற்றை மூத்த கொரில்லாக்கள் கற்றுக் கொடுக்கும்.




# திருமணம்

## சேரனின் அடுத்த படம்

பாரதி கண்ணம்மா, பொற்காலம், தேசிய கீதம், வெற்றிக்கொடி கட்டு, பாண்டவர்பூமி, ஆட்டோகிராப், தவமாய்தவமிருந்து, மாயக்கண்ணாடி, பொக்கிஷம் உள்ளிட்ட படங்களை இயக்கிவர் சேரன். சொல்ல மறந்த கதை, ஆட்டோகிராப், ராமன் தேடிய சீதை, மாயக்கண்ணாடி போன்ற சில படங்களில் சேரன் கதாநாயகனாகவும் நடித்துள்ளனர்

கடைசியாக ஜே. கே. எனும் நண்பனின் வாழ்க்கை என்ற படத்தை இயக்கியிருந்தார். மூன்றுவருடங்களுக்கு பிறகுதற்போது 'திருமணம்' என்றபுதியபடத்தைஇயக்கிநடித்திருக்கிறார். இதில்தம்பிராமையாவின் மகன் உமாபதி ராமையா இன்னொரு நாயகனாகவும், நாயகியாக காவ்யா சுரேசும் நாயகியாகவும் நடித்துள்ளனர்.

தம்பி ராமையா, எம். எஸ். பாஸ்கர், ஜெயபிரகாஷ், மனோபாலா, பால சரவணன், சுகன்யா, சீமா ஜி. நாயர், அனுபமா உள்ளிட்ட பலரும் நடித்துள்ள் இந்தப் படத்தை பிரேம்நாத் சிதம்பரம் தயாரிக்கிறார். ராஜேஷ் யாதவ் ஒளிப்பதிவு செய்கிறார். சித்தார்த் விபின் இசையமைக்கிறார்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எவரிடமும் நிதானித்துப் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். உற்பத்தி மற்றும், விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**இடபம்:** செயலில் நேர்த்தியும், திறமையும் மிகுந்திருக்கும். தொழில், வியாபாரம் சிறந்து விளங்கும். நிலுவைப்பணம் வசூலாகும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம்:** செயலில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். வெகுநாளாக வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் தகுந்த முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**சிங்கம்:** அவசரப்பணியால் சிரமம் ஏற்படலாம். சூழல் உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**கன்னி:** குடும்பத்தினரிடம் பாசம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். பணவரவும், நன்மையும் திருப்திகரமாக இருக்கும்.

**துலாம்:** அன்பானவர்களின் ஆலோசனை நல்வழி காட்டும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிநிலை சீராகும். எதிர்பார்த்த அளவில் வருமானம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்கள் செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை வளர்க்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும்.

**தனுசு:** சொந்த நலனில் அக்கறை செலுத்துவீர்கள். தங்களின் எதார்த்தமான பேச்சு சிலருக்கு அதிருப்தியை ஏற்ப டுத்தலாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ற ஆதாயம் கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் செயல்களில் திறமை பளிச்சிடும். நண்பர்களின் புகழ்ச்சி வார்த்தையை பெரிதுபடுத்த வேண்டாம். வருமானம் அதிகரிக்கும்.

**கும்பம்:** அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவீர்கள். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்

**மீனம்:** குடும்பத்தினரின் அன்பைக் கண்டு நெகிழ்வீர்கள். தடைகளை தகர்த்தெறிந்து முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை உருவாகும்.








**இலங்கை நாடாளுமன்றம்**




**செஞ்சோற்று கடன் தீர்க்க
சேராத இடம் சேர்ந்து
வஞ்சத்தில் வீழ்ந்தாயடா கர்ணா
வஞ்சகன் கண்ணனடா
கர்ணா, வஞ்சகன் கண்ணனடா...**

கடன் கேட்டதும் உடனே இல்லை என்று சொல்கிறவன் மனுஷன்; அந்த நிமிஷமே ஒரு கதையை ரெடி பண்ணிச் சொல்கிறவன் பெரிய்ய்ய மனுஷன்!

வ.முருகன்@muruganv71



ஆட்காட்டி விரல் இப்போதெல்லாம், ஆண்ட்ராய்டு ஸ்கிரீனை மேலும் கீழும் நகர்த்தவே அதிகம் பயன்படுகிறது.

**வரவா ? கேட்டார் தொண்டா
வேண்டாம் ! என்றார் ரணில்**

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 5 | 6 | | | 3 | |
| 3 | | | | 2 | 1 | | 6 | |
| | | | | 8 | | 9 | | |
| 7 | | | 3 | | | | 8 | |
| 4 | 5 | | | | | | 7 | 3 |
| | 8 | | | | 7 | | | 1 |
| | | 9 | | 7 | | | | |
| | 3 | | 6 | 9 | | | | 2 |
| | 6 | | | 3 | 4 | 8 | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 7 | 5 | 9 | 2 | 8 | 6 | 4 |
| 4 | 6 | 2 | 1 | 3 | 8 | 7 | 5 | 9 |
| 9 | 5 | 8 | 4 | 6 | 7 | 2 | 1 | 3 |
| 5 | 7 | 1 | 2 | 4 | 9 | 6 | 3 | 8 |
| 2 | 4 | 6 | 3 | 8 | 1 | 9 | 7 | 5 |
| 3 | 8 | 9 | 7 | 5 | 6 | 1 | 4 | 2 |
| 7 | 9 | 3 | 6 | 2 | 5 | 4 | 8 | 1 |
| 6 | 2 | 4 | 8 | 1 | 3 | 5 | 9 | 7 |
| 8 | 1 | 5 | 9 | 7 | 4 | 3 | 2 | 6 |



தலைமை அமைச்சர் யாரு தலைமை அமைச்சர் யாருன்னு கேட்டு உயிர வாங்கினீங்களேடா... இப்ப சந்தோசமா...

**(கூகுள் மைண்ட் வொய்ஸ்)**

## மிகப் பெரியவை....

- ☑ உலகின் மிகப்பெரிய சுவர் என்பது சீனப் பெருஞ்சுவர் அல்ல, அது நல்ல இரு நண்பர்களுக்குள் உருவாகும் இடைவெளிதான்.
- ☑ உலகின் மிகப்பெரிய வைரம் கல்லினன் வைரம் என்கிறார்கள், உண்மையில் அது அவரவர் குழந்தைதான்.
- ☑ உலகின் மிகப்பெரும் பாலைவனம் சஹாரா அல்ல, அது சிறிதும் சிந்திக்காத மனிதனின் மூளைதான்.
- ☑ உலகத்தின் உயரமான சிகரம் எவரெஸ்ட் அல்ல, உதவி நாடி வந்த ஒருவருக்கு ஓடிச் சென்று உதவியவரின் இதயம்தான்.
- ☑ மிகப்பெரிய கிரகம் ஜுபிடர் என்கிறார்கள், உண்மையில் பெரிய கிரகம்... முட்டாள்களைக் கூட வைத்துக்கொண்டு தொழில் செய்வதுதான்.
- ☑ நம்பிக்கைத் துரோகத்தை எதிர்கொண்ட ஒரு மனதின் கொதிப்பை விடவா உலகத்தின் பெரிய எரிமலை..

## முதலாம் ஆண்டு திவச ஆத்மசாந்தி அழைப்பு



கடந்த வருடம் 29.12.2017 சிவபதமடைந்த
எமது குடும்ப விளக்கு

**அமரர்**

### லக்சன் கீர்த்திகா

அவர்களின் முதலாம் ஆண்டு திவச ஆத்ம சாந்தி நிகழ்வுகள் இன்று (18.12.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கந்தசாமி வீதி,**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

(CS 21875)(14.17)

**குடும்பத்தினர்.**

## தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் நட்சத்திர ஹோட்டலுக்குப் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. முகாமையாளர் (ஆண்)**

- ஹொட்டல் முகாமைத்துவத்தில் இரண்டு வருடத்துக்கு குறையாத முன் அனுபவம்.
- ஹொட்டல் முகாமைத்துவ கற்கைநெறியில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும்.
- மும்மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடியவர்.

**02. உணவு பரிமாறுபவர் (ஆண், பெண் இருபாலாரும்)**

- ஹொட்டல் உணவு பரிமாறும் வேலையில் ஒருவருடத்துக்கு குறையாத முன் அனுபவம்.
- மும்மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடியவர்.

**03. சமையல் உதவியாளர் (ஆண்)**

- சமையல் வேலையில் இரண்டு வருட முன் அனுபவம்.
- மும்மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடியவர்.

(CS/21879)(11.17)

**உங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்**
**விளம்பர இல :- JF 1002,**
**மே/பா உதயன், 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் வேலு சின்னத்தம்பி

(கிளி கடை உரிமையாளர்)

**திதி:- வைகுண்ட ஏகாதசி (18.12.2018)**

நீங்கள் வளர்த்த பிள்ளைகள் நாமெல்லாம்
மகிழ்ந்திருக்க
நம்மோடு நீங்கள் இல்லை அதைப்பார்த்து
மகிழ்ந்திடவே அப்பா!
உம் மார்பில் நாம் தூங்கி அன்பான கதைகேட்டு
அரவணைப்பில் நாம் வாழ்ந்த அழகான தருணமது
தலைநிமிர்ந்து தரணியிலே நாமெல்லாம்
வாழ்ந்திடவே
உமை உருக்கி நமக்காக உரமிட்ட தெய்வம் நீங்கள்
வியர்வை சிந்தி நீர் உழைத்த அன்பான குடும்பத்தினை
தவிக்கவிட்டு நீங்கள் சென்று எட்டு ஆண்டுகள்
கடந்தாலும்
நீங்காத நினைவுகளுடன் வாழ்ந்திருப்போம்
ஆயுள்வரை....

**நினைவுகளுடன்**

**அன்னையின் மடியில்**
**27.11.1951**

**அரக்கரின் அழிப்பில்**
**16.12.2010**

(ACH/524)(11.17)

**குடும்பத்தினர்.**

**மந்துவில் மேற்கு, கொடிகாமம்.**

## 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.11.2018 திங்கட்கிழமை
அன்று இறைவனடி சேர்ந்த

அமரர்

### செல்வன் சின்னத்தம்பி தர்சீலன்


அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 19.12.2018 புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் வடக்கு,**
**பூதர்மடம்.**

**குடும்பத்தினர்.**

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராமச்சந்திரன் சிவகுமார்

(சிவா /மைந்தன்)

**திதி : பூர்வபக்க ஏகாதசி**

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 06.08.1971 | 24.12.2012 |

அலைகடல் தாண்டி அன்னை மண் விட்டேகி...
லண்டனிலே எமை விட்டுச்சென்று நீ
ஆண்டு ஆறு உருண்டோடி விட்ட பின்னும்
இன்னும் உன் நினைவு எம் நெஞ்சில்
நிழலாக ஆடுதையா.......



கட்டிய மனைவியும் பெற்ற பிள்ளையும்
அருகிருந்து அழுதிடவும் - உம் பூவுடலை
தொட்டுப் பார்க்க முடியாத பாவிகளாய் நாமிங்கு......
பெற்ற தாயும் உடன் பிறந்த சோதரரும்
துடித்த அந்தக்காட்சி.... இன்னும்
எம் கண்ணீரால் கரையுதையா......
ஆறாண்டு என்ன நூறாண்டு சென்றாலும்
ஐயா ! உன் நினைவு எங்கள் நெஞ்சை
விட்டகலாது.......
புன்னகை பூத்த முகத்தோடு எங்கள் எல்லோரையும்
அன்புடன் அரவணைத்த உறவே !
என்றும் உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம் ஐயா !

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(AKN 616) (14.17)

**குடும்பத்தினர்.**

உ

ஸ்ரீராம ஜெயம்



# இணுவில் திருப்பதி
# அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலயம்,
# சுவர்க்கவாசல் ஏகாதசித் திருவிழா - 2018

## காலம் :- 18.12.2018 செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| **அதிகாலை - 4.30 மணிக்கு** | - சுப்ரபாதம் |
| **அதிகாலை - 5.00 மணிக்கு** | - கோபுரபூஜை தொடர்ந்து இசையாராதனை |
| **அதிகாலை - 5.50 மணிக்கு** | - சர்வ சுவர்ண அலங்காரம், விஸ்வரூப தர்சனம் . சர்வ உபசாரம், தசதர்சனம், திவ்விய பிரபந்த சமர்ப்பணம், ஸ்ரீநிவாசர் கருவறையில் இருந்து புறப்பாடு |
| **காலை 9.00 மணிக்கு** | - மூலவர் திருமஞ்சனம் (அபிஷேகம்) |
| **நண்பகல் 12.00 மணிக்கு** | - விசேட பூஜை |
| **மாலை 6.00 மணிக்கு** | - இரவு திருவிழா ஆரம்பம் |
| **மாலை 6.30 மணிக்கு** | - வசந்தமண்டப பூஜை |
| **மாலை 7.00 மணிக்கு** | - சுவாமி வீதி உலா (நாச்சிமார் சகிதம்) |
| **மாலை 7.30 மணிக்கு** | - ஸ்ரீநிவாசர் கருவறை திரும்புதல் (பஞ்சரத்தின ஆராதனை) |
| **இரவு 8.30 மணிக்கு** | - அகண்ட நாம பஜனை தொடர்ந்து நித்திரை விழிப்பு வழிபாடு |

**19.12.2018 அதிகாலை 5.00 மணிக்கு தீர்த்தவாரி, அபிஷேகம்**
**காலை 6.00 மணிக்கு சுவாமி வீதியுலா காலை 6.30 மணிக்கு- பாரணை**

**18.12.2018 - இசை நிகழ்வு**

**அதிகாலை 5.00 மணிக்கு** **பாட்டு** - அ.அமிர்தலோஜனன், அ.அமிர்தசிந்துஜன், **வயலின்** - அ.ஜெயராமன், **மிருதங்கம்** - க.கஜன், **கெஞ்சிரா** - அ.சண்முகப்பிரியன்.

**மாலை 7.30 மணிக்கு** - **சங்கமம் வயலின் வாத்தியக் கலையக மாணவர்களும், கலைஞர்களும் இணைந்து வழங்கும் பஞ்சரத்தின ஆராதனை**
**வயலின்** - சு.கோபிதாஸ், சு.துவாரகி, சு.மயூரதி, த.பவனுஷா, ஸ்ரீ.கனோஜா, சி.கீதஸ்ரீ, கோ.கலைமகன், சி.சிவேதன், சி.சிவோதயன், கி.அனுஷாகர், அ.அபிராம், **பாட்டு** - பொன்.ஸ்ரீவாமதேவன், கிருபாசக்தி கருணா, அ.அமிர்தசிந்துஜன்
**மிருதங்கம்** - ம.லோகேந்திரன், ஞா.வசந் **கடம்** - கு.ரவிசங்கர் **மோர்சிங்** - சி.செந்தூரன்

**குறிப்பு:- வைகுந்த ஏகாதசி விஷேட அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய விரும்பும் அடியவர்கள் முற்கூட்டியே காரியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

**தொலைபேசி இல :- 021 224 2300** **ஆலய தர்மகர்த்தா - ச.கணேசலிங்கம்**



திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்
## நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி

**10%-50% வரை விலைக்கழிவு**



**புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்**

| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | - ~~1500~~/= | 1000/= |
| டெனிம் டொப் (Top) | - ~~1500~~/= | 1000/= |
| 2 in 1 சல்வார் துணி | - ~~1500~~/= | 1000/= |
| 3 in 1 சல்வார் துணி | - ~~2000~~/= | 1500/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000~~/= | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000~~/= | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500~~/= | 1000/= |



**லெகின்ஸ் 3 இற்கு 1000/=**

**15000/=** பெறுமதியான பட்டுச் சாறி ஒன்றை கொள்வனவு செய்து
**5000/=** பெறுமதியான சாறி ஒன்றை **இலவசமாக** பெற்றிடுங்கள்

கொட்டன் **Top**, டெனிம் **Top**, மொடன் **Top**, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், **T**-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்



**ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்**

## இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
## காலம்: 14.12.2018 - 31.12.2018 வரை

AUTO LOAN



## சௌகரியமான வாகனத்தின் கனவை இலகுவாக நனவாக்கிடுங்கள்

பீப்பள்ஸ் லீசிங் ஒடோ லோன் மூலம் உங்கள் வாகனக் கனவை நனவாக்கிடுங்கள். பதிவுசெய்த மற்றும் பதிவு செய்யாத சகல வாகனங்களுக்கும் பீப்பள்ஸ் லீசிங் ஒடோ லோன் பல சலுகைகளை வழங்குகிறது.

- 7 வருடங்கள் வரையான நீடித்த மீள் செலுத்தும் கால வரையறையுடன், மிகக்குறைந்த மாதாந்த தவணைகள்
- லீசிங் முறையினை விடவும் மிகவும் குறைந்த ஆவணக் கட்டணம்
- கடன் செலுத்தும் காலப்பகுதியில் உங்கள் வாகனத்திற்கு மற்றுமொரு வாகனத்தை மாற்றிடக்கூடிய வசதி
- துரித சேவைகள்
- பீப்பள்ஸ் லீசிங் மூலம் உங்களுக்கு காப்புறுதி மற்றும் மதிப்பீட்டு சேவைகளை பெற்றிட முடியும்

www.metads.agency

PEOPLE'S LEASING

HOTLINE 0112 206 300


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 12 - 08 - 1948



விண்ணில் 18 - 11 - 2018

## அமரர் இராசையா யோகேஸ்வரி (மட்டுவில்)

பூலோகம் மகிழ்ந்திடவே புத்தூரில் பூத்தவளே
புன்னகை சொரிந்து நீ மண்ணுலகில் வாழ்ந்தாயே
பண்பில் சிகரம் தொட்டு அன்பில் உருவானவளே -எம்
கண்முன் இல்லை இன்று, கலங்குகிறோம் அம்மா!
விண்ணுலகு உனை அழைக்க விரைந்ததேனோ?-அம்மா உன்
முக்கனியும் மூலவரும் தவிக்க நீசென்றதேனோ?

அன்பாலே அரவணைத்து அதிகாரம் செய்யும் உந்தன்
பொன்வாயால் நீ இசைக்கும் சங்கீதம் யாரறிவார் ?
மட்டுவிலில் மணமுடித்து மண்ணில் மூன்று ஈன்றெடுத்து
எட்டுத்திக்கும் புகழ்சேர்த்து எங்களையும் வளர்த்தாயே
வெற்றிலையால் சளிவிரட்டி வெற்றிவழி உரைத்தவளே
வெம்பி புலம்பவிட்டு வெகுதூரம் சென்றதேனோ ?

நிம்மதியாய் நாமுறங்க நித்திரையைத் தொலைத்தவளே
சந்நிதியே நீதானே அம்மா! சந்தனமாய் வந்துவிடு
ஊர்கூடி அழவைத்து பார்விட்டு சென்றவளே
விழிநீர் பூக்களால் உன்னை வழியனுப்பி வைக்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் என்றும் பிரார்த்திக்கின்றோம்

18.11.2018 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எம் குடும்பத்தலைவி அமரர் இராசையா யோகேஸ்வரியின் மரணச்செய்தி கேட்டு உடன்வந்து ஆறுதல் சொல்லி வேண்டிய சகல உதவிகளையும் புரிந்த எமது உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசிமூலமாகவும் சமூகவலைத்தளங்கள் மூலமும் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் மலர்வளையங்கள் பதாதைகள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக்கிரிகைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டு மயானம் வரை உடன் வந்து துயரில் கலந்துகொண்டவர்களுக்கும், சமூகமளித்த அனைவருக்கும், எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளை காணிக்கையாக்குகின்றோம்.

மருதங்குளம்
மட்டுவில் தெற்கு

குடும்பத்தினர்


## IDEAL FIRST CHOICE

## யாழ்ப்பாணம்

**Multi Brand Workshop**




இலங்கையில் மோட்டார் வாகன துறையில் முன்னணி வகிக்கும் ஐடியல் குழுமமானது அனைத்து வகையான மோட்டார் வாகனங்களுக்கும் விற்பனைக்கு பிந்திய சேவைகளை நாடு பூராகவும் வியாபிக்கும் முகமாக தனது பிராந்திய சேவை நிலையத்தை தற்போது உங்கள் நகரத்திலும்

**நவீன தொழில்நுட்பத்தினூடாக வாடிக்கையாளர்களின் மனம் திருப்தியடையும் வண்ணம் வாகனங்களை சீரமைத்து கொடுக்கப்படும்.**

### எங்கள் சேவைகள்

- லுப்பிரிக்கன்ட் சேவைகள்
- இயந்திர திருத்தங்கள்
- வீல் எலைன்மெண்ட் சேவைகள்
- வாகன டீட்டைலிங் மற்றும் கழுவுதல்
- அசல் உதிரிப்பாகங்கள்
- விபத்து சம்பந்தமான பழுதுபார்த்தல்
- வாகன உடல் மற்றும் பெயிண்ட் திருத்தங்கள்
- வாகன ஸ்கேனிங்
- ஏசி மற்றும் மின் திருத்தங்கள்


இல.63, நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
தொடர்பு இலக்கம் - 021 221 6363
077 566 9602
076 724 5433

IDEAL FIRST CHOICE

Mahindra TOYOTA Audi NISSAN TATA RENAULT PERODUA KIA SUZUKI

## மரண அறிவித்தல்

# திருமதி இராசையா பாக்கியம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் 75/17, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் இராசையா நேற்று (17.12.2018) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகளும் ஆறுமுகம் தெய்வானையின் மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, விசாலாட்சி, பொன்னம்மா, முருகேசு, பொன்னுச்சாமி, அன்னபூரணம் மற்றும் மாரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அம்பலவாணர், பொன்னுச்சாமி, கந்தசாமி, செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கமலாம்பிகை (தவம்), பரமானந்தம், சண்முகநாதன், தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் அப்புலிங்கம் (லிங்கம் கூல்பார்), நாகேஸ்வரி, ராகி, சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் மாமியாரும் கீதா, கீதராஜ், கீதகரன், கீதரமணன் கீதசயிலன், கவிதா, லக்சா, இந்துகன், சுவஸ்திகா, பிரிந்திகா, கீர்த்திகா, தனுறிக்கா, வசந்தகுமார், கலா, அகல்யா, ரேகா, அனுசன், செந்தூரன், சிவரூபன் ஆகியோரின் பேர்த்தியும் கபிலயன், வேனுகன், பானுகன், ஹரிஸ், பிரவீணா, பரீத்திகா, சயனுகா, மகதீஸ், பவனேஸ், சாய்ஷா, விகாசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2018) புதன் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**75/17, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம். 077 7111410**

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்.**

## மரண அறிவித்தல்

# திருமதி மனோன்மணி (ஈஸ்வரி) குமாரசாமி



பிறப்பு 29.12.1935 இறப்பு 17.12.2018

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி (ஈஸ்வரி) குமாரசாமி நேற்று (17.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் அருணாசலம் குமாரசாமியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சீனிவாசகம், நாகேஸ்வரி, தருமராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சாந்தி (சுவிஸ்), உதயகுமார் (பிரான்ஸ்), ரவிக்குமார் (யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்), ஜெயந்தி (பிரான்ஸ்), அருணாசலம் (லண்டன்), செந்தில்குமார் (சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் - போதனா வைத்தியசாலை), ஆகியோரின் பாசமிகு தாயாரும் சோதிலிங்கம் (சுவிஸ்), ஜெயராணி (பிரான்ஸ்), லோகரஞ்சனா (ஆசிரியர் தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), மேனிக்கா (லண்டன்), நந்தினி (சிரேஷ்ட உத்தியோகத்தர் - போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கயல், கௌசிகா, நர்மிதா, சோதிகா, பிரியந்தனா, பிரணவி, சுரபி, மனோஜீவன், வைஸ்ணவி, கேசவன், பிரவீனா, தேன்நிலா, நிதர்சன், நிர்மலன், நித்திலன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**

**தகவல்:**
**பிள்ளைகள்.**

### எதிர்க்கட்சி...

உறுப்பினர் நிசாந்த முத்துக்கெட்டிகமவும் "சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசில் இணைய மாட்டார்கள்" என்று தெரிவித்துள்ளார். "சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21பேரும் நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்வார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாளை இன்று கூடவுள்ள நிலையில் நேற்று அரச தலைவரைச் சந்தித்த சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

### மாற்றங்களின்...

சூடு பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இன்று காலை சிறப்புக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் பங்கேற்பதற்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு சபாநாயகர் அலுவலகம் அழைப்பு விடுத்துள்ளது. அந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரம் விவாதிக்கப்படும் என்று தெரிகின்றது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என்று மகிந்த ஆதரவு அணி கோருகின்றது. இது தொடர்பாக இன்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசே அமைக்கப்படும் சாத்தியங்கள் உள்ளதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசமுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

இடைக்கால வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிப்பது தொடர்பாகவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. இன்றைய நாடாளுமன்ற அமர்வில் பரபரப்புக்குப் பஞ்சமிருக்காது என்று அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். (ற-10)

## காணவில்லை



யோன் ஆகிய அத்து என்ற நாய் 13.12.2018 வியாழக்கிழமை இரவு 8.00 மணியளவில் இருந்து காணவில்லை. தயவு செய்து மனிதநேயம் கொண்ட இதயங்கள் தயவு செய்து அத்துவைத் தந்து உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். கண்டுபிடித்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். (நல்லூர் வடக்கு வீதி)

**தொடர்பு: 077 313 1894**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 11-07-1987 **மறைவு** 08-01-2017

அமரர்

# லயன் இராஜகோபால் சாருஜன் (KK)

திதி: வைகுண்ட ஏகாதசி

**எங்கள் தெய்வத் திருமகனே – சாரு**
**உங்கள் தூய திருவடியைத் தேடுகின்றோம்**
**வருடங்கள் இரண்டாகக் கலங்கித் துடிக்கின்றோம்**
**வைகுண்டம் சென்றதால் எமைப் பிரிந்தீரோ – சாரு**
**மெய்யுருகி இந்நாளில் வணங்குகின்றோம் – ஒரு தரம்**
**வந்து எமைப் பாருமையா!**

சீனியர் லேன்.
கலட்டி அம்மன் கோயிலடி.
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



# திருமதி நடராசா நகுலேஸ்வரிநாயகி

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா நகுலேஸ்வரிநாயகி நேற்று (17.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரகுநாதர் - வேதநாயகி அம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற நடராசாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற குமாரசுவாமியின் அன்புச் சகோதரியும் செல்வகணேசதாஸ், சிவமோகனதாஸ், சிவதாஸ், காலஞ்சென்ற சிவரஞ்சினி மற்றும் சிவரஞ்சனதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் கலைமதி, பிறீடா ஆகியோரின் அன்பு மாமியாரும் சோபிதன், ஸ்கந்தன், நிரஞ்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது பன்னாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ந.சிவரஞ்சனதாஸ் (மகன்)**

### விபத்தில்...

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிய நாகராசா மதுசன் (வயது16) என்ற சிறுவனே உயிரிழந்தார். நெடுங்கேணி, தண்டுவானைச் சேர்ந்த சிறுவன் தனது உறவினருடன் ஒட்டுசுட்டான் சுற்றுவட்ட வீதியில் உந்துருளியில் சென்றபோது பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகினான். இந்த விபத்துக் கடந்த 14ஆம் திகதி நடந்தது உந்துருளியில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். சிறுவன் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தான். விபத்துத் தொடர்பான விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-110)

### ஐரோப்பிய....

ஒருமைப்பாட்டுக்கும், அதன் செழிப்புக்குமான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவோம் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ற)

### பொன்னாலை...

இன்று அதிகாலை 3 மணிக்கு சங்காபிசேகப் பூசைகள் இடம்பெற்று அதிகாலை 5 மணிக்கு சுவர்க்க வாயில் தரிசனம் இடம்பெறும். தொடர்ந்து காலை 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று 11 மணிக்கு பெருமாள் தேர் ஏறுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-21)

## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - மல்லாகம்

**விண்ணப்பதாரர் - சிவலிங்கம் ரஜீபன் பெண் தனுக்ஷாஜினி**
**முகவரி -சங்கானை வீதி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 01. சங்கானை வீதி. ஆதன இலக்கம் 251/1 என்ற இலக்கத்தைக் கொண்ட கன்னான் தோட்டம் என்ற ஆதனம் ஆதனப்பதிவேட்டில் இரத்தினாம்பாள் W/O மகாலிங்கம் எனும் பெயரில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை செல்வநாயகம் இராஜதுரை என்பவர் பிரசித்த நொத்தாரிஸ் மு.திருநாவுக்கரசு முகதாவில் 3326/27.01.2014இலக்க உரிமைப்பிரகடன உறுதியின் மூலம் செல்வநாயகம் இராஜதுரை என்பவரின் தகப்பனாரின் தாயார் செல்லாச்சி கணபதிப்பிள்ளையின் உடன்பிறந்த சகோதரியானவரும் அவரது பேத்தியுமாகிய மகாலிங்கம் பெண் இரத்தினாம்பாள் என்பவருக்கு 1916ம் ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் செ.ந.துரையப்பா முகதாவில் 9716 இலக்கத்தில் முடிந்த சீதன உறுதிப்படி அவருக்கு இருந்து அவர் திருமணமாகி நெடுங்காலமாக பிள்ளைகள் இல்லாமல் வாழ்ந்து வரும் நாளில் அவரின் சகோதரியின் ஏகபுதல்வனான கணபதிப்பிள்ளை செல்வநாயகத்திற்கு சேரவேண்டியதாக இருந்து அவரும் இறக்க அவரின் புதல்வனான செல்வநாயகம் இராஜதுரைக்கு வந்தடைந்தது என வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் பிரசித்த நொத்தாரிஸ் மு.றெமிடியஸ் முகதாவில் 1572/18.03.2017ம் இலக்க உறுதியின் மூலம் திருத்தல் உறுதி செய்யப்பட்டு பின் செல்வநாயகம் இராஜதுரை 29.04.2017 அன்று பிரசித்த நொத்தாரிஸ் திருமதி லிங்கா துரைராஜா முகதாவில் 10509 உறுதிமூலம் அவரின் மகள் தனுக்ஷாஜினிக்கும் சிவலிங்கம் ரஜீபனுக்கும் நிறைவேறிய திருமணம் காரணமாக சீதனமளித்தார்.

ஆதன விபரம் -

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் அளவெட்டி இறையும் கன்னன் தோட்டம் நிலப்பரப்பு 07. இது உத்தரவு பெற்ற நிள அளவையாளர் மு.இராசையா அவர்களின் வரைபட இலக்கம் 1474/21.01.2014 இன்படி நிலப்பரப்பு 06 குழி 15.57 எல்லை.

கிழக்கு - சிவப்பிரகாசத்தின் ஆதனம்
வடக்கு – வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஆதனமும் பொன்னம்பலம் மாவலிராஜாவின் ஆதனமும்
மேற்கு – பொன்னம்பலம் மாலிராஜாவின் ஆதனமும் வெள்ளவாய்க்காலும் திருநிறைச்செல்வன் பெண் சிவமலரின் ஆதனமும்
தெற்கு – சங்கானை வீதியும். திருநிறைச்செல்வன் பெண் சிவமலரின் ஆதனமும்

மேற்குறித்த ஆதனத்தை சிவலிங்கம் ரஜீபன் பெண் தனுக்ஷாஜினி எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

## அன்பே வடிவான அருள்நிறைந்த தெய்வத்தின்
## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மயில்வாகனம் சபாரெத்தினம்
(ஓய்வுபெற்ற அதிபர்)
திதி:- பூர்வபக்க சுவர்க்கவாயில் ஏகாதசி (18.12.2018)

| பூவுலகில் புதுமலராய் | விண்ணுலகில் ஒளிவடிவமாய் |
|---|---|
| 01.07.1939 | 11.01.2014 |

தரணியிலே தருமத்தின் வடிவாக உதித்தீர் ஐயா
தணியாத செல்வத்தின் சிறப்பினிலே வளர்ந்து வந்தீர்
சீராகப் பலகலையும் செம்மையுடன் கற்றறிந்து கொண்டீர்
சிறப்புமிக்க ஆசானாய் அதிபராய் சேவை செய்து புகழும் பெற்றீர்

இல்லறமாம் சோலையிலே இணைபிரியா அன்றிலைப்போல்
திகழ்ந்தீரன்றோ!
இறைபக்தி மிக்கவராய் காலமெல்லாம் மிளிர்வதை
நாம் கண்டுகொண்டோம்
நிலையில்லா இவ்வுலகில் நிம்மதியைத் தேடிடவே பாடுபட்டீர்
நேர்மைமிக்க பாதையிலே என்றுமே நடைபோட நாட்டங் கொண்டீர்

தொல்லைமிக்க பிறவிதனை துச்சமென மதியாது வளர்ந்தீரன்றோ
தோல்வியையும் வெற்றியையும் சமமாக மதிப்பதிலே சமர்த்தரானீர்
நீர்க்குமிழிபோன்ற நிலையில்லா வாழ்வுதனை வெறுத்துவிட்டு
நிலையான சுவர்க்கத்தில் சேர்வதற்கா நினைவிழந்து பயணமானீர்?

**"இராசபதி"**
**புத்தூர் வீதி, மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

**என்றும் உங்கள் நினைவில் வாழும்**
**மனைவி, மைத்துனர்கள்,**
**சகோதரர்கள்**

(ACH/526)(11.17)

## கண்ணீர் அஞ்சலி



யா/ சென்.ஜேம்ஸ் ம.வித்தியாலயத்தின்
ஆசிரியை செல்வி க.கௌசியா
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பராசக்தி கயிலாசபிள்ளை**
அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம், யா/சென்.ஜேம்ஸ் ம.வி.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியர்
**திரு.தி.உமாகரன்** அவர்களின் பாசமிகு தாயார்
**அமரர்**
**தியாகராசா தவமணிதேவி**
அவர்கள் 19.11.2018 அன்று இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி.**

(CS 21880)(14.17)

## மரண அறிவித்தல்
### சின்னத்தம்பி குணரத்தினம்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23.10.1960 | 17.12.2018 |

கிளானை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மடத்தடி, கந்தரோடை, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குணரத்தினம் நேற்று (17.12.2018) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு மங்கயற்சரசி தம்பதிகளின் அன்பு மருமகனும் கிருஷ்ணகுமாரி (றேணுகா பரிசாகர் - தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை), நல்லம்மா, காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், இராச ரத்தினம் மற்றும் சிவசுப்பிரமணியம், தெய்வநாயகி, சுப்புலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் கெங்கேஸ்வரன், கமலாம்பிகை, காலஞ்சென்ற நவநாயகம் மற்றும் கனநாயகம், சௌந்தலாதேவி, காலஞ்சென்ற விநிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்பலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி.**

(CS 21892/15/18)

## மரண அறிவித்தல்
### திருமதி தங்கம்மா அருணாச்சலம்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20.01.1929 | 16.12.2018 |

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் ஞானவைரவர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா அருணாச்சலம்கடந்த (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்தி லிங்கம், செல்லையா, இராசதுரை மற்றும் பொன்னம்பலம், கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அழகம்மா (மகேஸ்வரி), தனலட்சுமி, கந்தசாமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரராஜசேகரம், பூபாலசிங்கம், இராசமலர் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் மகாதேவி, கோகுலன் (லண்டன்), கிரிதரன் (அமெரிக்கா), அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் சிறிமாலன், பிரவீணா, றுசாந், சொஃபியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2018) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் உரும்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி, பத்தர்கலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## ஐ.தே.கட்சி...

பொருளில் நேற்று ஐக்கிய தேசிய முன்னணி கொழும்பில் மக்கள் கூட்டம் நடத்தியது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஆட்சி, அதிகாரத்தைப் பலவந்தமாகக் கொண்டு செல்ல மகிந்த ராஜபக்ச எமது தரப்பட நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைபேசி தமது தரப்புக்கு இழுக்க முயற்சித்தார். அது தோல்வி கண்டதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளப் பார்த்தார். சிறைக் கைதிகளை விடுவிப்போம் என்றும், அரசியல் தீர்வைத் தருவோம் என்றும் பேச்சு நடத்தினார். அது மட்டுமல்லாது மகிந்த ராஜபக்சவும், நாமல் ராஜபக்சவும் வெலிகடைச் சிறைச்சாலைக்குச் சென்று முன்னாள் புலி உறுப்பினர்களைச் சந்தித்தனர்.

நாம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினருடன் பேசினால் புலிகள். ஆனால் மகிந்த ராஜபக்ச கூட்டமைப்புடன் பேச்சு நடத்தினால் பூனையா?. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் வியாழேந்திரனையும் மகிந்த தமது தரப்புக்கு இழுத்தார். ஒன்றையாட்சியில் அனைத்து இன மக்களும் ஒன்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழும் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். இலங்கை சுதந்திரம் அடைந்து 71 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் ஓர் அரசியல் தீர்வை எமக்குப் பெற்றுக்கொடுக்க முடியாது. ஏனைய நாடுகள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து முன்னோக்கிப் பயணித்துள்ளன.

தேசிய அரசுடன் இணைந்து பயணிக்கக் கூடிய வகையில் வடக்கிலிருந்து உதயமான ஒரே தலைவராகச் சம்பந்தன் மட்டுமே உள்ளார். இவர் இன்று இணைந்து பயணிக்க ஆரம்பித்துள்ளார். இந்த நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே ஒன்றுமைப்படுத்த முடியும்" -என்றார். (ந-10)

கார் விற்பனைக்கு
Toyota AQUA CABXXXX வெள்ளைநிற கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 071 856 1252

## மரண அறிவித்தல்



### கலாநிதி தம்பிஐயா நடராஜா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02.08.1929 | 15.12.2018 |

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை, மாத்தளை, கொழும்பு, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. தம்பிஐயா நடராஜா கடந்த (15.12.2018) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புத்திரனும் காலஞ்சென்ற- விலபிரட் அக்னஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும் ராணியின் அன்புக் கணவரும் சுரேந்திரன் (பிரித்தானியா), ரவீந்திரன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, மனோன்மணி, மங்கையர்கரசி, . பாலயோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்றவர்களான தம்பிராசா, சரவணமுத்து, அமிர்தலிங்கம் மற்றும் சிவனேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தபுஷி (பிரித்தானியா), ஜெனிபர் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேவி (பிரித்தானியா), அசோகா (பிரித்தானியா) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.12.2018 வியாழக் கிழமை மு.ப.8.30 மணிமுதல் மு.ப. 11.30 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பின்னர் ந.ப. 12.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சுரேன்**
**076 3017266**

(C 11045/15/18)

# சேவைநலன் பாராட்டு



எமது பிரதேச செயலகத்தில்
பணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும்

**பொ.தில்லைநாதன்**

(அலுவலகப்பணியாளர் II)
அவர்களை பல்லாண்டுகாலம் சீரும்
சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

**பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம், வேலணை.**

Best Wishes

# மரண அறிவித்தல்



## கணபதி தனபாலசிங்கம்

மீசாலை மேற்கு, சாலியத்தையைப் பிறப்பிடமாகவும், கண்ணன் ஆலய வீதி, மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி தனபாலசிங்கம் கடந்த (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கரலஞ்சென்றவர்களான பொன்னன் பொன்னி தம்பதிகளின் அன்பு மருமகனும் சோகரியத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பரமேஸ்வரி, சின்னமணி, தம்பு, குலவீரசிங்கம், நவமணி மற்றும் இராஜேஸ்வரி, குணபாலசிங்கம் ஆகியோரின்அன்புச்சகோதரனும்இலட்சுமி,கிருஷ்ணன்,மகேஸ்வரி, தவமணி, கனகசபாபதி, இராசலிங்கம், சிங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2018) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காகமட்டுவில்தெற்குசின்னத்து இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி

யாழ்போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் **திருமதி பேரின்பநாயகம் சியாமளேஸ்வரி** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி நடேசு மாணிக்கம்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிக்கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.**



## கிழவன்காடு கலாமன்றம்
நடத்தும்
# தெய்வீகக் கலையரங்கு

**இடம்** : கிழவன்காடு கலாமன்றம்
மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
**காலம்** : 19.12.2018 புதன்கிழமை மாலை 5.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

**வேதபாராயணம்** :- தென்னிந்திய மற்றும் ஈழத்து வேதவிற்பன்னர்கள்
**திருவாசக ஓதல்** :- "திருவாசகக்குயில்" காரை லீலாவதி இராசரத்தினம்
**சொற்பொழிவு** :- தமிழருவி காரை த.சிவகுமாரன்
**நாட்டிய அர்ப்பணம்** :- "சிவானந்ததரிசனம்" நெறியாள்கை - கலாநிதி கிருஷாந்தி ரவீந்திரா

**நாதஸ்வர இளவரசு K.P. குமரன் குழுவினர் வழங்கும்**
**"நாத சங்கமம்"**

குறிப்பு:- நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை யாழ் கிளையிலிருந்து (இல.428, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்) பி.ப 4.15 மணிக்கு ஆரம்பமாகும். (யாழ். வண்ணை சிவன் கோவில் அருகாமை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**கிழவன்காடு கலாமன்றம்,**
**காரைநகர்.**

## தமிழ்க்...

கூட்டமைப்பு எம்முடன் கரம் கோர்த்தது. இணக்கப்பட்டின் அடிப்படையில்தான் நாம் அரசியல் நடத்துகின்றோம்.

இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு, காலிமுகத் திடலில் நேற்று மாலை ஜனநாயகத்தை வெற்றி கொண்டதைக் கொண்டாடுவோம் என்ற தொனிப் பொருளில் மக்கள் கூட்டம் ஐக்கிய தேசிய முன்னணியால் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது என்று சிலர் போலிப் பரப்புரை செய்கின்றனர். அவ்வாறு எந்த உடன்படிக்கையும் செய்யப்படவில்லை. ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே கூட்டமைப்பு எம்முடன் கரம் கோர்த்தது. இணக்கப்பட்டின் அடிப்படையில்தான் நாம் அரசியல் நடத்துகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினையை ஊக்குவிக்கவில்லை. பௌத்த மதத்துக்கு தற்போது வழங்கப்படும் முன்னுரிமையை அப்படியே நீடிக்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

அரச தலைவரை விமர்சிக்க நான் விரும்பவில்லை. ஒரு விடயத்துக்குப் பதிலளிக்க வேண்டும். நாடாளுமன்றச் சம்பிரதாயங்களை மதித்து ஆட்சியை ஒப்படைத்தேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார். உண்மை அதுவல்ல. மக்கள் எழுச்சிப் பலத்துக்குப் பயந்தே அவர் ஆட்சியை ஒப்படைத்தார்" - என்றார்.

(ற-10)

# University of Jaffna, SriLanka
## Faculty of Arts
## Walk- in- interview

Walk in Interview for the appointments of Temporary Assistant Lecturer/Temporary Instructor in Art & Design will be held on 27th December 2018 at 9.30am in the Mini Board Room of the Faculty of Arts, University of Jaffna

Minimum requirements/Qualifications for the Post of Temporary Assistant Lecturer/ Temporary Instructor

1. A degree with specialization in the relevant subject with First or Second class (upper division) Honours.
   Or
2. A degree with specialization in the relevant subject with Second Class (Lower division) Honours.
   Or
3. (a) A degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours and
   (b) A recognized postgraduate degree in the relevant subject.
4. Candidates who are awaiting results for the final degree examination may also be present.


| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer/ Temporary Instructor | Rs. 40,324/- p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview for the above mentioned posts with educational and any other relevant certificates (originals) along with certified copies, National identity Card and Curriculum Vitae.

**Registrar**
**University of Jaffna**

(IN8738)(11,17)

# மரண அறிவித்தல்



## கந்தையா கேதீஸ்வரன்

வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 10 ஆம் வட்டாரம் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கேதீஸ்வரன் நேற்று (17.12.2018) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை - செல்லம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் உதயராணியின் பாசமிகு கணவரும் மதுர்சன் (கரிகணன் தனியார் நிறுவனம்), பிரணவன், பிருந்தன், தஷாயினி, மதுசியன், ஆகியோரின் ஆருயிர்த் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான துரைராசா (தபால் ஊழியர் வேலணை), இரஞ்சிதமலர், யோகராசா மற்றும் இரதாநாயகி, கமலாதேவி, மல்லிகாதேவி, ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான உருத்திரமூர்த்தி, தவராசமூர்த்தி, செல்வமணி மற்றும் விசித்திரமூர்த்தி, கேதீஸ்வரி, சந்தணகுமாரி, சிவானந்தமூர்த்தி, ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2018) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**10ஆம் வட்டாரம்,**
**புங்குடுதீவு. 077 8317239**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## சின்னப்பொடியன் கந்தையன் (தம்பர்)



**பிறப்பு 22.02.1933 இறப்பு 16.12.2018**

அளவெட்டி மேற்கு, காட்டுப்புலத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு வராஹி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் கந்தையன் (தம்பர்) 16.12. 2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சடையர் மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் மகேஸ்வரியின் (சின்ராசு) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான இராசையா, கணபதி மற்றும் தங்கம்மா, சின்னம்மா, காலஞ்சென்ற செல்லையா மற்றும் இராசம்மா, சரஸ்வதி, பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், வீரபாகு மற்றும் திரவியம், பவளமணி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பிறேமா (ஆசிரியர், யா/இளைய தம்பி இந்து வித்தியாலயம்) மற்றும் பிறேம்குமார், காலஞ்சென்ற சிவகுமார் (செல்வம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திரன், குமுதினி ஆகியோரின் அன்பு மாமனும், பேருசாளி, தனுவர்ணன், பபிகேசன், டிலான், டீனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அவிக்கப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## ஒற்றையாட்சிக்குள்...

கொழும்பு, காலிமுகத் திடலில் நேற்று மாலை ஜனநாயகத்தை வெற்றி கொண்டதைக் கொண்டாடுவோம் என்ற தொனிப்பொருளில் மக்கள் கூட்டம் ஐக்கிய தேசிய முன்னணியால் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

"மக்கள் பலத்தை எவராலும் தோற்கடிக்க முடியாது. எமது போராட்டத்தை ஒருவாரம் கூட முன்னெடுக்க முடியாது என்று ஒரு சிலர் நினைத்தனர். அவர்கள் ஒன்றை மறந்துவிட்டனர். நெருப்பின் நடுவே இருப்பது தாச்சியே. அப்பம் அல்ல. நெருப்புக்கு முகம் கொடுப்பது தாச்சிதான். தீயை அணைக்க நாம் ஊற்றியது மக்களின் இறையாண்மை என்ற நீரையே. அது ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. எமக்குப் பலம் இல்லை என்றவர்கள் தற்போது எமது பலத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

மக்களின் இறையாண்மையை ஒழிக்க நாங்கள் தயராக இல்லை. எமது நாட்டின் மக்களின் இறையாண்மை மட்டுமல்ல, அதைப் பாதுகாக்கும் சக்திவாய்ந்த வலயம் ஒன்று இடப்பட்டுள்ளது. சுயாதீன நீதிமன்றம், சக்திவாய்ந்த நாடாளுமன்றம், அடிப்படை உரிமைகள் என அனைத்தையும் உள்ளடக்கி மக்களின் இறையாண்மையைப் பாதுகாத்துள்ளோம்.

மகிந்த அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றதைப் பார்க்கும்போது ஹிட்லரின் நினைவே வருகின்றது. அவரும் பெரும்பான்மை இல்லாத அரசு ஒன்றின் மூலமே அதிகாரத்துக்கு வந்தார். ஹிட்லருக்குப் பெரும்பான்மை இல்லாததால்தான் சர்வாதிகாரத்தைக் கையில் எடுத்தார். 10 மில்லியன் மக்களைக் கொன்று குவித்தார். உலகப் போரை ஏற்படுத்தினார்.

நாட்டில் பெரும்பான்மை இல்லாதவர்கள் குறுக்கு வழியில் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். நாடாளுமன்றில் மிக மோசமாக நடந்து கொண்டனர். சபாநாயகரை நாடாளுமன்றம் வரவிடாது அவர் வரும் இரு கதவுகளையும் மறைத்துக் கொண்டனர். அவர்களுக்கு மூளையுள்ளதா?. இவர்களால் நாட்டை ஆட்சி செய்ய முடியுமா?. ஜனநாயகத்தை மிளகாய்த் தூள் கலாசாராமாக மாற்றினர். சபாநயகர் வேறு வழியில் வந்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்தினார்.

அவர்கள் மேற்கொண்ட அனைத்துச் செயற்பாடுகளையும் தோல்வியடைச் செய்து. அவர்கள் வீசிய அனைத்துப் பந்துகளையும் சிக்சர்களாக மாற்றினோம். தற்போது பொதுத் தேர்தலுக்காகவே அனைத்தையும் செய்தனர் என்று கூறுகின்றனர். 19ஆவது திருத்தத்துக்கு அனைவரும் ஒன்றிணைந்தே வாக்களித்தோம். அதில் நான்கரை வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றதைக் கலைக்க முடியாது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தேர்தல்தான் இவர்களுக்குத் தேவையாக இருந்திருந்தால் நாடாளுமன்றில் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்திருக்க முடியும். மக்களுக்கு தேர்தல் அவசியமாக இருக்குமானால் அதை ஏன் நாங்கள் எதிர்க்கின்றோம்?.

சதித் திட்டத்தை மேற்கொண்டுவிட்டு லித்வேனியா, கொசோவியா போன்ற நாடுகளை எமக்கு உதாரணம் காட்டினர். இந்த நாடுகள் எங்கே உள்ளன என்றுகூட அவர்களுக்குத் தெரியாது. இங்கு தேர்தல் தேவையல்ல, பெரும் சதியொன்று இருந்தது. ஆனால் அவர்களின் சூழ்ச்சியை உயர்நீதிமன்றம் அரசமைப்பை மீற முடியாது என்று தெரிவித்துத் தோற்கடித்தது. அதனால் தற்போது இனவாதத்தைத் தூண்டுகின்றனர்.

இந்த நாட்டில் நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் அரசியல் தீர்வின் அவசியம் கருதி ஒன்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டு பிளவுபடாத நாட்டில் அரசியல் தீர்வைக் கொண்டுவருவோம். ஒன்றையாட்சியில் இருந்து நாங்கள் விலக மாட்டோம். நாங்கள் எடுத்த முயற்சியால்தான் தற்போது நீதித்துறை சுயாதீனமாகியுள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஜனநாயகத்தைச் சக்திமயப்படுத்தியபோதும், பல குறைபாடுகள் இருந்ததையும் ஏற்றுக் கொள்கின்றோம். குறைபாடுகளை நிவர்த்தி செய்வதே எமது இலக்கு. இரு முக்கியமான தேர்தல்கள் உள்ளன. நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுத் தர வேண்டும் என்று கோருகின்றோம். நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வேண்டியுள்ளது. அதைப் போன்று அரசமைப்புக்கு முரணான சட்டங்கள் உள்ளன. அவற்றை நீக்க வேண்டும். சட்டவாக்கத்துக்கும், நீதித்துறைக்கும் அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். அடுத்தவர்களிடம் மன்றாடி இவற்றைச் செய்ய முடியாது. நாங்கள் தனித்து இருந்தே நிறைவேற்று அதிகாரத்தை இல்லாது ஒழிப்போம் - என்றார்.

(ற-10)

## பௌத்த....

கருத்து வெளியிட்டுள்ளனர்.

தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த பின்னர் அவர் முன்னிலையில் அரச தலைவர் உரையாற்றினார். அவரது உரையில், சிங்கள மக்களையும், சிங்களத் தலைவர்களையும் கொலை செய்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள் வெளிநாடுகளில் சுகபோகமாக வாழ்கின்றார்கள். அவர்களைத் தண்டிக்கக் கோராத பன்னாட்டுச் சமூகம், அர்ப்பணிப்புடன் செயற்பட்டு போரை வெற்றி கொண்ட இராணுவத்தினரை மாத்திரம் தண்டிக்கக் கோருவது என்ன நியாயம்? சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றால், இராணுவத்தினரையும் விடுவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அரச தலைவரின் கருத்துத் தொடர்பில் வடக்கு மக்கள் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி வர்த்தக சங்கத் தலைவர் கே.வைகுந்தநாதன்:

"தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ரணில் உறுதிமொழி வழங்கியுள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால், போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். இராணுவத்தினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிவரும். அதனைக் குழப்புவதற்கு அவர் இவ்வாறு சொல்லியிருக்கலாம். மைத்திரியின் திட்டங்கள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. சிங்கள மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை மீட்டுக் கொள்வதற்காக அவர் இவ்வாறு கூறியிருக்கலாம். எது எப்படியிருப்பினும் அவரின் கருத்து கண்டிக்கப்படவேண்டியதே"என்றார்.

"அரசியல் கைதிகளை விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காக இராணுவத்தினரை விடுவிக்கக் கோருவது எந்த வகையிலும் நியாயம் இல்லை" என்று முகமாலையைச் சேர்ந்த செ.நாகச்செல்வன் தெரிவித்தார்.

இரணைதீவைச் சேர்ந்த அ.அந்தோணி, குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அதில் மாற்றுக் கருத்து இல்லை. சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளில் அநேகர் குற்றம் செய்யாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தால், இராணுவத்தையும் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கவேண்டும் என்ற கருத்து ஏற்புடையது அல்ல. இது ஜனநாயக விரோத செயல். தலைவர் பிரபாகரன் காலத்தில் பயமின்றி சந்தோசமாக இருந்தோம். இன்று நிலமை அப்படியில்லை. மைத்திரியின் கருத்தை ஏற்கவே முடியாது என்று அவர் தெரிவித்தார்.

"அரசியல் கைதிகளாக உள்ளவர்கள் என்ன குற்றத்துக்காக கைது செய்யப்பட்டார்கள் என்றே தெரியாது. ஆனால் இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார்கள். அவ்வாறான இராணுவத்தினர் தண்டிக்கப்பட வேண்டும். மைத்திரியின் கருத்து நாட்டில், தமிழ், சிங்களப் பிரிவினையை வலுப்படுத்துவதாகவே உள்ளது" என்று பெரியகுளத்தைச் சேர்ந்த ந.சாந்தீபன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் மாவட்ட இணைப்பாளர் ஆ.லீலாதேவி, போர்க் காலத்தில் புலிகள் சிங்கள மக்களை கொலை செய்யவில்லை. ஆனால் ராணுவம் தமிழ் மக்களைப் படுகொலை செய்தது. அது போர்க் குற்றம். அதற்காக இராணுவம் தண்டிக்கப்பட வேண்டும். புலிகள் தரப்பில் கட்டளையிட்ட தளபதிகள் உயிரிழந்துவிட்டார்கள். அப்படித் தண்டிக்க வேண்டும் என்றால் கருணா, கே.பி., பிள்ளையானைத்தான் தண்டிக்கவேண்டும் - என்றார்.

"தான் ஏற்படுத்த முனைந்த ஆட்சி மாற்றம் நடைபெறாமையால் சிங்கள இனவாதத்தைக் கக்கி சிங்கள மக்களிடத்தில் தனது செல்வாக்கை நிலைநிறுத்த மைத்திரி முயற்சிக்கின்றார்" என்று வவுனியா சிறிநகரைச் சேர்ந்த பா.கபிலன் தெரிவித்தார்.

வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த அ.பிரதீபன், "சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் மறுவாழ்வின் பின்னரே விடுவிக்கப்பட்டார்கள். அரசியல் கைதிகள் 16 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். ராணுவம் இதற்கு எல்லாம் தயாரா? நாட்டின் அரச தரப்பாகச் சொல்லப்படும் ராணுவம் மனித உரிமை மீறல்களிலும், போர்க்குற்றங்களிலும் ஈடுபடுவத நீதியானதா?" - என்றார்.

"மைத்திரியின் கருத்து தமிழ் மக்களுக்கு ஏமாற்றமாக உள்ளது. அவரது கருத்து எரிச்சலை ஊட்டுகின்றது. தமிழ் மக்களின் வாக்குகளால்தான் அவர் பதவிக்கு வந்தார் என்பதை மறந்து பேசியுள்ளார். சிங்களவர்களிடமிருந்து நாம் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாது என்பதைப் புலப்படுத்துகின்றது. ராணுவத்தை நாங்கள் மன்னிக்கத் தயார். இணைந்த வடகிழக்கில் சுயாட்சி வழங்க மைத்திரி தயாரா?" என்று கேள்வி எழுப்பினார் வவுனியா சுதந்திரபுரத்தைச் சேர்ந்த எம்.தர்சன்.

வவுனியா பூந்தோட்டம் எஸ்.ஓவியன், "மகிந்தவை தலைமை அமைச்சராக்குவதற்கு தமிழர்கள் தடையாக இருந்தமையால் அவர்கள் மீது வஞ்சம் தீர்ப்பதற்காகவே அவர் இந்த இனவாதப் பேச்சைப் பேசுகின்றார் என்றார்.

"சமாதானமாக வாழவேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு. அது நடக்குமா என்பது சந்தேகமாக இருக்கின்றது" என்று மன்னார் நானாட்டானைச் சேர்ந்த நேசன் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளையைச் சேர்ந்த விவசாயியான ஆறுமுகம் முருகுப்பிள்ளை தெரிவித்ததாவது:

"ராணுவம் போர்க் குற்றங்களைச் செய்துள்ளது. ராணுவம் தண்டிக்கப்படத் தேவையில்லை. தலைமைத்துவத்தில் இருந்தவர்களின் ஆணைப்படியே ராணுவத்தினர் குற்றங்களைப் புரிந்திருக்கின்றனர். கடந்த காலத்தில் அரச தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச, சரத் பொன்சேகா, பாதுகாப்பு பிரதியமைச்சராக இருந்த தற்போதையஅரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரே தண்டிக்கப்படவேண்டும்.

விடுதலைப்புலிகள் தமிழர்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் போராடிய அமைப்பு அவர்கள் மிலேச்சத்தனமானவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஒரு சிங்களப் பொதுமகனைக்கூட, விடுதலைப் புலிகள் கொலைசெய்யவில்லை. உதாரணமாக ஒதியமலையில் இராணுவம் சுற்றிவளைத்து, தமிழ்மக்கள் 32பேரை கொலைசெய்தது. அதற்கு பதிலடியாகவே கென்பாம், டொலர்பாம் பகுதி சிங்கள மக்களை புலிகள் தாக்கினார்கள். இராணுவமே கொலைகளைச்செய்யத் தூண்டியது. சிங்கள மக்களில் புலிகள் அமைப்புக்கு வேறு எந்த தனிப்பட்ட கோபமும் இல்லை. மைத்திரிபால இந்தக் கருத்தை இப்போது வெளியிட்டதுக் காரணம் பதவி ஆசைதான்" - என்றார்.

'மைத்திரியின் கருத்தை ஏற்க முடியாது. போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தை அவர் காப்பாற்ற முயல்கின்றார். விடுதலைப் புலிகள் மிலேச்சத்தனமானவர்கள் அல்ல. இராணுவம்தான் மிலேச்சத்தனமானது. ரணில் பதவியேற்றால், பதவி துறப்பேன் என்று சொன்ன மைத்திரி அதனை திசை திருப்பவே இப்படிக் கருத்துக்களைச் சொல்கின்றார்" என்று முல்லைத்தீவைச் சேர்ந்த வியாபாரியான மோகனராஜசிங்கம் விக்னா தெரிவித்தார்.

முல்லைத்தீவு முள்ளியவளை கிழக்கைச் சேர்ந்த விவசாயியான கார்த்திகேசு குணசிங்கம், ''தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டால், இராணுவத்தினரும் விடுவிக்கப்படவேண்டும். கடந்த காலங்களில் இருவரிடமும் தவறிருக்கின்றது. விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்பினர் அல்ல. அவர்கள் தமிழனத்துக்கு சிங்களவர்கள் செய்த கொடுமைக்கெதிராகப் போராடியவர்களாவர். கடந்த காலங்களில் சிங்கள அரசே பயங்கரவாதிகள் போன்று செயற்பட்டுள்ளார்கள். புலிகள் கடந்த காலங்களில் தாங்கள் கைது செய்த இராணுவச் சிப்பாயைக்கூட அரசிடம் கையளித்துள்ளனர். அவர்கள் மிலேச்சத்தனமானவர்கள் என்பதை ஏற்க முடியாது. அடைக்கலம் புகுந்த தமிழர்களைக் கொலைசெய்த, சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட ராணுவத்தினருக்கு மாத்திரம் கட்டாயமாகத் தண்டனை கிடைக்கவேண்டும். புலிகள் வெளிநாடுகளில் சுகபோகம் அனுபவிக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. புலிகளுடன் இருந்துஅவர்களுக்கேதுரோகம்செய்துவிட்டு சென்றவர்களே சுகபோகமாக வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள்" என்றார்.

"இராணுவத்தினர் தமிழர்களை அழித்தார்கள். அதையே வெற்றிகொண்டதாக கூறுகிறார்கள். நாம் பல இன்னல்களுக்கு மத்தியிலிருக்கும்போது, இராணுவம் பாதுகாப்பு வழங்கியிருக்கவேண்டும். ஆனால் குண்டு போட்டே அழித்தொழித்தார்கள். இராணுவத்தினர் தண்டிக்கப்படவேண்டும். இப்படியான கருத்துக்களை மைத்திரி கூறுவதன் நோக்கம் தன்னுடைய எதிர்கால அரசியலுக்காகவே. அவர் ஒரு சந்தர்ப்பவாதி. அரசியல் நாடகமாடுகிறார்" என்று முல்லைத்தீவு முள்ளியவளை மத்தியைச் சேர்ந்த விவசாயியான சின்னன் பாலசிங்கம் தெரிவித்தார்.

(5.6.110.222)

## போர்க்குற்றத்தை...

வியேற்ற பின்னர் ஆற்றிய உரை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்ததாவது:

"போர்க்குற்ற விசாரணையை முன்னெடுப்போம் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு வாக்குறுதி வழங்கியுள்ளது. முதலில் போர்க்குற்ற விசாரணையை நடத்த வேண்டும். போர்க் காலத்தில் தமிழர் பகுதிகளில் என்ன நடந்தது என்பதை அனைவரும் அறிய வேண்டும்.

குற்றத்தில் ஈடுபட்டவர்களை என்ன செய்வது என்பதைப் பற்றி பின்னர் சிந்திக்கலாம். அரசியல் ரீதியாக போராடியவர்களை சிறையில் அடைத்து விட்டு அவர்களையும் போர்க் குற்றத்தில் ஈடுப்பட்டவர்களையும் ஒன்றாக கருத்துவது ஏற்புடையதல்ல. வீதியில் நின்றவர்களை கடத்திப் படுகொலை செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அரசியல் கைதிகள் விடய்ம் வேறு. போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்கள் விடயம் வேறு. இவற்றை ஒன்றாக்கி அரசியல் செய்வதை அரச தலைவர் நிறுத்த வேண்டும் - என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்ததாவது:

"ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகப் பதவியேற்றுவிட்டார். அவருக்கு எப்படிச் 'செக்" வைக்கலாம் என்ற நோக்கில் இந்தக் கருத்துக்களை மைத்திரி வெளியிட்டுள்ளார். மைத்திரியின் அரசியல் இயலாமையைக் காண்பிக்கின்றது. அரசியல் கைதிகள் விடுவிப்பு, போர்க்குற்ற விசாரணை போன்ற விடயங்களைச் செய்வோம் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு ஏற்றுக் கொண்டது. அரசியல் கைதிகள் விடயத்தை முன்னிறுத்தி இராணுவத்தினருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் தண்டிக்க மாட்டேன் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்கள் ராணுவத்துக்குத் தூக்குத் தண்டனை வழங்குங்கள் என்று இப்போது கூறவில்லை. போர்க்குற்றம் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணை இடம் பெறவேண்டும். அதன் பின்னர் மன்னிப்பு வழங்குவது தொடர்பில் ஆராயலாம். ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தி அரசியலாக்குவது சரியல்ல. உலக நாடுகளில் அரசியல் கைதிகளாக இருந்தவர்களை மன்னிப்பில் விடுவித்த வரலாறுகள் உள்ளன. இலங்கையில் கூட மக்கள் விடுதலை முன்னணியினரை மன்னிப்பில் விடுதலை செய்தனர். அப்படியான நிலையில் எமது தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதில் மட்டும் ஏன் பாராமுகம் காட்டுகிறார் அரச தலைவர். குற்றமிழைத்த இராணுவம், பிக்குக்களை விடுதலை செய்வதற்காக அரசியல் கைதிகள் விடயத்தை கையில் எடுக்க வேண்டாம் என்றார். வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்ததாவது:

"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தண்டனை வழங்கப்பட்ட கைதிகளை மாத்திரமே மன்னிப்பில் விடுவிக்க முடியும். ஆனால், வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்ற அரசியல் கைதிகளை, அந்த வழக்குகளை சட்டமா அதிபர் மீளப் பெறுவதன் ஊடாகச் செய்ய முடியும். தமிழ் மக்கள் ஆதரவு வழங்கி ஆட்சிக்கு வந்துள்ள ரணில் தரப்பு அதனைச் செய்ய முடியும்'' -என்றார்.

# பிளாஸ் ரைடர்ஸ் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 18

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பிளாஸ் ரைடர்ஸ் அணி வெற்றிபெற்றது.

கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பிளாஸ் ரைடர்ஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் ரைகர்ஸ் அணி மோதியது. முதல் பாதியில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது ரைடர்ஸ்.


இரண்டாவது பாதியில் ரைடர்ஸின் சார்பில் மேலும் இரண்டு கோல்களும், ரைகர்ஸின் சார்பில் ஒரு கோலும் பதிவாகின. முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரைடர்ஸ். (ம-23)

# லூசியன் புஸ்பராஜ் உலகச் சம்பியன்!


கொழும்பு, டிசெ. 18

இலங்கையின் ஆணழக வீரர் லூசியன் புஸ்பராஜ் உலகச் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். 10ஆவது உலக ஆணழகன் மற்றும் உடலமைப்புப் போட்டிகள் தாய்லாந்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தப் போட்டியில் ஆடவருக்கான 100 கிலோ கிராம் எடைப் பிரிவிலேயே தமிழ் வீரரான லூசியன் புஸ்பராஜ் உலகச் சம்பியனானார். (ம)





# உலக பூப்பந்தாட்டம் பி.வி.சிந்து சம்பியன்




உலக பூப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் கிண்ணம் வென்றார் பி.வி. சிந்து. உலக சம்பியன்ஷிப் வென்ற முதலாவது இந்தியப் பெண் என்ற சாதனையையும் அவர் நிலைநாட்டினார்.

உலக பூப்பந்தாட்டத் தொடர் சீனாவில் நடைபெற்று வந்தது. இதன் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்திய வீராங்கனை சிந்துவும் ஜப்பான் வீராங்கனை ஒகுஹராவும் மோதினார்கள். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் சிந்து. அவர் தனது ஆதிக்கத்தை இரண்டாவது செற்றிலும் வலுவாக நிலைநாட்டினார். இரண்டாவது செற் 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சிந்துவிடம் சென்றது. முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

கடந்த வருடம் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் இறுதியாட்டத்திலும் இந்த இருவருமே மோதினார்கள். சிந்து தோல்வியடைந்தார். இந்த வருடம் அந்தத் தோல்விக்குப் பதிலடி கொடுத்து கிண்ணம் வென்றார் சிந்து. (ம)

# வென்றது ஐயனார்!

யாழ்ப்பாணம், டிசெ. 18

கலாநிதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஐயனார் அணி வெற்றிபெற்றது.

காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கலைத்தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் ஐயனார் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



வடமாகாணத்தில் உள்ள கராத்தே நடுவர்களுக்கு இலங்கை கராத்தே சம்மேளனத்தின் அடையாள அட்டை நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. கிறீன்பீல்ட் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கராத்தே சம்மேளனத் தலைவர் எஸ். விஜயராஜ் விருந்தினராகக் கலந்துகொண்டார். (ம-23)

# கொலின்ஸ் எலைட் போராடி வென்றது

யாழ்ப்பாணம், டிசெ. 18

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் எலைட் அணி வெற்றிபெற்றது.

கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொலின்ஸ் ஜக்குவார் அணியை எதிர்த்து கொலின்ஸ் எலைட் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது கொலின்ஸ் எலைட். (ம-23)




# கரவெட்டி ஞானம்ஸ் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், டிசெ. 18

இலங்கை மென்பந்து கிரிக்கெட் சங்கம் நடத்திய வடமாகாண ரீதியிலான துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற் இறுதியாட்டத்தில் இலங்கை இராணுவப்படை அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட் டுக் கழக அணி 4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெனி 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இராணுவப் படை அணியின் சார்பில் பெரனான்டோ 2 இலக்குகளை வீழ்த்தினார்.

45 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இராணுவ அணி 4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 12 ஓட்டங்களை மட்டும் பெற்றது. (ம-23)





## தீவுகள் வெற்றி

பங்களாதேஸுக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 19 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அணித் தலைவர் சகிப் அல் ஹசன் 61 ஓட்டங்களைப் பெற்றார். அவரை விட அரிபுல் ஹக்கியூ 17 ஓட்டங்களையும், மகமதுல்லா 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொட்ரேல் 4 இலக்குகளையும், பவல் 2 இலக்குகளையும், தோமஸ், பிரீத்வைட், அலன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 105 பந்துப்பரிமாற்றங்களிலேயே வெறும் இரு இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் வெற்றிபெற்றது. சாய் ஹோப் அதிரடியாக விளையாடி 23 பந்துகளில் 55 ஓட்டங்களைக் குவித்தார். பவுல் 28 ஓட்டங்களையும், பூரன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். சபிடின், மகமதுல்லா இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது ஆட்டம் டாக்காவில் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. (ம)

### லாதம் ஆட்டமிழக்காமல் 264 ஓட்டங்கள்

# இலங்கை மீதான பிடியை மேலும் இறுக்கியது நியூசி.

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியை நோக்கி நடைபோட ஆரம்பித்துள்ளது. சில வேளைகளில் இன்னிங்ஸால் இலங்கை அணி தோல்வியடையவும் அதிக வாய்ப்புகள் உள்ளன என்று கருதப்படுகிறது.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 282 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மத்தியூஸ் 83 ஓட்டங்களையும், டிக்வெல்ல 80 ஓட்டங்களையும், கருணாரத்ன 79 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் சவுத்தி 6 இலக்குகளையும், வாக்நெர் 2 இலக்குகளையும், போல்ட், கிராண்ட்ஹோம் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. லாதம் 121 ஓட்டங்களுடனும், ரெய்லர் 50 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் ஆட்டமிழந்தார் ரெய்லர். நங்கூரம் பாய்ச்சப்பட்டதைப் போன்று நீடித்து நிலைத்தார் லாதம். மறுமுனையில் நிக்கொல்ஸ் 50, கிராண்ட்ஹோம் 49 என்று லாதத்துக்குப் பக்கபலமான நின்றனர். இரட்டைச் சதத்தைக் கடந்தார் லாதம். மறுமுனையால் இலக்குகள் சரிய 578 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து அணி. லாதம் 264 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் குமார 4 இலக்குகளையும், பெரேரா, தனஞ்சய டி சில்வா இருவரும் தலா 2 இலக்குகளையும், லக்மல் ஓர் இலக்கையும் பெற்றனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 296 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நெருக்கடியில் களமிறங்கிய இலங்கை அணி நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 20 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ம)

# சறுக்கியது இந்திய முன்வரிசை சாதிப்பார்களா இளம் வீரர்கள்?

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணிக்கு 287 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்திய அணி நேற்றைய நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இந்திய அணியின் வெற்றியும் தோல்வியும் இளம் வீரர்களான பன்ட், விஹாரி ஆகியோரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் உலகின் அதிவேக ஆடுகளமான பேர்த் ஆடுகளத்தில் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 326 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹரிஸ் 70 ஓட்டங்களையும், ஹெட் 58 ஓட்டங்களையும், பின்ஞ் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இசாந் சர்மா 4 இலக்குகளையும், பும்ரா, உமேஸ் யாதவ், விகாரி மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 283 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அணித் தலைவர் கோக்லி 123 ஓட்டங்களையும், ரகானே 51 ஓட்டங்களையும், பன்ட் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லயன் 5 இலக்குகளையும், ஸ்ராக், ஹசில்வூட் இருவரும் தலா 2 இலக்குகளையும், கம்மின்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலியா நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கவாயா 41 ஓட்டங்களுடனும், பெய்ன் 8 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். இந்த இணை சிறிதுநேரம் தாக்குப்பிடித்தது. அணி 192 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது வீழ்ந்தார் பெய்ன். 72 ஓட்டங்களுடன் கவாயா ஆட்டமிழந்தார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா சடுதியாகச் சரிந்தது. முடிவில் 243 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலிய அணி.

பந்துவீச்சில் சமி 6 இலக்குகளையும், பும்ரா 3 இலக்குகளையும், இசாந் சர்மா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இந்திய அணிக்கு 287 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணியின் ஆரம்ப இணை மீண்டும் தடுமாறியது. ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார் ராகுல். புஜாரா 4 ஓட்டங்களுடன் வெளியேறினார். விஜய் 20, கோக்லி 17, ரகானே 30 என்று வீழ்ந்தனர். நாள் முடிவில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பன்ட் 9 ஓட்டங்களுடனும் விஹாரி 24 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



இலங்கை அணியின்

# துடுப்பாட்ட பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார் லூயிஸ்!



இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக லூயிஸ் நியமிக்கப்பட்டார். இங்கிலாந்தைச் சேர்ந்த லூயிஸ் மிகப் பிரபலமான பயிற்சியாளர்களில் ஒருவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராகச் செயற்பட்டு வந்த திலன் சமரவீர அண்மையில் அந்தப் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த இடத்துக்கு லூயிஸ் நியமிக்க ப்பட்டார். இங்கிலாந்துக் கழகமான டார்ஹாமின் பயிற்சியாளராக நீண்ட காலம் பணியாற்றிய அனுபவம் லூயிஸுக்கு உண்டு.

DMI Jaffna | A/L 2021 கணக்கீடு D.Sam | ஜனவரி 5 காலை 09

ஷாம்சனின் சிங்களம் WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் அலுவலர்கள் பட்டதாரிகள், உயர்கல்வி மாணவர்கள் மாணவர்கள், இளைஞர் யுவதிகள்
சனி, ஞாயிறு பிரிவுகள் - 22. 12. 2018
பிரிவு1: 04-05 பிரிவு2: 05-06
ஞாயிறு மட்டும் பிரிவுகள் - 23. 12. 2018
மதியம் : 12.00 - 01.30
வாரநாள் பிரிவுகள் (திங்கள் மற்றும் புதன்கிழமைகளில்) பிரிவுகள் 02-03, 03-04, 04-05
20 ஆண்டுகளுக்கு மேலான மொழியாய்வின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சிநெறியில் இணைவதன் மூலம் எவராலுமே மிக இலகுவாக மொழிகளைக்கற்று தாய்மொழிபோல பேசமுடியும்!
SAAMSON 279, வெலிங்டன் சந்தி, யாழ்நகர். 077 621 4567 021 222 4282

இறக்குமதி செய்யப்பட்ட லெக்கின்ஸ்கள் (Leggings)
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான லெக்கின்ஸ்கள் ( Leggings) மற்றும் ஜிம் வெஸ்ட் (Gym vest) மொத்த விலைக்கு யாழ்ப்பாணத்திலே கிடைக்கும்.
▼ 40 கலர்கள்
▼ சகல அளவுகளிலும் (XL, XXL, XXXL)
Sinna Imports
ஒலிவ்வியா டெக்ஸ்
674, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (வேம்படி சிக்னலுக்கு அருகில்)
077 465 5565, 070 510 0502, 021 433 1638
(CS/21881)(11.17)

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொழினுட்பப் பிரிவு ஆரம்பித்ததிலிருந்து தொடர்ச்சியாக தேசிய முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்
தொழில் நுட்பப் பிரிவு A/L 2021 ஆரம்பம்
பொறியியல் தொழினுட்பவியல்
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி
20.12.2018 வியாழக்கிழமை காலை 8.30
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புக்கு : 077 248 7774
தரம், தனித்துவம், உயர்ந்தபெறுபேறு இதுவே எமது இலக்கு

Techno World
(வெலிங்டன் சந்தி பெருமாள் கோவில் வீதி)
A/L தொழில்நுட்ப பிரிவு - 2021
புதிய பிரிவு ஆரம்பம் : 22.12.2018 சனிக்கிழமை
காலை : 9.00 மணி (ORIENTATION PROGRAMME) அனுமதி இலவசம்
A/L தொழில்நுட்ப பிரிவுக்கென ஒரேஒரு தரமான கல்வி நிறுவனம் (பட்டதாரி ஆசிரியர்கள் மாத்திரம்)
சாதனைகளின் தொடர்ச்சி
A/L 2017 65 மாணவர்களை தேசியரீதியாக பல்கலைக்கழகம் (கேசனா - 01, மாவட்டநிலை (B.Tec), கோகுலன் - 03 (E.Tec)
A/L 2018 மாணவர்களை சிறந்தமுறையில் பரீட்சைக்கு தோற்றுவித்தமை
A/L 2019 பாடங்கள் முடிவுற்று, இனிவரும் 8 மாதங்களும் வினாத்தாள் வகுப்பு (அனுமதி இலவசம்)
A/L 2020 அனைத்து பாடசாலைகளிலும் முதலிடம்
077 017 5346, 077 170 3549

உலகக்கிண்ணக் ஹொக்கியில்

# பெல்ஜியம் சம்பியன்!



உலகக்கிண்ண ஹொக்கித் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நெதர்லாந்தை வீழ்த்தி கிண்ணம் வென்றது பெல்ஜியம் அணி.

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் இந்தத் தொடர் நடைபெற்றது. இரண்டு அணிகளும் ஆரம்பம் முதல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு முறையில் உலகச் சம்பியனைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் அணி வெற்றிபெற்று சம்பியனானது. முன்னதாக நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும் இங்கிலாந்தும் மோதின. 8:1 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின், நேரில் சென்று இறுதியாட்டத்தைப் பார்வையிட்டார். (ம)



*ஆசிய பளுதூக்கும் தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்து வப்படுத்திக் கலந்துகொண்ட குழுவுக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு அரச தலைவரின் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. (ம)*

## மட்ரிட் வெற்றி

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். மட்ரிட்டை எதிர்த்து ரயோ வலிகானோ மோதியது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் அந்த அணியின் நட்சத்திர வீரர் பென்சிமா. 1:0 என்ற கோல் கணக்கில் மட்ரிட்டின் ஏக ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் மட்ரிட்டின் ஆதிக்கம் நீண்டு நிலைபெற்றது. பதிலடி கொடுப்பதற்கு வலிகானோ பல முறை முயன்ற போதிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது மட்ரிட். (ம)

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 02 1943



இறப்பு 17 12 2018

### திருமதி நாகரத்தினம் இரத்தினேஸ்வரி (லண்டன்)

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானில் வசித்தவரும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய நாகரத்தினம் இரத்தினேஸ்வரி நேற்று (17.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் காசுவதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்பு மனைவியும் சிறிரங்கேஸ்வரன் (சிறி - இந்தியா), தனேஸ்வரி (ஈஸ்வரி - லண்டன்), கேதீஸ்வரி (பேபி - லண்டன்), சதீஸ்குமார் (குமார் லண்டன்), காலஞ்சென்ற லோகேஸ்வரன் (ராசன்), சத்தியேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நவலட்சுமி (கொழும்பு), தயாளினி (இந்தியா), ஸ்ரீகணநாதன் (லண்டன்), சுரேஸ் (லண்டன்), எழிலரசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரன், வில்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகலிங்கம், கலைவாணி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் நாகம்மாவின் அண்ணியும் நவரூபன் (லண்டன்), பானுஜா, பதுஜா (இந்தியா), ஸ்ரெப்பான், சந்துரு, சந்துவி, சங்கவி, சந்துஜன், சாகசன், ஹரீஸ், அருண், ஆரணி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆரன், ஆசன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறி (மகன்) 0091 -9790850925,
குமார் (மகன்) 0044 - 7535666885,
வாசன் (பேரன்) 0044 - 7983 725157,
சந்துரு (பேரன்) 0044 - 7901000981

தகவல்:
சிறி (இந்தியா).

அதிபர் சேவை தரம் 3
விசேட வகுப்பு
ஆரம்பம் :
புதன் (19/12)
புதன் (19/12), வெள்ளி (21/12)
சனி (22/12), ஞாயிறு (23/12)
காலை 9.00 → 3.00 மணிவரை
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.